ஜனவரி 29 - பெப்ரவரி 04 , 2012 January 29 -February 04, 2012 பக்கங்கள் 28 25.00

# சுடர் ஒளி

THE SUDAROLI
வார மலர்



## சந்தைக்கு வந்திருக்கும் புலி வியாபாரம்




'டபிள் மீனிங்'



கிளாலிப் பயணம்



பாலகருக்கு பாலியல் கல்வி !

# அத்தியாவசிய கொழுப்பு அமிலங்களின் முக்கியத்துவம்



வாகனம் நேர்த்தியாக ஓடுவதற்கு எரிபொருளும் ஒயில்களும் தேவைப்படுவதைப் போலவே, எங்கள் மூளை சிறப்பாகச் செயற்படுவதற்கும் சில விசேட ஊட்டச்சத்துக்கள் அவசியமானவை. குளுக்கோஸ், அத்தியாவசிய கொழுப்பு அமிலங்கள், விட்டமின்கள், கனியுப்புகள், அமினோ அமிலங்கள் போன்ற ஏனைய அத்தியாவசிய இரசாயனங்கள் என்பனவே அவையாகும்.

உங்கள் குருதியிலுள்ள குளுக்கோஸில் கிட்டத்தட்ட அரைவாசியை மூளைக் கலங்களே நுகர்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா? மூளையானது உடலின் மொத்த நிறையில் சுமார் 1/40 பங்காக மாத்திரமே இருந்தபோதிலும், அதனால் நுகரப்பட்டு எஞ்சும் குளுக்கோஸையே உடலின் ஏனைய கலங்கள் பயன்படுத்துகின்றன. சிறியதாக இருந்தபோதிலும், உயிரின் சக்தி வாய்ந்த "எஞ்ஜின்" என்று கருதப்படும் மூளை எவ்வளவு முக்கியமானதும் சிக்கலானதும் ஆகும் என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது.

இரும்பு, ஸிங்க், செப்பு, அயடீன் போன்ற கனியுப்புகள் மூளையின் அபிவிருத்தியிலும் செயற்பாட்டிலும் முக்கிய பங்கெடுக்கின்றன என்பதும் விட்டமின் E மற்றும் C போன்ற ஒட்சியேற்றத் தடுப்பு விட்டமின்கள் மூளை தீய கழிவுக் கூறுகளினால் சேதமடைவதைத் தடுக்கின்றன என்பதும் B குடும்பந்தைச் சேர்ந்த விட்டமின்கள் நியூரோட்ரான்ஸ்மிட்டர்களின் முன்னோடிகளாகச் செயற்படுகின்றன என்பதும் நன்கு அறியப்பட்டுள்ள உண்மைகளாகும்.

புதிய இணைப்புக்கள் உருவாகுதல் அல்லது வெளிக்காவு நரம்பு முளையில் (Axon) கொழுப்பு உறையான myelin சேர்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு, சரியான புரதங்களையும் கொழுப்புக்களையும் உங்கள் மூளை தயாரிக்க வேண்டும். எனினும், உடலினால் தானாகவே தயாரிக்க முடியாத பதார்த்தங்களின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு சில வளர்ச்சி ஏதுக்களும் ஊக்கிகளும் உண்டு புதிய மூளைப் புரதங்களையும் கொழுப்புகளையும் உற்பத்தி செய்வதற்கு அவசிய-மான அமினோ அமிலங்களையும் கொழுப்பு அமிலங்களையும் புரதச்சத்து மற்றும் கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகளின் மூலம் வழங்குவது உங்கள் கடமையாகும். இவை சரியான சமநிலையில் வழங்கப்படாவிட்டால், உங்கள் மூளை உரிய முறையில் செயற்படாது. ஊட்டச்சத்துக்கள் அளவுக்குக் குறைவாக (பற்றாக்குறை) வழங்கப்பட்டாலும் அளவுக்கு அதிகமாக (மிதமிஞ்சிய அளவு) வழங்கப்பட்டாலும் நரம்புத் தொகுதி பாதிக்கப்படும். எனவே, உணவு முறை மிகவும் சரியாக இருப்பது முக்கியம்.

எது எவ்வாறிருப்பினும், மூளை அபிவிருத்தியில் கொழுப்பு அமிலங்களின் முக்கியமான பங்களிப்பை நாம் ஒருபோதும் அலட்சியப்படுத்த முடியாது. சமூகக் கருத்துகளுக்கு அடிபணியாமல், தகவல்களை ஆராய்ந்து மதிநுட்பமாகத் தீர்மானங்களை எடுக்க வேண்டும். உதாரணமாக, கொழுப்புக்கள் பற்றிய ஒரு பொதுவான அச்சம் சமூகத்தில் நிலவுகின்றது. இருதய நோய்கள், மிதமிஞ்சிய உடற் பருமன், நீரிழிவு போன்றவற்றிற்கு கொழுப்புக்களே காரணம் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், எல்லாக் கொழுப்புக்களுமே தீங்கானவை அல்ல என்பதை அவர்கள் அறியாதிருக்கின்றனர். உண்மை என்னவெனின், கொழுப்புச் சத்துக் குறைந்த உணவுகளை உட்கொள்பவர்கள், குறிப்பாக இளவயதினர், அத்தியாவசிய கொழுப்பு அமிலங்களையும் சில ஓரளவு அத்தியாவசிய கொழுப்பு அமிலங்களையும் போதிய அளவில் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். இதனால் அவர்களின் மனநிலையும் சுறுசுறுப்புத் தன்மையும் பாதிக்கப்படலாம் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அப்படியானால், நல்ல கொழுப்புகள் எவை? தீய கொழுப்புகள் எவை? என்ற கேள்வி எழுகின்றது. உணவாக உட்கொள்ளப்படும் கொழுப்புகளை இரண்டு பிரதான வகைகளாகப் பிரிக்கலாம். செறிவான கொழுப்புகள், செறிவற்ற கொழுப்புகள் என்பனவே அவையாகும். செறிவான கொழுப்புக்களை அதிகமாக உட்கொண்டால் பல நோய்கள் ஏற்படக்கூடும். ஆகவே, அவை "தீய" கொழுப்புக்கள் எனப்படுகின்றன. செறிவற்ற கொழுப்பு அமிலங்கள் உடலுக்கு நலமான கொழுப்பு அமிலங்களாக இனங்காணப்பட்டுள்ளன. அவற்றில் இரு வகைகள் உள்ளன. ஒற்றைச் செறியவற்ற கொழுப்பு அமிலங்கள் (Monounsaturated Fatty Acids), பல்தொகுதிச் செறியவற்ற கொழுப்பு அமிலங்கள் (olyunsaturated Fatty Acids) என்பனவே அவையாகும்.

வாழ்க்கையின் ஆரம்பப் பருவத்தில் அத்தியாவசிய கொழுப்பு அமிலங்களின் உருவாக்கத்திற்கான சேர்க்கையெறிகைத் தொழிற்பாடு மட்டுப்படுத்திய அளவி-லேயே இடம்பெறுகின்றது. அதாவது அல்பா லினோலெ-னிக் (ALA) மற்றும் லினோலெனிக் (LA) என்பன கூடுதல் செயற்பாடு கொண்ட DHA, EPA, ARA போன்ற நீண்ட சங்கிலித் தொடர் கொழுப்பு அமிலங்களாக மாற்றப்படுவது குறைவு. உதாரணமாக, அல்பா லினோலெனிக் அமிலம் DHA அமிலமாக மாற்றப்படும் சேர்க்கையெறிகை சிறு பிள்ளைகளில் 0.2%க்கும் குறைவாகவே இடம்பெறுகின்றது.

ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள் இல்லாத உணவினால் கற்கும் திறன், உற்சாகம், இயக்கம் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுமெனவும் நுதல் மேற்பட்டையில் (Frontal Cortex) dopamine மற்றும் serotonin நியூரோட்ரான்ஸ்மிட்டர்களைப் பயன்படுத்தும் பாதிக்கப்படலாமெனவும் விலங்குகளில் நடத்தப்பட்ட ஆய்வுகள் காட்டியுள்ளன. ஒமேகா-6 கொழுப்பு அமிலங்களும் மூளையின் நேர்த்தியான செயற்பாட்டிற்கு முக்கியமானவை. ஏனெனில், அவை நியூரோட்ரான்ஸ்மிட்டர்களின் விடுவிப்புக்கு உதவுவதுடன் குளுக்கோஸை ப யன்படுத்த நரம்புக் கலங்களுக்கு உள்ள ஆற்றலின் மீதும் செல்வாக்கைச் செலுத்துகின்றன.

மூளையின் பல்தொகுதிச் செறிவற்ற கொழுப்பு அமில அமைப்பை எடுத்துக்கொண்டால், மற்றைய எல்லா கொழுப்பு அமிலங்களையும்விட DHA கொழுப்பு அமிலமே ஆகக் கூடுதலான, அதாவது 40% செல்வாக்கை செலுத்துகின்றது. மூளை வளர்ச்சி அடையும் காலம் முழுவதும் DHA மூளையிலும் விழித்திரையிலும்

> **"கொழுப்புக்கள் பற்றிய ஒரு பொதுவான அச்சம் சமூகத்தில் நிலவுகின்றது. இருதய நோய்கள், மிதமிஞ்சிய உடற் பருமன், நீரிழிவு போன்றவற்றிற்கு கொழுப்புக்களே காரணம் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், எல்லாக் கொழுப்புக்களுமே தீங்கானவை அல்ல என்பதை அவர்கள் அறியாதிருக்கின்றனர்."**

சேகரிக்கப்படுகின்றது. மூளையின் பொஸ்போலிப்பிட் மென்சவ்வைக் கட்டியெழுப்புவதற்கு DHA பிரதானமாகத் தேவைப்படுகின்றது. மென்சவ்வின் நீர்மத் தன்மையைப் பேணுவதற்கும் நரம்புக் கட்டமைப்பில் புரதம் கூட்டிணைக்கப்படுவதற்கும் நியூரோட்ரான்ஸ்மிஷன் போன்ற நரம்புச் செயற்பாடுகளுக்கும் அது அதிமுக்கியமானது. தீய கழிவுக் கூறுகளை செயலற்றதாக்குவதில் பங்குபற்றுவதன் மூலம் மென்சவ்வினுள் ஒட்சியேற்றத் தடுப்புச் செயற்பாட்டிற்கும் DHA உதவுகின்றது. ஆகவே, ஒமேகா-3 கொழுப்பு அமிலங்களும் DHA கொழுப்பு அமிலமும் மூளையில் கலங்கள் மற்றும் கலத் தொகுதிகள் தொடர்பான அழற்சி ஏற்படுவதைக் குறைக்கின்றன. மூளைக் கலங்களின் மென்சவ்வுகள் மென்மையாகவும் நெகிழ்வாகவும் இருப்பது இதனால் உறுதி செய்யப்படுகின்றது.

நரம்புத் தொடர்பு (Synaptogenesis) செயற்பாடுகளை DHA ஊக்குவிக்கின்றது. நரம்புக்கல இணைப்புகளின் மாற்றங்களிலேயே கற்கும் திறனும் ஞாபகசக்தியும் தங்கியுள்ளன. நீண்டகால இயல்திறனும் நரம்புக் கலங்களுக்கு இடையிலான தொடர்புகளுமே இதற்கு வழிவகுக்கின்றன என்று கருதப்படுகிறது. ஆக்கத் திறனை வளர்ப்பதற்கு நரம்பு இணைப்புகள் முக்கியமானவை. ஆக்கத் திறமையுள்ள ஒருவருக்கு அவசியமான அறிவும் திறமையும் மூளைக்குள் இணைக்கப்பட வேண்டும்.

பிள்ளைகளின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வதே DHA கொழுப்பு அமிலத்தின் அதிமுக்கிய பணியாகும். சிசுக்களின் உளரீதியான செயற்பாடுகளையும் கண்பார்வையையும் முன்னேற்றுவதற்கு உதவுவதாகக் கருதப்படும் மத்திய நரம்புத் தொகுதியின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் அது முக்கிய பங்கினை வகிக்கின்றது. சிறுவர்களின் கற்கும் திறன் கல்விச் சாதனைகள் என்பவற்றை முன்னேற்றுவதற்கும் DHA உதவக்கூடும்.

ஆயினும், DHA பதார்த்தத்தை உடலினால் மாத்திரம் உற்பத்திசெய்ய முடியாது என்பதால், வளர்ந்தவர்கள்கூட அதனை உணவினூடாகப் பெறுவதன் மூலம் நன்மை அடையலாமென பரவலாக நம்பப்படுகிறது.

DHA பற்றாக்குறையினால் அறிவுக்கூர்மை வீழ்ச்சியடைகின்றது. ஆகவே, மூளை அபிவிருத்தி அடைவதற்கு, குறிப்பாக 1 வயது முதல் 6 வயது வரையிலான வளரும் பருவத்தில் போதிய அளவு DHA தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும். வாழ்நாள் முழுவதும் சரியான அளவில் DHA உட்கொள்வது மூளையைச் சிறந்த நிலையில் வைத்திருக்க உதவும். ஒரு பிள்ளைக்கு ஆறு வயதாகும்போது மூளை வளர்ச்சியில் சுமார் 90% பூர்த்தியடைந்துவிடுகிறது. அதிலும் 1 வயது முதல் 3 வயது வரையிலான காலப்பகுதியே மூளை விருத்தியில் DHA முக்கிய பங்கினை வகிக்கக்கூடிய காலம் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

அப்படியானால், நாம் DHA ஊட்டச்சத்தை எங்கிருந்து பெறுவது? கொழுப்பு அதிகமாகவுள்ள Salmon, Trout மற்றும் Sardine போன்ற மீன்களில் DHA நிறைந்து காணப்படுகிறது. மீனெண்ணெய்கள் மூலமும் DHA சத்தினைப் பெறமுடியும். எனினும், மீன்களை உண்பதன் மூலம் இச் சத்தைப் பெறுவதே சிறந்தது. DHA மற்றும் ஏனைய அத்தியாவசிய கொழுப்பு அமிலங்களைப் பெறுவதற்கு சத்தூட்டப்பட்ட பால் ஓர் சிறந்த உணவாகும். சிறு குழந்தைகள் மற்றெந்த உணவையும்விட பாலையே அதிகமாக உட்கொள்வதால், இது சிறந்த வழியும் ஆகும். பச்சை இலை மரக்கறிகள் DHA சத்தின் முன்னோடியான அல்பா லினோலெனிக் அமிலத்தை (ALA) கொண்டுள்ளதால், அவற்றின் மூலமும் DHA சத்தைப் பெறலாம்.

DHA என்பது நிபந்தனைக்குட்பட்ட அத்தியாவசிய கொழுப்பு அமிலமாகக் கருதப்படுகின்றது. ஆனால், ALA ஓர் அத்தியாவசிய கொழுப்பு அமிலமாகும். ஏனெனில், அதனை உடலினால் தன்னியல்பாகத் தயாரிக்க முடியாது. ALA குறைபாட்டினால் மூளை அபிவிருத்தியின் திசை மாற்றம், மூளைக் கல மென்சவ்வுகளின் உள்ளமைப்புச் சீர்குலைவு, உப கலத் துணிக்கைகளான Myelin, Mitochondria, நரம்பு நுனிகள் என்பவற்றின் பாதிப்பு ஆகிய விளைவுகள் ஏற்படக்கூடும்.


ஆதாரங்கள்:
Marc ES., The science behind dietary Omega-3 fatty acids, Canadian Medical Association Journal, 2008; 178(2).
Bourre JM., Effects of nutrients (in food) on the structure and function of the nervous system: update on dietary requirements for brain. Part 2: macronutrients, Journal of nutrition health aging. 2006; 10(5):386-99.
Kidd PM., Omega-3, DHA and EPA for Cognition, Behavior and Mood: Clinical Findings and Structural Functional Synergies with Cell Membrane Phospholipids, Alternate Medicine review. 2007: 12(3)
Ricardo U, Dennis RH, Patricio P, David GB, Eileen EB, Essential Fatty Acids in Visual and Brain Development. Lipids. 2001: 36(9)


எந்த கொழுப்பு அமிலம் மூளை விருத்திக்கு அதிமுக்கியமானது?

A. கல்சியம்   B. DHA   C. விட்டமின் B

மேலுள்ள கட்டுரையை வாசித்த பின், கேள்விக்குச் சரியான பதிலை 0773888666 என்ற இலக்கத்திற்கு SMS செய்து, பெறுமதிமிக்க பரிசுகளை வெல்லுங்கள்.

SMS வடிவமைப்பு: பத்திரிகையின் பெயர் (இடைவெளி) உங்கள் பெயர் (இடைவெளி) உங்கள் அடையாள அட்டை இல. (இடைவெளி) உங்கள் விடை. உதாரணம்: Sudaroli Gowri 830710244V B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைக்கு வந்திருக்கும் புலி வியாபாரம்



> வடக்கில் உள்ள தமிழ் இளைஞர்களும் சிங்கள இளைஞர்களும் இணைந்து ஒரு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்க முயற்சிக்கின்றதிலிருந்து நாட்டைப் பாதுகாக்க இராணுவத்தையும் இராணுவ முகாங்களையும் பலப்படுத்தியாக வேண்டும் என்றொரு தோற்றப்பாடு ஏற்படும் வகையில் ஒரு பரப்புரைப் போர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சந்திரசேகர ஆசாத்

கலகத்தில் பிறப்பது தான் நீதி கலங்காதே மதி மயங்காதே இப்படி ஒரு தமிழ் சினிமாப்பாடல் உண்டு. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும் என ஒரு தமிழ்ப் பழமொழியும் உண்டு. ஜப்பானிய ஆக்கிரமிப்பிலிருந்தும் அமெரிக்க பிரித்தானிய முகவராகச் செயற்பட்ட கொமின்டாங் தலைவர் சியாங்கைசேக்கின் கொடிய ஆட்சியிலிருந்தும் 70 கோடி மக்களை விடுவித்து விடுதலை பெற்ற ஒரு புதிய சீனாவை உருவாக்கிய தலைவர் மாஓசேதுங் அவர்கள் சீனாவில் கலாசாரப் புரட்சி மேலெழுந்த போது கிளர்ச்சி செய்வது நியாயமானது என அறைகூவல் விடுத்தார். எப்படிப் பார்த்தாலும் உறைந்து கிடக்கும் மேலாதிக்கங்கள் இயல்பாகவே கிளர்ச்சிகளை உருவாக்கும்போது அவை நியாயபூர்வமாக இருக்கும் என்பது உலக வரலாற்று அனுபவமாகும். ஆனால் தான் கிளர்ச்சிகள் மாற்றத்தின் திறவுகோல்களாக, அநியாயங்களைத் தகர்க்கும் ஆயுதமாக எழுச்சி பெறுகின்றன.

ஆனால் அதிகாரப் பீடத்தினர் தங்கள் கொடுங்கரங்களை மாயைகளை உருவாக்கி அதற்குள் மறைத்து வைப்பவர்கள். அவர்கள் என்றுமே கிளர்ச்சிகளை விரும்புவதில்லை. அவை அமைதியைக் குலைப்பவையாகவும் சமாதானச் சூழலைச் சீரழிப்பவையாகவும் பரப்புரை செய்கின்றனர். எங்கோ இருக்கும் தீய சக்திகள் கிளர்ச்சியாளர்களை ஆட்டிப்படைப்பதாக ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்த முனைகின்றனர். கிளர்ச்சிகளை முளையிலேயே கிள்ளி விட பலவித தந்திரோபாயங்களை மேற்கொள்கின்றனர். அவை போதிய பலன் தராதபட்சத்தில் கொலை வெறியாட்டம் நடத்தி துப்பாக்கி முனையில் கிளர்ச்சிகளை ஒடுக்க முனைகின்றனர். தமது அதிகாரங்களையும் அநியாயங்களையும் நிலை நிறுத்த தேசம் பூராகவும் இரத்த ஆறு ஓட வைக்கவும் அவர்கள் தயங்குவதில்லை.

அண்மையில் டுனிசியா, எகிப்து, லிபியா போன்ற நாடுகளில் இடம்பெற்ற மக்கள் எழுச்சிகளும் அவை பெற்ற வெற்றிகளும் இப்போது சிரியா, ஜேர்மன் போன்ற நாடுகளில் இடம்பெறும் மக்கள் போராட்டங்களும் உலகம் முழுவதுமுள்ள அடக்கு முறையாளர்களைக் கதிகலங்க வைத்துள்ளன. எனவே தமக்கும் அப்படியான ஒரு கதி ஏற்படாமல் தவிர்க்க பலவிதமான வருமுன் காக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்து விட்டனர். ஒரு புறம் கிளர்ச்சியாளர்களைப் பயங்கரவாதிகள், மக்கள் விரோதிகள், அந்நிய சக்திகளின் கையாட்கள் என அவர்களை மக்களிலிருந்து தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மறுபுறம் இராணுவத்தைப் பலப்படுத்தி எங்கும் பரவ வைத்து ஒரு இறுக்கமான சூழ்நிலையை ஏற்படுத்தி வருகின்றனர். எங்கும் புலனாய்வாளர்களை உலவ விட்டு நியாயபூர்வமாகச் சிந்திக்கும் சக்திகளை வேட்டையாடும் கைங்கரியத்தையும் கட்டவிழ்த்து விடுகின்றனர்.

இன்றைய இலங்கையின் ஆட்சியாளர்களும் உலகெங்கிலுமுள்ள அடக்குமுறையாளர்களைப் போலவே வியூகங்களை அமைத்துச் செயற்பட்டு வருகின்றது.

அதன் ஒரு பகுதியாகவே அண்மைக்காலத்தில் இலங்கையின் அரசியல் சந்தையில் புலி வியாபாரம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. புலிகளை முற்றாகவே ஒழித்துக் கட்டிவிட்டதாக மார் தட்டிய அரசாங்கம் மீண்டும் புலிகள் அணிதிரளுவதாகப் பூச்சாண்டி காட்ட ஆரம்பித்துள்ளது.

அண்மையில் கொழும்பில் சிறிலங்க பவுண்டேசனில் இடம்பெற்ற கருத்தரங்கில் தேசியப் பாதுகாப்புக்கான சவால்கள் என்ற தலைப்பில் இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அவர்கள் உரையாற்றும் போது வெளிநாடுகளில் புலிகள் இப்போதும் பலமாகவே உள்ளதாகவும் அவர்களிடமுள்ள நிதி நாட்டைப் பிரிப்பதற்குப் பயன்படுத்தப்படுவதாகவும் அவர்களின் அப்படியான செயற்பாடுகளை ஒடுக்கப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட வேண்டும் எனவும் தேவையான இடங்களில் படைமுகாம்கள் அமைக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். வெளிநாடுகளில் புலிகள் அணிதிரள்வதற்கும் இலங்கையில் படைகளைப் பலப்படுத்துவதற்கும் என்ன சம்பந்தம் என்பதை எம்மால் மட்டுமல்ல எவராலும் புரிந்து கொள்ளமுடியாது. ஆனால் புலிகளின் பெயரைச் சொல்லிச் சொல்லியே இலங்கை இராணுவமயப்படுத்தப்படுகிறது என்பதை எவரும் உணர்ந்து கொள்ள முடியும்.

அதே போன்று அண்மையில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசநாயக்கா உரையாற்றிய போது ஜே.வி.பி.யைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணம் வந்து மாணவர்களையும் முன்னாள் போராளிகளையும் இணைத்து ஆயுதக் கிளர்ச்சிகளை ஏற்படுத்த முயல்வதாகத் தெரிவித்திருந்தார்.

மேலும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அவர்கள் சிங்கள இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் ஜே.வி.பி. யின் கிளர்ச்சிக் குழுவினர் வன்னியில் வீடுவீடாகச் சென்று முன்னாள் புலிப் போராளிகளைச் சந்தித்து அணிதிரட்டி வருவதாகவும் தமது புலனாய்வுப் பிரிவினர் மிக அவதானத்துடன் செயற்பட்டு அம்முயற்சிகளை முறியடித்து வருவதாகவும் தெரிவித்திருந்தார்.

அதாவது வடக்கில் உள்ள தமிழ் இளைஞர்களும் சிங்கள இளைஞர்களும் இணைந்து ஒரு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்க முயற்சிக்கின்றனர். அதிலிருந்து நாட்டைப் பாதுகாக்க இராணுவத்தையும் இராணுவ முகாங்களையும் பலப்படுத்தியாக வேண்டும் என்றொரு தோற்றப்பாடு ஏற்படும் வகையில் ஒரு பரப்புரைப் போர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இன்று சிங்களத் தொழிலாளர் மத்தியிலும் மாணவர் மத்தியிலும் ஒரு பெரும் அமைதியின்மை தோன்றியுள்ளது. இன்றைய ஆட்சியாளர்களின் அடக்கு முறைகள் காரணமாகவும் தேசவிரோதச் செயற்பாடுகள் காரணமாகவும் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு வெறுப்புணர்வு பரவி வருகிறது. ஆனால் சிங்களத் தொழிலாளர்களோ அல்லது மாணவர்களோ தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் போது அவை ஆயுத முனையில் அடக்கப்படுகின்றன.

ஓய்வூதியச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டபோது அதற்கெதிராக கட்டுநாயக்கா சுதந்திர வரத்தக வலயத் தொழிலாளர்கள் கிளர்ந்து எழுந்தனர். அவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலிஸாரும் காடையர்களும் இணைந்து நடத்திய தாக்குதலில் ஒரு சிங்களத் தொழிலாளி கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர். இவ்வாறே வாழ்க்கைச் செலவு உயர்வு, சம்பள அதிகரிப்பின்மை என்பவற் றைக் காண்பித்து ஐக்கிய தேசியக் கட்சியினர் நடத்திய பேரணி மீது பொலிசாரின் முன்னிலையிலேயே காடையர்கள் தாக்குதலை மேற்கொண்டனர். இதேபோன்று அந் நாட்களில் மாணவர்கள் நடத்திய போராட்டங்களும் இரும் புக்கரம் கொண்டு ஒடுக்கப்பட்டன. இப்படியான நடவடிக்கைகள் தொழிலாளர்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் ஒரு கொதிநிலையை ஏற்படுத்தியுள்ளது. இது காலவரை தமிழ் மக்கள் மீது ஏவி விடப்பட்ட வன்முறை, அடக்கு முறைகள் சிங்கள மக்கள் மேலும் பரவும் அபாயத்தை பல தரப்பினரும் புரிந்து கொள்ளும் நிலையும் உருவாகியுள்ளது.

இப்படியான ஒரு சூழ்நிலையில் தான் தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படுவதற்கெதிரான பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்கள் வெடித்துள்ளன. மாணவர்களின் போராட்டங்கள் தொடர்பாகவோ அவர்களின் கோரிக்கைகள் தொடர்பாகவோ எவ்வித அக்கறையோ பொறுப்போ இன்றி அவர்களின் போராட்டங்களை முறியடிப்பதிலேயே அரசு தீவிர அக்கறை காட்டி வருகிறது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் போராட்டங்களை அடுத்து சகல வளாகங்களும் மூடப்பட்டன. பல மாணவர்கள் வெவ்வேறு குற்றச் சாட்டுகளின் பேரில் வகுப்புத்தடைக்கு உட்படுத்தப்பட்டனர். பலர் நீதிமன்றில் நிறுத்தப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். நீதிமன்ற உத்தரவையடுத்து மாணவர்கள் அனைவரும் பல்கலைக்கழக வளாகத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர். வெளியேற மறுத்த மூவர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். இவ்வாறே பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி கொழும்பு நோக்கி மேற்கொள்ளவிருந்த நடைபவனி நீதிமன்ற உத்தரவால் தடுத்து நிறுத்தப்பட்டது. அதையடுத்து அவர்களின் வகுப்புப் பஷ்கரிப்புப் போராட்டம் தொடர்கிறது.

இவ்வாறே ரஜரட்ட கிழக்கு, தென்கிழக்கு, சப்ரகமுவ என சகல பல்கலைக்கழகங்களிலும் போராட்டங்கள் அடிக்கடி இடம்பெறுவதும் பொலிசாரின் அவற்றின் மீதான தலையீடும் என மாணவர்கள் மத்தியில் பெரும் அமைதியின்மை தோன்றியுள்ளது.

அதேவேளையில் மாணவர்கள் மீதான கெடுபிடிகளும் அடக்குமுறைகளும் மேலும் மேலும் அதிகரிக்கப்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் மாணவர்களின் போராட்டங்கள் ஜே.வி.பி.யின் தூண்டுதல் காரணமாகவே மேற்கொள்ளப்படுகின்றன என்ற பிரசாரத்தை அரசு மேற்கொண்டு வந்தது. எனினும் மாணவர்கள், தொழிலாளர்கள் மீதான ஒடுக்குமுறையை வலுப்படுத்த அது போதுமானதாக இல்லை என்பது உணரப்பட்டுள்ளது.

எனவே இலங்கை அரசு அரசியல் சந்தையில் நன்றாக வியாபாரம் போகக் கூடிய ஒரு சரக்கை முன் வைக்க வேண்டியுள்ளது. வடக்கையும் தெற்கையும் ஒரே நேரத்தில் அடக்கவும் அந்த அடக்குமுறைக்குக் காரணம் காட்டவும் இப்போ புலிப்பூச்சாண்டி முன் வைக்கப்படுகிறது.

சிங்கள மாணவர்களும் தமிழ் மாணவர்களும் தாம் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஐக்கியப்படுவதும் ஒன்றிணைந்து போராடுவதும் தவிர்க்க முடியாத தேவைகள். ஆனால் அந்த ஐக்கியத்தை சிங்கள மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்க எடுக்கும் முயற்சி எனக் காட்டுவதன் மூலம் எதிர்காலத்தில் மாணவர்கள் மேல் நடத்தப்படவுள்ள ஒடுக்கு முறையை நியாயப்படுத்த ஒரு அடித்தளம் அமைக்கப்படுகிறது. அது மட்டுமல்ல ஏற்கனவே வடக்குக் கிழக்கில் அமைந்துள்ள படைமுகாம்களை மேலும் வலுப்படுத்தவும் தென்னிலங்கையில் படை முகாம்களை நிறுவவும் ஒரு நியாயப்பாடு உருவாக்குவதும் நோக்கமாகும்.

அதாவது மீண்டும் புலிகள் எழுச்சி பெறுகிறார்கள் என்பதும் சிங்கள மாணவர்களுடன் இணைந்து செயற்படவுள்ளார்கள் எனப் பரப்புரை செய்வதும் முழுநாட்டையும் இராணுவமயமாக்கவும் உரிமை கோரி எழும் ஜனநாயக முறையிலான கிளர்ச்சிகளை அடக்கவும் மேற்கொள்ளப்படும் ஒரு நயவஞ்சக முயற்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு மகேஷ்



## தொலையா நினைவுகள்

1990 இல் பிறந்து 1992 வரை வாழ்ந்து இறுதிவரை பூரண அறிவுடனும் தெளிந்த நினைவுடனும் செயலாற்றி நல் வாழ்வு வாழ்ந்தவர் தென் இந்திய திருச்சபை யாழ் அத்தியட்சாதீனத்தின் பேராயராகத் திகழ்ந்த சபாபதி குலேந்திரன் அவர்களைப் பற்றி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராகவும் பின்னர் ஆதீனத்தின் பேராயராகவும் விளங்கிய வணக்கத்துக்குரிய கலாநிதி எஸ் ஜெபநேசன் அவர்கள் நிறையவே அறிந்திருக்கின்றார். அவருடன் உறவாடி அவரது அன்பில் வழிகாட்டலில் தன்னையும் இணைத்துக்கொண்டவர். இவர் ஒருமுறை எல்லா நிலைகளிலும் எல்லாவயதிலும் உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் செயற்பட்ட பேராயர் சபாபதி குலேந்திரன் அவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்த வேளையில் அவர் தனது இருபது வயது நிரம்பிய பேரனைக் காட்டி 'இவன் என்னுடைய பேரன் நான் ஐம்பது வயதின் பின்னர் செய்யத் தொடங்கிய வேலையை இவன் இந்த இருபது வயதிலேயே செய்து கொண்டிருக்கிறான்' என்றார். அதைக்கேட்ட அன்றைய அதிபரான வணக்கத்துக்குரிய எஸ்.ஜெபநேசன் அவர்கள் 'அவன் அப்படி என்ன வேலையைச் செய்கிறான்?' எனவினவினார் அதற்கு அவர் 'அவன் சும்மா இருக்கிறான்' என்றார் எந்த எண்ணமுமின்றி.

சும்மா இருத்தல் என்பது ஒவ்வொருவருக்கும் இயலாமையிலேயே ஏற்பட வேண்டும் என்பதே அவரது கருத்தாகும். சும்மா இருத்தல் இலகுவானதல்ல என்ற கருத்தும் எம்மிடத்தில் உண்டு. எனினும் சும்மா இருக்காதே ஏதாவது பயனுள்ள வேலையைச்செய் என்பதே யாவரினதும் விருப்பமாகும். 'சும்மா இருந்தால் சாகாமோ வாடா தம்பி காவோட்ட' என்றொருவாக்கியமும் முன்னோர் தம் பழக்கத்தில் சொல்லப்படுவதுண்டு. அந்தக்காலத்தில் சும்மா நிற்கவொண்ணாது உழைப்பின் மகிமைக்கு அது ஒப்புதல் சொல்லாக வழக்கில் உள்ளது.

இன்றைய நாட்களில் பாதை நிரம்பிய வாகனங்களைக் காணுகிறோம். அவற்றுள் அதிகமானவை மோட்டார் சைக்கிள்களும்



# சும்மா... சும்மா...!

முச்சக்கரவண்டிகளுமே என்பது யாவருமே அறிந்த விடயமாகும். அவற்றை ஓட்டுபவர்களில் அனேகர் இளைஞர்களே அவர்கள் எங்கே போகிறார்கள் என்ன செய்கிறார்கள் ? என்றெழும் கேள்விகளுக்குச் சும்மா போய் வந்தனான் என்ற பதிலே அநேகரின் வாயில் இருந்தும் பிறக்கின்றது.

உண்மையும் அதுவே இளைஞர்கள் பலர் மோட்டார் சைக்கிள்களில் சும்மா ஓடித்திரிய அவர்களுடன் சும்மா இருக்கிறோம். என்பதை மறைத்து முச்சக்கர வண்டிகள் காசுக்காக ஓடித்திரிகின்றன. இத்தகைய சும்மா ஓடும் வாகனப்பயணங்களால் பல வேளைகளில் ஆபத்துக்களே ஏற்பட்டு விடுகின்றன.

மனம் ஒரு குரங்கு இந்தக் குரங்கு மனத்தின் ஆசைகளில் இந்த மோட்டார் வாகனத்தை ஓட்டும் சாகசப் பைத்தியம் பெருகிக்காணப்படுகின்றது. வீட்டுக்கு வீடு மோட்டார் வாகனம் தேவை கருதிப் பயன்பாட்டில் இருப்பது அவசியமாகும்.

ஆனால் இன்றைய இளைஞர்களின் ஆசைக்கும் அவர்களின் இளமை இருப்பிற்கும் விருப்பிற்கும் சும்மா வாகனங்களை வாங்கிக் கொடுப்பதும் அதனைச் சும்மா அவர்கள் ஓட்டிச் சென்று விபத்துக்களில் சிக்குவதும் பெருகிவிட்டது.


சும்மா, சும்மா, தொடரும் , தொலைநோக்கு சிந்தனையற்ற அர்த்தமற்ற செயற்பாடுகளால் சும்மாவே ஆபத்துக்கள் வந்து சேருகின்றன. அவை எமக்கு மாத்திரமல்ல சமூகத்திற்கும் பாதிப்புக்களை ஏற்படுத்திவிடுகின்றன எனவே சும்மா எதையும் செய்யாதீர்கள் .

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் மீது வைத்திருக்கும் அன்பும் அவர்களின் விருப்புக்களுக்குத் தடை சொல்லாத செய்யாத பண்பும் அவர்களைச் சும்மா செயலில் இறங்கத்தூண்டுகின்றது. எனவே அதன் பாதக விளைவுகள் அதிகரிக்குமுன்னர் அவர்கள் சும்மா இருப்பதையும் சும்மா இயங்குவதையும் தடுக்க வேண்டாமா? வேலையில்லை சும்மா இருக்கிறேன். அதனால் சும்மா மோட்டார் சைக்கிளை வாங்கி வைத்திருக்கிறேன் . சும்மா நண்பர்களுடன் சுற்றித்திரிகிறேன் சும்மா பொழுதைப் போக்குகின்றேன். என்று இளைஞர்கள் சொல்லிக் கொண்டு சும்மா இருப்பதற்கும் செயற்படுவதற்கும் வழி அமைக்கும் பெற்றோரே சமூகத்தினரே சற்றுக் கூடிச் சிந்தியுங்கள்.

உங்கள் பிள்ளைகளை உங்கள் சமூகத்தை தவறான வழிகளில் இட்டுச் செல்வதற்கு இந்தச் சும்மா, செய்யும் செயல்கள் வழி நடத்திவிடுகின்றன. பெற்றோரே உங்கள் பிள்ளைகளை அவர்தம் முன்னேற்றத்திற்கும் சமூகத்திற்கும் பயனுள்ள பிரஜைகளாக வளர வாழ வழிகாட்டுங்கள். சும்மா செயற்பட சந்தர்ப்பம் அளிக்காதீர்கள் அவர்கள் மீது கரிசனையும் கண்காணிப்பும் அவசியமானவை என்பதை தெரிந்துகொள்ளுங்கள்.

# பயணிகள் கவனத்திற்கு

மைதிலி தேவராஜா



நெடுந்தீவு முகிலன்

பயணங்கள் களியாட்டங்களாகவும் பயணங்கள் சுற்றுலாக்களாகவும் மகிழ்விக்கும் போதும் பயணங்கள் பல வேளைகளில் தொல்லைகள் சூழ்ந்து துயரம் தருவனவாகவும் அமைந்துவிடுகின்றன ஆனால் அவற்றை நினைந்து பயணம் செய்யாமல் இருக்க முடிகிறதா? இல்லையே! அத்தகைய பயணத்தின் அனுபவமோ கவிதைகளாக்கப்பட்டு நூலாக வெளிவந்திருப்பது [illegible] பயணிகள் கவனத்தை ஈர்க்கும் வகையில் பயணிகளின் வாசகத்தில் வெளியிடப்பட்ட பயணிகள் கவனத்திற்கு எனும் நூல் மூலம் பயணிகளுக்குக் கவிதை தந்துள்ளார் கவிஞர் ஒருவர்.

ஒருமுறை பயணம் போகும் போது
உன்னை பஸ்ஸில் சந்தித்தேன் இப்பொழுது
உன்னைச் சந்திப்பதற்காகவே
நான் பஸ்ஸில் பயணம் செய்கின்றேன்.

ஒருமுறை பயணத்தின் போது கண்டு கொண்ட அழகிக்காக அவளது காதலுக்காகத் தொடர்ந்தும் அதே பஸ்ஸில் பயணம் செய்கின்றேன். காதலின் வேகம் அது என்கிறார் கவிஞர்.

முன்னால் இருந்தவன் பத்திரிகை.
அருகில் இருந்தவன் பார்வையோ தொலைவில்.
பின்னால் இருந்தவன் தூக்கம் போல் மயக்கம்.
அருகில் இருந்தவள் கொடுக்கவோ ஒன்று.
என்னால் தாங்கிட [illegible] பதிலோ.
சொன்னான் முகம்கொடு இரங்கினான் பிச்சை.
அன்னை அழுதாள் குழந்தையின் கழுத்தில்.
ஆடம்பரத் தங்கச்சங்கிலி காணோம்.
இன்றும் மனக்கண் இருந்தவள் தமக்கும்.
பிச்சைக்காரனே கள்வனோ என்றச்சம்.

பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது இடைநடுவில் ஏறிய பிச்சைக்காரன் ஏதோ சொல்லிக் கைகளில் ஏந்திய தட்டை நீட்டுகின்றான் பத்து, இருபது, இரண்டு என ரூபாய் நோட்டுக்களும், நாணயங்களும் தட்டிலே விழுகின்றன. அவை அவன் மீதான அனுதாபத்தின் வெளிப்பாடு ஆனால் இறுதியில் தங்கச்சங்கிலியோடு தூங்கிய குழந்தையின் கழுத்திலே அதனைக் காணவில்லை எனக் கூப்பாடு போடும் தாயைப் பார்க்கின்றோம். என்கின்றார் கவிஞர் அவனே அந்த குழந்தையின் தங்கச்சங்கிலியைத் திருடிய கள்வன் என்ற சந்தேகம் மேலெழுகிறது.

பஸ்பயணம் சௌகரியமானது அல்ல அன்றுதொட்டு இன்றுவரை பொதுமக்களின் பயணத்தை இலகுவாக்கும் இந்த பஸ்வண்டிகளின் பயணமுகவர்கள் [illegible] அவர்களில் சிலர் பயணிகளின் நலன்கருதிச் செயற்படும் போது பலரோ தமது சௌகரியத்தையும் பணவருவாயையும் கவனத்திற் கொண்டு தொழிலாற்றுவது கவலைதான். பஸ்பயணம் தரும் இன்பதுன்பங்களை வெளிப்படுத்தி எழுதிய கருத்துக்களோடு பஸ்ஸில் நூல் வெளியிட்ட நெடுந்தீவு முகிலன் கவிதையின் அம்சங்களின் பல்வேறுபக்கங்களைத் தொட்டுச் சென்றுள்ளார்.

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் ஊடகவியலாளராகத் தன்னை வளப்படுத்திக் கொண்டவர் தமிழ் மொழியின் மீது பற்றுடைய இளைஞர் சமூக சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். இதுவரை ஏழு புதுக்கவிதை தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார். அவரது கவித்துவம் சிறக்கவேண்டும். அதற்கவர் தனது இலக்கியப் பயணத்தில் கவிதைகளால் தமிழ்வளர்க்கக் கற்றுக் கொண்டுபோக வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60ண்டனிலிருந்து குடும்பத்துடன் ஊருக்கு வந்த நண்பனை அழைத்துவர கொழும்பிற்குச் சென்றேன். படிப்பு முடிவுற்றதன் பின்னர் முதல் முறையாக குடும்பத்துடன் வந்திருந்தார்கள் அவர்கள். நண்பன் படிக்கும் காலத்தில் நல்ல பகிடிக்காரன். 'டபிள் மீனிங்'கில் கதைப்பதில் கெட்டிக்காரன். அதனால் அவனை 'டபிள் மீனிங் சுப்பிரமணி' என்று சக மாணவர்கள் பட்டப்பெயர் சூட்டி அழைப்பர்.

வரும் வழியில் "என்ன முந்தின டபிள் மீனிங் கதையெல்லாம் விட்டாச்சோ" என்றேன்.

"நீ பழசையெல்லாம் மறக்கேல்லையடாப்பா" என்றான் சிரித்துக்கொண்டே. கூட வந்த இரு பிள்ளைகளும் என்னவென்று புரியாமல் பார்க்க, அவனது மனைவி மட்டும் சத்தமிட்டு சிரித்தாள்.

"இப்பவும் டபிள் மீனிங்கிலை தான் கதைக்கிறவர்" என்றாள்.

வாகனத்தில் வந்துகொண்டிருக்கையில் நாட்டு நடப்புகள், அரசியல் எனப் பல விடயங்களை உரையாடிக்கொண்டு வந்தோம். உள்ளூரில் நாட்டிலுள்ளவர்களை விட புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் நாட்டு நடப்புக்களை அறிந்து தெரிந்து வைத்திருப்பது ஆச்சரியமாக இருந்தது.

"இப்ப எல்லாச் செய்திகளையும் இன்ரநெற்றிலை பார்க்கலாம் நாங்கள் இண்டைக்கு இணையத்தளங்களைப் பார்த்தால் நாட்டில் நடக்கும் செய்திகள் எல்லாம் உடனுக்குடனே வந்திடுது. அத்தோட இன்னொரு விடயம், எழுதுகிற தமிழ் ஆட்களும் வெளிநாட்டிலதான் கூட இருக்கினம். இந்தளவுக்கு எழுதுறதையும் பேசுறதையும் குறைச்சிப்போட்டினம்" என்றேன் நான்.

"அப்ப வாயைத் திறக்கிறது சாப்பாட்டுக்கும் கொட்டாவி விடுறதுக்கும் தானோ" என்றான் நண்பன்.

"சிக்கலான விசயங்களை கதைக்காம விடுறது நல்லது என்டு நினைக்கினம். அண்டைக்கு ஒரு மூத்த எழுத்தாளரைச் சந்திச்சேன் முந்தியெல்லாம் எவ்வளவை எழுதினனீங்கள் இப்ப ஒன்டையும் காணேல்லையே என்டு கேட்க அவர் சற்றுக் கோபத்தோட சொன்னார் நான் ஏன் எழுத வேணும் இப்ப நான் எழுதி என்ன நடக்கப்போகுது? என்டு. இப்படியொரு விரக்தி எழுத்தாளரிட்டையும் பத்திரிகை என்டு சொல்லப்படுறவையிட்டையும் வந்திட்டுது" என்றேன்.

"வெளிநாட்டில இருக்கிற எழுத்தாளர்கள் கனக்க எழுதிக்கொண்டிருக்கினம வெப்சைட்டுகள் பார்க்கிற நீயே"

"ஓமோம் இலக்கியம் அரசியல் எல்லாமே இப்ப அங்கிருந்துதான் வருது அதோடு உள்நாட்டில நடக்கிற விசயங்களையெல்லாம் வெப்சைட்டுகளை பார்த்துப் போட்டு அங்குள்ள எழுத்தாளர்கள் சிலர் நேரில் பார்த்து எழுதுகிற மாதிரியல்லோ எழுதுகினம்" என்றேன்.

"ஓமோம் அதுவும் ஒரு கெட்டித்தனந்தானே" என்றான் நண்பன்.

"சரி அரசாங்கமும் கூட்டமைப்பும் நடத்திற பேச்சுக்கள் என்னமாதிரிப் போகுது சரி இப்ப 'பதின்மூன்றிற்கு அப்பால்' என்டதைப்பற்றி என்ன நினைக்கிறாய்" என்றான் நண்பன்.

"இது முந்தியிருந்தே சொல்லப்பட்டு வந்த விடயம்தான் நடைமுறையில் ஒன்றும் இல்லை. இப்ப இந்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா வந்த கையோட அது திரும்பவும் வந்திருக்கு. பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தன்படி காணி, பொலிஸ் அதிகாரங்கள் சொல்லப்பட்டிருக்கு அதையே தர முடியாது என்டுட்டு எப்படி அதற்கு 'அப்பால்' செல்வது என்டது தான் இப்ப விளங்கேல்லை.."

"எனக்கு நீங்கள் வைச்ச பெயர் இப்ப வேற ஆரப்புக்குத்தான் பொருத்தமா வந்திருக்கு தெரியுமோ" என்றான் நண்பன். "பதின்மூன்றாவது திருத்தத்திற்கு அப்பால் என்டது பதின்மூன்றாம் திருத்தத்தை அப்படியே விட்டு விட்டு அப்பால் செல்வதுதான். இந்த டபிள் மீனிங்கை விளங்கிக்கொள்ளாமல் இருக்கிறியள் நீங்கள்" என்றான் அவன்.

"ஒன்றை உறுதியளிப்பதும் பின்னர் அதனை நடைமுறைக்கு கொண்டு வராமல் விடுவது என்பதும் தான் இப்போது கூட்டமைப்போட நடக்கிற பேச்சுவார்த்தைகளில் நடந்து வருது. இவ்வளவு காலமும் பெரிய விசயங்கள் எதுவுமே நடைமுறைக்கு வரவில்லை. ஆடத்தெரியாதவனுக்கு மேடை சரியில்லை என்டு சொல்லுற மாதிரி மேடைகளை மாற்றுவதில்தான் நாட்கள் இழுத்தடிக்கப்படுகுது"

"தலைவலிக்கு தலையணைகளை மாற்றுவது என்றும் சொல்லலாம்"

"முந்தி கிராமபோன் என்டு ஒன்றிலை றெக்கோடை வைச்சு பாட்டுக் கேக்கிறது. றெக்கோட்டில கீறல் விழுந்திருந்தால் பாடலின் ஒரே வரி திரும்பத்திரும்ப பாடிக்கொண்டிருக்கும் அந்த கீறல் விழுந்த றெக்கோட் மாதிரித்தான் இருக்கு நிலைமை"

வாகனம் வவுனியாவைக் கடந்த பின்னர் போர் நடந்த இடங்களைப் பார்ப்பதில் நண்பனின் கவனம் சென்றது. பாதையின் இரு மருங்கும் படைமுகாம்களே அதிகமிருந்ததை அவதானித்தவன் "இதென்ன முந்தி இந்த இடங்களிலெல்லாம் காடிருந்ததல்லோ இதெல்லாம் இனி இப்படியே தொடர்ந்து இருக்கப்போகுதோ" என்றான்.

"அவையிலின்ர கதையைப் பார்த்தால் அப்படித்தான் தெரியுது. இவை மட்டுமல்ல இன்னும் வரணும். பேச்சுவார்த்தைகளில் கூட்டமைப்பு முன்வைக்கப்படுற கோரிக்கைகளில் இதுவும் ஒன்றுதான். படைக்குறைப்பு வேணும். திட்டமிட்ட குடியேற்றங்கள் இல்லாமலாக்கப்படவேணும் என்பதெல்லாம் கோரிக்கைகள். ஆனால் அரசாங்கம் திட்டமிட்டு யாரையும் குடியேற்றவில்லை என்டு கூறிக்கொண்டு இந்த நாட்டிலை யாரும் எந்தப்பகுதியிலும் குடியேறிவாழ உரிமை உண்டு எனவும் சொல்லுது. தென்னிலங்கைப்பகுதிகளில் தமிழ்மக்கள் வாழும்போது வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சிங்கள மக்கள் குடியேறி வாழ விரும்புவதில் என்ன பிழை என்டும் கேள்விகள் எழுகுது. இந்த நாட்டிலுள்ள மக்கள் எந்த இடத்திலும் வாழ உரித்துடையவர்கள் என்றெல்லாம் சொல்லப்படுது"

மேலோட்டமாகப் பார்க்கும்போது இது சரியான கருத்து என்டே தோன்றும். ஆனால் பெரும்பான்மை மக்கள் வாழும் பிரதேசங்களில் சிறுபான்மையினர் கலந்து வாழ்வதற்கும் சிறுபான்மை மக்கள் வாழும் பாரம்பரிய பிரதேசங்களில் பெரும்பான்மையினர் குடியமர்த்தப்படுவதற்குமிடையில் வித்தியாசம் உள்ளது. இது ஒரு ஆக்கிரமிப்பு என்டே சொல்லலாம்"

"இதையெல்லாம் விபரமாகவும் வெளிப்படையாகவும் எழுத வேணும். அண்டைக்கு தமிழ்தேசியக்கூட்டமைப்பு எம்.பி ஒருவர் வானொலி நிகழ்ச்சி ஒன்றில் உரையாடிய போது தமிழ்பெண்ணொருவர் இதனையே அவரிடம் கேட்டார். ஆளுபவர்களின் கருத்துக்கள் எப்படித் தமிழ் மக்களின் மூளைகளையும் சலவை செய்துள்ளதென்டு பார்த்தியே. முதலில் எங்கட சனத்திற்கு விளங்கப்படுத்த வேண்டியுள்ளது. அகிம்சைப் போராட்டம் ஆயுதப்போராட்டம் என்டு இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து எவ்வளவோ நடைபெற்றும் மக்களை அரசியல் மயப்படுத்தும் வேலைகளை எந்தவொரு தமிழ் அரசியல் கட்சியும் சரியாகச் செய்யவில்லை. கடந்த முப்பது வருடகாலமும் ஒரு உணர்ச்சிவசப்பட்ட, உசுப்பேத்துகிற அரசியல்தான் நடந்து வந்துள்ளது. இண்டைக்கு தேசியம் என்டால் என்னவென்டு தமிழ் அரசியல்வாதிகளுக்கே தெளிவில்லாத விசயமாக இருக்கு. தேசியவாதத்தை சரியாக கையாளாமல் போனால் அது இனவாதமாக மாறிவிடும். பெரும்பான்மை தேசியவாதம் இப்படித்தான் மாறியிருக்கு. பெரும்பான்மையோ சிறுபான்மையோ இனவாதம் என்பது மோசமானது.

எங்களது உரையாடல் இப்படித் தொடர்ந்தது.


பின்சீற்றில் அவனது மனைவியும் பிள்ளைகளும் தூங்கி வழிந்தார்கள்.

வாகனம் யாழ்ப்பாணத்தை நெருங்கிய போது அந்தப் பதாகை நண்பனின் கண்ணில் பட்டது 'ONE NATION ONE COUNTRY' (ஒருநாடு ஒரு மக்கள்) என்று எழுதப்பட்ட பதாகைதான் அது.

"இது நாம் எல்லோரும் ஒரு நாட்டு மக்களாக இருப்பம் என்டமாதிரியும் கிடக்கு ஒருநாடு ஒரே இனம் என்ட மாதிரியும் விளங்குது. இதுவும் ஒரு டபிள்மீனிங்தான்தானே" என்றான் நண்பன்.

நீங்கள் வாழும் நாட்டில் 'KEEP BRITAIN WHITE' என்டு குறிப்பிடப்பட்டுள்ளதைப் போலவா? என்றேன் நான்.

"ஓமோம் இப்ப அரசியல் தலைவர்களும் மக்களுக்கு 'டபிள்மீனிங்கில்' கதை சொல்ல வெளிக்கிட்டினம்" என்றான் அவன்.




# 'டபிள்மீனிங்'

◻ பாலகுமார்

## திருமண பந்தத்தில்....

பாலிவுட் நடிகை இஷா ஷெர்வானி கிரிக்கட் வீரர் சகீர்கானை வருகிற மார்ச் மாதம் திருமணம் செய்ய உள்ளார். பிரபல பாலிவுட் நடிகை இஷா ஷெர்வானி [illegible] திரைப் படத்தில் நடிக்கிறார்.

இந்நிலையில் இஷா ஷெர்வானி கிரிக்கட் வீரர் சகீர்கானை மணக்கிறார்.

இஷா ஷெர்வானியும் சகீர்கானும் கடந்த 6 ஆண்டுகளாக காதலித்து வருகின்றனர். கடந்த 2005-ல் அவுஸ்திரேலியாவில் கிரிக்கட் போட்டி நடந்த போது அங்கு நடன நிகழ்ச்சியில் பங்கேற்க இஷா ஷெர்வானி சென்று இருந்தார்.

அப்போது இருவரும் நட்பாகி பின்னர் அது காதலாக மலர்ந்தது. இருவரும்



மார்ச் மாதம் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்துள்ளனர். அதற்கு முன்ட [illegible] இஷா ஷெர்வானி திட்டமிட்டுள்ளார்.

திருமணத்துக்குப் பின் சினிமாவுக்கு முழுக்குப் போடப்போவதாக இஷா ஷெர்வானி [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூட்டு

ஆயிரக்கணக்கான வருடங்களாக பூட்டு உபயோகத்தில் இருக்கின்றது. ஆனால், இப்பொழுது நாம் பயன்படுத்தும் பூட்டை 150 வருடங்களுக்கு முன்னர் தான் கண்டுபிடித்தனர். 1817ஆம் ஆண்டு யாராலும் திறக்க முடியாத பூட்டை வடிவமைப்பவருக்கு பரிசு வழங்கப்படும் என்று பிரிட்டிஷ் அரசு அறிவித்தது. இதைக் கேள்விப்பட்ட ஜெரி மயா சப் எல் பவர் அது மாதிரி ஒரு பூட்டை உருவாக்கினார்.

பூட்டை உடைத்துத் திருடி சிறையில் இருக்கின்ற ஒரு திருடனைக் கொண்டு அந்தப் பூட்டை உடைத்துத் திறந்து விட்டால் அவனுக்கு விடுதலை வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், பத்து நாள்களுக்கு மேல் முயற்சி செய்தும் அவனால் பூட்டை உடைக்க முடியவில்லை. இதன் பின் காலப்போக்கில் பூட்டின் வடிவங்கள் மாறின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்ஒளி

29 ஜனவரி - 04 பெப்ரவரி 2012

85, ஜெயந்த மல்லிமாரச்சி மாவத்தை, கொழும்பு-14. டெலிபோன் 0115798005 பக்ஸ் 0115517844 - 5

E-mail: editorial@sudaroli.com

## தீர்வு விடயத்தில் தந்திரங்கள் கூடாது!

[illegible]

# முன்னாள் போராளிகளின் இந்நாள் நிலை!

◘ ஜனநாயகன்

முன்னாள் போராளிகளை சமூகத்தில் இணைத்தல், அவர்களின் வாழ்வாதாரங்களை கட்டியெழுப்புதல் போன்றவற்றில் அரசின் செயற்பாடு ஆமைவேகத்திலேயே உள்ளது. முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு, விடுவிப்பு என்பன அரசியல் மேடைகளிலும் வெளிநாட்டு ராஜதந்திரிகளுடனான சந்திப்புக்களின்போதும் வெளிநாட்டு ஊடகங்களிற்கு வழங்கப்படும் பேட்டிகளின் போதும் அரசின் உயர்மட்டத் தலைவர்கள் தொடக்கம் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் வரை அடிக்கடி பயன்படுத்தப்படும் முக்கிய விடயங்களாக உள்ளன.

சரணடைந்து அல்லது காயமடைந்து கைதுசெய்யப்பட்டு தடுப்பு வாழ்வின் பின்னர் சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளின் தற்போதைய வாழ்வு இன்னும் இருள் படிந்ததாகவும், வறுமையின் பிடியில் கழிவதாகவும் உள்ளது.

அவர்களின் மேனியில் வரி உடுப்பும் கைகளில் ஆயுதங்களும் இருந்த போராட்ட காலகட்டத்தில் அவர்கள் தமிழ் மக்களால் கதாநாயகர்களாகவும் அடிமைதனையிலிருந்து மீட்கவந்த மீட்பர்களாகவுமே நோக்கப்பட்டனர். அவர்களை தமிழினத்தின் பாதுகாப்பு கவசங்கள் என அன்றைய தமிழ் அரசியல்வாதிகள் கூட தமக்கு சந்தர்ப்பம் கிடைத்த மேடைகளில் எல்லாம் கூறி பெருமைப்படுத்தப்பட்டுக் கொண்டனர். குறிப்பாக சமாதான காலத்தில் இவர்களின் அரசியல் துறை அலுவலகங்கள் தமிழ் பிரதேசங்களிலும் இருந்த காலகட்டத்தில் போராளிகளைத் தமது உறவினர்கள், நண்பர்கள் என்று கூறி பெருமைப்பட்டவர்களும் உண்டு. ஆனால் போராட்டம் எந்தவித பலனுமற்று முள்ளிவாய்க்காலுடன் முற்றுப் பெற்றுவிட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர் இவர்கள் முன்னாள் இயக்கம் என்ற அடைமொழியில் அழைக்கப்படுகின்றனர். இந்நிலையில் உளவலியோடு அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். புனர்வாழ்வு முகாம்களில் தமது வாழ்க்கையை சில ஆண்டுகள் கழித்துவிட்டு மீண்டுவந்திருக்கின்ற நிலையில் தமிழ் மக்களின் பார்வையில் இவர்கள் கறிவேப்பிலைகளாக பார்க்கப்படுகின்றனர். பலர் அங்கவீனர்களாக ஆக்கப்பட்டு தமது வாழ்க்கையை துயரத்தின் மத்தியில் கழித்து வருகின்றனர்.

புனர்வாழ்வு பெற்ற பின்னர் எந்தவித வாழ்வாதாரத்திற்கான தொழிலுமற்ற இவர்களின் வாழ்வு இன்னும் வறுமையின் பிடிகளிலேயே கழிகின்றது. இழக்கப்பட்ட அவயவங்களோடு தமிழ் பிரதேசங்களுக்கு புனர்வாழ்வளித்து அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் இவர்கள் வறுமையின் பிடியில் கட்டிய மனைவியையும் பிள்ளைகளையும் காப்பாற்ற தொழில் தேடி அலைகின்றனர்.

தாங்கள் நண்பர்கள் உறவினர்கள் கூட இவர்களிலிருந்து விலகியே உள்ளனர். இவர்களுடன் உறவாடினால் தாங்கள் பிரச்சினைகளுக்கு உட்படலாம் என்ற கோணத்திலேயே இவர்களை அவர்கள் அணுகி வருகின்றனர்.

அண்மையில் கிளிநொச்சிப் பகுதியில் முன்னாள் போராளிகள் இருவர் சமூகத்தால் ஒதுக்கப்பட்டதாலும் வறுமையை சுமக்கமுடியாததாலும் விரக்தியில் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் இதற்கு சிறந்த உதாரணமாக உள்ளது. தமிழ் மக்களின் விடுதலைக்கான போர் இவர்களின் வாழ்வை எந்தவித ஆதாரமும் அற்ற சூழ்நிலையிலேயே தள்ளியுள்ளது என்பதை இது உணர்த்துகின்றது.

வன்னிப்போரில் உயிரை மட்டும் சுமந்து கொண்டு இடுப்பிலும் மேனியிலும் போர்த்தப்பட்ட உடைகளை மட்டுமே தமது சொத்துக்களாக கொண்டுவந்த இவர்கள் எந்தவித மன அடிப்படை தொழிலும் மேற்கொள்ள முடியாத நிலையில் கைவசம் எந்தமுதலும் இல்லாமல் உள்ளனர்.

தனியார் துறையில் இறங்கி ஏதாவது தொழில் தேட முற்பட்டால் பல கம்பனிகள் நிறுவனங்கள் முன்னால் போராளிகள் என்ற கோணத்திலேயே இவர்களை அணுகுகின்றன. இவர்களுக்கு தொழில் வழங்கினால் தமது நிறுவனங்களுக்கும் ஏதாவது பிரச்சினைகள் ஏற்படலாம் என்ற கோணத்திலேயே ஒதுக்கித் தள்ளிவிடுகின்றனர். அரச உத்தியோகம் என்பது இவர்களுக்கு பகல் கனவாகவும் மலையை கெல்லி எலி பிடித்த கதையாகவுமே உள்ளது. அரச உத்தியோகத்திற்கு செல்வது என்றால் கல்வித் தகைமை, தொழில் தகைமை என்பன அவசியம் என்ற கொள்கை இன்று கட்டாயம் உண்டு. ஆனால் வன்னிப் போரில் அனைத்தையும் தொலைத்துவிட்டு வெறுங்கையுடன் உயிரை மட்டும் தாங்கியபடி கொலைக்களத்தில் இருந்து மீண்ட இவர்களிடம் கல்விச் சான்றிதழ்களோ தொழில் சார்ந்த டிப்ளோமா சான்றிதழ்களோ இருக்கும் என்று எதிர்பார்ப்பது எந்த அளவில் நியாயம் என்று கேட்கிறார்கள் இவர்கள்.

இவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டதாக கூறப்படும் நிலையிலும் இவர்களின் பெயர் விபரங்கள் இவர்கள் தற்போது வதியும் பகுதி இராணுவ முகாம்களில் வைக்கப்பட்டு மாதமொருமுறை கையெழுத்திட வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு உண்டு.

இதனால் கடந்த வாழ்க்கையை மறந்து விட்டு சமூகத்தோடு ஒட்டி உறவாடமுயலும் இவர்கள் உளவியல் ரீதியாக பெரும் பாதிப்படைகிறார்கள். அத்தோடு கடந்த கசப்பான பதிவுகளையும் மீட்டிப்பார்க்கவே இவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

வங்கிகளில் கடன் எடுத்து சுய தொழில்களை மேற்கொள்ள இவர்கள் முயல்கின்றனர். ஆனால் பெரும்பாலான வங்கிகள் ஆவணங்களை வைத்தே கடன் வசதி வழங்கப்படும் என்ற நிபந்தனைகளுடன் இயங்கிவருவதால் இவர்கள் கடனைப் பெறமுடியாது வெறுமைக்குள் தள்ளப்படுகின்றனர். எல்லா ஆவணங்களையும் வன்னிப் போரின் எரிகுண்டுகளில் பறிகொடுத்துவிட்டு உயிரைத் தாங்கியபடி வந்த இவர்களிடம் 'ஆவணங்கள்' இருக்கும் என எதிர்பார்ப்பது எந்த அளவில் நியாயம் என்பதை சம்பந்தப்பட்ட வங்கிகள் சிந்திக்கவேண்டும். அதற்கான மாற்றுத்திட்டங்களைப் பற்றியும் சிந்திக்கவேண்டும். அரசதரப்பினர் பங்குகொள்ளும் நிகழ்வுகளில் சில முன்னாள் போராளிகளை அழைத்து மேடையில் நிறுத்தி அவர்களுக்கு கடனுதவிகளை வழங்கியிருக்கின்றனர். பின்னர் ஊடக அறிக்கைகளில் முன்னாள் போராளிகளுக்கு கடனுதவி, இவை பெருமளவில் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு தமிழ் பிரதேசங்களுக்கு வருகைதரும் தென்னிலங்கையின் அரசியல்வாதிகள் ஆளும் தரப்பாக இருந்தாலும் அல்லது ஏனைய சிங்கள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளாக இருந்தாலும் முன்னாள் போராளிகள் பிரச்சினையை அடிக்கடி தமது உரைகளில் தமது அரசியல் இருப்புக்காக பயன்படுத்திக் கொள்கின்றனர். அந்தவகையில் அண்மையில் கருத்துத் தெரிவித்த உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க ஜே.வி.பி.கிளர்ச்சிக் குழுவினர் முன்னாள் போராளிகளுடன் இணைந்து இலங்கையில் மீண்டும் குழப்பத்தையும் போராட்டத்தையும் ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் என்ற தனது உலகமகா கண்டுபிடிப்பை வெளியிட்டார். இதனை சபை முதல்வரும் அமைச்சருமான அமைச்சர் நிமால் சிறிபாலடிசில்வாவும் சபையில் ஏற்று வழிமொழிந்திருந்தார். அத்தோடு இந்த முன்னாள் போராளிகள் என்ற பதத்தை தமது அரசியல் இருப்புக்காக பல கட்சிகள் தொடர்ந்தும் பயன்படுத்துவது இவர்களை சமூகமட்டத்தில் சந்தேகக் கண்களுடன் பார்க்கும் நிலையையே ஏற்படுத்தும். சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழ முன்வரும் இவர்களைப் பிரிக்கும் செயலாகவே இது அமையும் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே முன்னாள் போராளிகளை விடுவிப்பது தான் தனது கடமை எனக் கருதும் அரசு, அவர்களை விடுவிப்பதோடு மாத்திரம் நின்றுவிடாது அவர்கள் சமூகத்தில் இணைந்து வறுமையை நீக்கி வாழ சுயதொழில் வேலை வாய்ப்புக்களை வழங்கவேண்டும். அத்துடன் அவர்களுக்குரிய கடன்வசதிகள் வீட்டுத்திட்ட உதவிகள் மற்றும் ஏனைய உதவிகளை வழங்கி அவர்களின் வாழ்வை மேம்படுத்த முன்வர வேண்டும். இதுவே இன்று அரசு முன்னால் விரிந்திருக்கும் கடமையாகும்.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலகர்களுக்கும் பாலியல் கல்வியா?



## பிரித்தானியாவில் வயதெல்லையற்ற புதிய பாலியற் கல்விப் பாடத்திட்டம்

மாணவர்களுக்கு பாலியற்கல்வி அவசியமாகின்ற போதிலும் அது ஆபாசக் காட்சிகள் மூலம் குழந்தைகளுக்கு கற்பிக்கப்படுவதானது கண்டிக்கப்பட வேண்டியதாகும். இன்று பாலியற்கல்வி உயர்தர மாணவர்களுக்கு அவசியமா அல்லது சாதாரணதர மாணவர்களுக்கு அவசியமா என்ற விவாதங்களையெல்லாம் கடந்து இன்று இது பாலகர்களுக்கு அவசியமா என்ற தலைப்பிற்குள் சேர்ந்திருக்கிறது.

எந்தவொரு ஒழுங்குபடுத்தப்பட்ட மதமோ அல்லது கலாச்சாரமோ ஒரு மனிதன் தவறான வழிகளில் நடப்பதையோ அல்லது முறைகேடான விடயங்களில் ஈடுபடுவதையோ விரும்பவில்லை. அதன் காரணமாகவே சகல மதங்களும் விபச்சாரம் மற்றும் ஓரினச் சேர்க்கைகள் போன்றவற்றை வெறுக்கிறது.

பல்வேறு ஆய்வுகள், விவாதங்களின் பலனாகவே ஒரு மனிதனுக்கு பாலியற்கல்வி இளமையிலேயே அவசியம் என்ற முடிவுக்கு அறிஞர்களும்,



கல்வியலாளர்களும் வந்திருக்கின்ற போதிலும் வயதெல்லைகளையும், வரையறைகளையும் கருத்திற்கொள்ளாமல் கற்பிப்பதற்கு யாரும் அனுமதியளிக்கவில்லை.

ஐரோப்பிய நாடுகளில் தமது குழந்தைகளை வளர்க்கும் பெற்றோரின் மனங்களில் பாரிய பிரச்சினையாக காணப்படுவது தமது குழந்தைகள் படிக்கும் பாடசாலைகளின் பாடத்திட்டங்களில் வயது வரையறையற்ற பாலியற்கல்வியும் ஒரு பாடமாக வரவிருப்பதுதான். தற்போது ஐரோப்பிய நாடுகளில் பரவலாக விவாதிக்கப்படுகின்ற பிரச்சினைகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பாலியற் கல்வி முறைமை பற்றிய வாதங்கள் சிந்திக்கப்பட வேண்டியதாகும்.

பலதரப்பட்ட எதிர்ப்புக்களையும், விமர்சனங்களையும் தாண்டி பிரித்தானிய அரச பாடசாலைகளின் பாடத்திட்டங்களில் இது சேர்க்கப்படவிருப்பது மிகவும் கவலையளிக்கின்றது.

இப்பாலியற் கல்வி மற்றும் உறவு முறை பாடத்தை இளம் வயதினருக்கு கற்பிப்பதற்காக பிரித்தானியாவின் 'Channel 4' தொலைக்காட்சி நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட Living and Growing என்ற DVD பயன்படுத்தப்படுவதாகவும், 5 வயது குழந்தைக்கு பாலியல் உறுப்புக்களை அடையாளம் காணுகின்ற பயிற்சிகளும், 7 இலிருந்து 9 வயது ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு சித்திர வடிவிலான உடலுறவுக் காட்சிகளுடனான கற்றலும், 10-11 வயதான மாணவர்களுக்கு பாலியல் மற்றும் உடலுறவு தொடர்பான தலைப்புக்கள் சாதாரண கலந்துரையாடல்களாக கற்பிக்கப்படவிருப்பதாகவும் SOCIETY FOR THE PROTECTION OF UNBORN CHILDREN (SPUC) என்ற சமூக அமைப்பு இப்பாடத்திட்டத்திற்கெதிரான பிரச்சாரத்தில் விளக்கமளித்துள்ளது.



இவ்வாறான வெளிப்படையான பாலியல் மற்றும் உறவுமுறைக் கற்பித்தலால் ஏற்படவிருக்கும் விளைவானது பிரித்தானிய சமூகத்தையே அடியோடு அழித்துவிடும் என்றும் இவ்வமைப்பு கருத்து வெளியிட்டிருக்கின்றது.

இப்படியான பாடத்திட்டத்தின் மூலம் பாலியல் தொற்று நோய்கள், இளவயதில் கர்ப்பம் தரித்தல், கருச்சிதைவு, ஓரினச் சேர்க்கை போன்ற தீங்கான விளைவுகளே ஏற்படுவதாகவும் இவ்வமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. அத்துடன் இவ்வாறான சித்திரங்கள் மூலமான விளக்கங்கள் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு சுய இன்பம் பெறுவதற்கு ஏதுவாக அமைவதுடன் இளவயதிலேயே நரம்புத் தளர்ச்சி போன்ற நோய்களுக்கு ஆளாக்குகின்றது.

ஐந்து வயதுடைய குழந்தைகளுக்கு இவ்வாறான கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அக்குழந்தை இளமைப் பருவத்தையடைந்ததுடன் முறையற்ற உடலுறவு, ஆபாசப் படங்கள் என்பன சாதாரண விடயமாக மாறிவிடும். ஏற்கனவே இளவயதில் கர்ப்பம் தரித்தல், போதைப் பொருட்கள் பாவித்தல் போன்றவற்றில் பிரித்தானியா முதலிடத்தில் இருப்பதுவும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இப்படியான மோசமான மேற்கத்தேய கலாச்சாரத்தில்

பிள்ளைகளை வளர்ப்பதற்கு சிரமப்படும் வெளிநாட்டுப் பெற்றோர்களுக்கு இது இன்னுமொரு பாரிய சவாலாக அமைந்திருக்கின்றது. இதன் மூலம் பிள்ளைகள் தமது கலாச்சாரம், பண்பாடு என்பவற்றை மறந்து வழிதவறிச் செல்லும் அச்சமும் பெற்றோர்களிடம் உருவாகியிருக்கின்றது. ஆனாலும் இவ்வாறான கல்விமுறைமையின் விளைவு தொடர்பில் பெற்றோர்களுக்கு போதியளவு விழிப்புணர்வில்லை என்பதே வருத்தமளிக்கின்றது.



இவ்வாறான விடயங்கள் தொடர்பில் செயலாற்றிவரும் நூலாசிரியரும், சிறுவர் மனோதத்துவ நிபுணருமான, அமெரிக்க லாஸ் ஏன்ஜல் நகரைச் சேர்ந்த Dr.Miriam Grossman இன் பிரித்தானிய வருகையின் போது அமெரிக்காவை விடவும் இங்குள்ள கல்வி முறைமை மோசமாகவுள்ளதாக தெரிவித்துள்ளார். அத்தோடு இங்கு பாடசாலைகளிலும், தொலைக்காட்சிகளிலும் கற்பித்தலுக்காக் காண்பிக்கப்படும் காட்சிகளைப் பார்த்து பெரும் மன வேதனையடைந்துள்ளார்.

பிரித்தானிய அரசாங்கத்தின் சிறுவர்கள் பாலியல் மயப்படுதல் தொடர்பான ஆய்வில் ஆபாசமான பாடல்காட்சிகள் மற்றும் ஆபாசப்பட நடிகர்களின் படங்களடங்கிய உள்ளாடைகளை சிறுமியர்களுக்கு விற்றல் போன்றனவற்றை தடைசெய்தல் தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருவது வரவேற்கத்தக்கவொன்றாகவிருக்கின்ற போதிலும் இப்படியான கல்வி முறைமைக்கு ஆதரவளிப்பதானது கண்டிக்கப்படவேண்டியதே.

இப்பாடத் திட்டத்தினை பிரித்தானியா மற்றும் வேல்ஸ் பிராந்தியங்களிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் கட்டாயப் பாடமாக்குவதற்காக பல பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சித்து வருவதோடு பாலியற் கல்வியை வயது வரையற்று கற்பிக்க சட்டமியற்ற வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் Chris Bryant MP பேசியிருப்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக பெற்றோரிடையே நடாத்தப்பட்ட விழிப்புணர்வுக் கலந்துரையாடல்களில் 59 சதவீதமான பெற்றோர்கள் இம்முறைமைய எதிர்ப்பதுடன் தமது 5 இலிருந்து 16 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் விரைவாக வளர்வதற்கே விரும்புகிறார்கள் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே தேசிய விஞ்ஞானப் பாடத்திட்ட முறைமையினூடாக வரையறையற்ற இனப்பெருக்கம் மற்றும் பாலியல் உறுப்புக்கள் பற்றிய பாடங்கள் தந்திரமாக உள்ளடக்கப்பட்டிருப்பது விவாதங்களுக்குள்ளாக்கப்பட்டிருக்கின்ற போதிலும் ஒளிப்பதிவுகள் மூலம் வெளிப்படையாக கற்பித்தல் முறைமையானது அவசரமாக நிறுத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு இவ்வாறான பாடங்களின் போது பிள்ளைகள் பாடங்களைப் புறக்கணித்து பெற்றோர்களால் அழைத்துச் செல்வதற்கான அனுமதியையும் பாடசாலைகள் மறுத்திருக்கின்றன.

இவ்வாறான கல்வி முறைமையின் பின்னணியில் பெற்றோரே தந்திரமாக ஏமாற்றப்படுகிறார்கள் என்பதே தெளிவானதொரு உண்மை. ஏற்கனவே பிரித்தானியாவில் பல பாடசாலைகள் இப்பாடத்திட்டத்தினை அமுல்படுத்தியிருப்பதும் ஏனைய பாடசாலைகள் ஆரம்பிக்கவிரும்புவதும் குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும் தற்போது இது தொடர்பில் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டங்கள் பிரித்தானியாவின் பல பிரதேசங்களிலும் நடாத்தப்பட்டு வருகின்றன. ஆகவே இது தொடர்பில் பெற்றோர்கள் விழிப்பாக இருப்பதுடன் இது தொடர்பில் நடாத்தப்படும் கலந்துரையாடல்களில் கலந்துகொள்ள வேண்டும் எனவும் MuslimCN என்கிற அமைப்பு வேண்டிக்கொண்டுள்ளது.

பாஸிர் ரமான் –இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




-அ.சூரியன்-

முன் கதைச் சுருக்கம்:-

பிரபஞ்சத்தில் உள்ள வேறு பல கிரகங்களில் வாழ்கின்ற மனிதர்களை ஒத்த உயிரினங்கள் ஒன்று சேர்ந்து பூமியை அழிக்க முனைகின்றன. இதற்காக நளாதி என்னும் கிரகத்திலிருந்து செதில், சதுயா ஆகிய இரு வேற்றுக்கிரகவாசிகளும் கென்லியா மலையில் தமது அதிநவீன சகல வசதிகளையும் கொண்ட 'கணட' என்னும் பறக்கும் தட்டில் வந்து தரையிறங்குகின்றனர்.

வேற்றுக் கிரகவாசிகளின் நடமாட்டத்தை அவதானித்த பத்திரிகையாளர்களான சுதாவும், நிகிதாவும் கென்லியா மலையில் இவர்கள் பற்றிய தகவல்கள் சிலவற்றைச் சேகரித்து விட்டு வேற்றுக்கிரகவாசிகளின் நடமாட்டத்தை அவதானித்துவிட்டு மலையிலிருந்து இறங்கும் போது பேரதிர்ச்சி ஒன்றை எதிர்கொள்கின்றனர். உண்மையில் 18 நாட்களைக் கொண்ட பொழுதுகள் ஒரு இரவும் ஒரு பகலுமாய் அந்த கென்லியா மலையில் மாறியிருந்ததை அறிந்து கலவரப்பட்டாலும் மீண்டும் துணிவை வரவழைத்துக் கொண்டு தமது பத்திரிகை நிறுவனத்துக்கும் தெரிவித்துவிட்டு கென்லியா மலையில் ஏறுகின்றனர்.

அங்கே இருவரையும் ஆயுத முனையில் வேற்றுக் கிரகவாசிகள் மடக்கித் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருகின்றனர்.

இனி.........


சதுயாவால் பறக்கும் தட்டுக்குள் கொண்டு செல்லப்பட்ட சுதா அந்த பறக்குந்தட்டில் காணப்பட்ட வசதிகளைப் பார்த்து ஆச்சரியப்பட்ட அதே வேளை வெளியே நிகிதாவையும் செதில் ஆயுத முனையில் கொண்டு வருவதைக் கண்டான்.

"என்ன கண்ணா உன்னோட லவ்வரும் இப்ப எங்களின் பிடியில்" என்று கூறிய சதுயா சுதாவின் கையிலிருந்த பூட்டை ரிலீஸ் பண்ணி கை விலங்கிலிருந்து அவனை விடுவித்தாள்.

"மானிடா சற்று நேரம் இந்தக் கணடவுக்குள்ளேயே இருந்துகொள். எனக்கு வெளியே வேலை இருக்கிறது. போய் வந்திடுறேன்"

"சதுயாக் குட்டி" ஒரு நிமிடம் அவளது அழைப்பிற்கு சிறுபுன்னகையுடன் திரும்பினாள் சதுயா.

"இல்லை உன் அழகிற்கு விசேட விதமாக ஏதாவது செய்கிறாயா? என்ன தான் உண்கிறாய்?"



சதுயா ஒரு அழகிய சிரிப்பை உதிர்த்து விட்டு "உன் புகழ்ச்சிக்காகத் தான் உன் கைவிலங்கை அகற்றி இக்கணடவினுள் சுதந்திரமாக உலவ விட்டுள்ளேன். அதற்காகத் தடாலடியாக பப்பா மரத்தில் ஏத்திவிடாதே"

"ஹி...ஹி.." அசடு வழிந்துவிட்டு. "அதற்காக இல்லை. உண்மையிலேயே உனது மா போன்ற நிறம், புருவமே இல்லாத இரண்டு கண்கள், நாடியே இல்லா வட்ட பரந்த முகம், சிறிய உதடுகள் உன்னைப் பார்த்தால் புசி புசியென்று கொழுக்க வளர்ந்த பூனைக்குட்டியைப் போன்று இருக்கிறாய். ஒரேயொரு தடவை உன்னைக் கட்டி அணைக்க வேண்டும் போல் உள்ளது. வருகிறாயா?"

சற்றுப் பின்னடைந்த சதுயா. "ஆ.... அப்படியெல்லாம் ஆசைப்படாதே இது வில்லங்கத்தில் போய் முடியப் போகிறது" என்று கூறிவிட்டு சற்றும் தாமதியாமல் கணடவை விட்டு வெளியேறினாள்.

ஆஹா... சுதாரிச்சிட்டாளே. கொஞ்சம் கதை பிடுங்கலாமே என்று கதை கொடுக்க... தப்பிச்சிட்டாள். போகட்டும் இந்தப் பறக்குந்தட்டிலிருந்து எப்படித் தப்பிக்கப் போகிறேன்.... என்று மனதில் நினைத்த சுதா சதுயா இறங்கிய கதவைத் திறப்பதற்காக பிடியில் கை வைக்க "அம்... ஆங்..." சொக் அடித்தது.

"என்ன மச்சி. என்கிட்டேயா?"

"என்ன இது கணடவுக்குளேயார்...." குரல் வந்த திசையில் பார்த்தான் சுதா ஆனாலும் எதுவுமே தட்டுப்படாமல் இருக்க.

ஓ.... இங்கேயும் மாயமாய் மறையும் அந்த உடையுடன் வேறு யாரோ இருக்கிறார்கள். என்று நினைக்க. "இல்லை மானிடனே இங்கிருப்பது ஒன்று நீ மற்றது நான்"

"நானென்றால்..?" சுதா வினாத்தொடுக்க கணட பதில் தந்தது. "நான் தான் கணட" அட பறக்குந் தட்டுக் கூட என் மனதைப் படித்து விட்டுக் கதைக்கிறது. "சபாஸ் கணட நீ கூடக் கெட்டிக்காரன் தான்"

"தாங்கியூ மானிடனே"

கணடவின் தாங்கியூவைக் காதில் போட்டுக் கொண்ட சுதா சுற்று முற்றும் பார்த்தான். ஏதாவது செய்ய வேண்டும். எங்களைக் கீரைகள் ஆக்கிவிட்டு இந்த வேற்றுக்கிரகவாசிகள் நம்முடைய பூமியை அழிக்கப்போகிறார்கள். வெளியே நிகிதாவும் மாட்டுப்பட்டிட்டாள். என்ன செய்ய.. அப்பொழுது தான் அதைப் பார்த்தான் சுதா. வேற்றுக்கிரகவாசிகள் அணியும் துவாரங்கள் வைத்த உடை. அதைக் கையில் எடுத்தான்.

கணடவுக்கு வெளியே நிகிதாவும் காரியத்தில் இறங்கியிருந்தாள்.

"சரி வேற்றுக் கிரகவாசிகளே நீங்கள் பூமியை அழிக்க வந்தது உங்களுக்கு நியாயமாக இருக்கலாம். ஆனால் பூமிவாசிகளான எங்களுக்கு ஏன் பூமியை அழிக்கிறீர்களென்று தெரியவேண்டுமல்லவா!"

"இம், நிச்சயமாக பூமியில் பிறந்த நீங்கள் கட்டுப்பாடுகள் வரையறைகளை மீறிவிட்டீர்கள். கொலை, கொள்ளை, வஞ்சிப்பு, ஆள்கடத்தல், இப்படி அத்து மீறல்கள் பெருகிவிட்டன. பணம் என்ற வஸ்துவிற்காக போட்டிகள், பொறாமைகள், அதிகாரத்துஸ்பிரயோகம் என கோரத்தாண்டவமாடுகின்றனர் மனிதர்கள்.

"இதற்காக பூமியையே அழிப்பதா? இதென்ன மடமைத்தனம்"

"இல்லைப் பெண்ணே உங்களைத் திருத்துவதற்கு இயேசுநாதர், புத்தர், விவேகானந்தர், இராமகிருஸ்ணர் எனப் பலபேர் இங்கு அவதாரம் எடுந்தும் எந்தப் பிரயோசனமும் இல்லை"

"அதற்காக......"

"நாங்க தீர்மானிச்சிட்டம். பூமியை அழிப்பது உறுதியாகிவிட்டது. ஏற்கனவே பூமியதிர்ச்சி, புயல், வெள்ளம், சுனாமி என அழிப்பு தொடங்கிவிட்டது. அப்பவெல்லாம் பகுதி பகுதியாக அழித்தோம். இனி ஒட்டுமொத்த மனிதர்களையும் அழித்துவிட்டு புதியதோர் பூமியை உருவாக்கப் போகிறோம்"

இதைக் கேட்ட நிகிதாவிற்கு நடுக்கமாக வந்தது பிடிகொடுக்காமல் தாம் நினைத்ததைச் சாதிக்க நினைக்கும் இந்த வேற்றுக்கிரகவாசிகளிற்கு எப்படிப் புரியவைப்பது? என நினைத்தவளாகக் கேட்டாள்.

"அன்பு, காருண்யம், அகிம்சை இவைகளெல்லாம் எங்களிடம் இருக்குத்தானே?"

"முன்னர் இருந்தது உண்மைதான். ஆனால் இன்று இவை கேள்விக் குறியாகிவிட்டது. ஒவ்வொரு நாடுகளுக்கும் எவ்வளவு பிரச்சினைகள். சாதி மதம், சிறுபான்மை, பெரும்பான்மை இனங்களென எவ்வளவு வேறுபாடுகள், சுயநலம். எல்லாமே சுயநலம்தான்".

"சரி நல்ல விடயங்களை நாமும் செய்கிறோமென்பதை உணர்த்தினால்....?"

"விட்டுவிடுவோம் அழிவு வராது?" "என்ன உண்மையாகவா.....?" ஆச்சரியமாகக் கேட்ட நிகிதா கொஞ்சம் சந்தேகப்பட்டாள். "ஐயோ என்னென்டு நிரூபிக்கப் போகிறோம்" இதை நினைத்ததும் மீண்டும் கவலையில் மூழ்கினாள் நிகிதா.

(ஆபத்து வரும்........)

## வீனஸ் கிரகத்தில் உயிரினங்கள்




[illegible]

## காரை ஓட்டிச் செல்லும் போது வரும் செல்போன் அழைப்பைத் தடுக்க புதிய கருவி



[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# 201 கிலோ!

201 கிலோகிராம் நிறையும் 6 அடி உயரமும் கொண்ட பிரித்தானிய பெண்ணொருவர். சர்வதேச சுமோ மல்யுத்த போட்டிகளில் 4 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளார். லண்டனைச் சேர்ந்த 46 வயதான சரான் எனும் இப்பெண் 3 பிள்ளைகளின் தாயாவார். இப்போட்டி குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில,


இந்த விளையாட்டில் பங்குபெறுவதற்கு என்னைப் போன்று பருமன் கொண்ட பெண்கள் இல்லை. அதனால் நான் இந்த விளையாட்டை கடந்த ஆறு வருடங்களுக்கு முன்பு தேர்ந்தெடுத்தேன். இந்த விளையாட்டானது எனது வாழ்க்கையையே மாற்றிவிட்டது என்றார். முன்னர் நான் இந்த பருமனால் வெட்கப்பட்டேன் அதே பொருத்தமற்ற ஆடைகளை அணிந்தேன் என்றார்.



# 6 ஆப்கானில்... குழந்தைகள்

ஆப்கானிஸ்தானின் வட பிராந்தியத்திலுள்ள வைத்தியசாலையில் தாயொருவர், ஆறு குழந்தைகளை ஒரே தடவையில் பிரசவித்துள்ளார். ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளை சுமப்பது தொடர்பாக குறித்த பெண் தெளிவுபடுத்தப்படவில்லை என்பதுடன், முறையான சிகிச்சைகளையும் பெற வில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அதே நாளில் மூன்று பெண் குழந்தைகளையும், மூன்று ஆண் குழந்தைகளையும் குறித்த பெண் பிரசவித்துள்ளதாக வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சீரான சிகிச்சைகளைப் பெறாமல் ஆறு குழந்தைகள் பிரசவித்துள்ளமை மிகவும் அரிதாகவே நிகழ்வதாக வைத்தியர்கள் சுட்டிகாட்டியுள்ளனர். உலகில் அதிகூடிய தாய் மற்றும் குழந்தை இறப்பு வீதம் காணப்படும் நாடுகளில் ஒன்றாக ஆப்கானிஸ்தான் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கோல்ப் போர்

இங்கும் இரண்டு [illegible] சண்டை [illegible] துப்பாக்கியால் [illegible] இது கோல்ப் போர் என்று அழைக்கப்படுகிறது.


[illegible] பத்துக் குண்டுகளை [illegible] காக்கின்றன. இது ஒரு [illegible] Freddie [illegible] 100 [illegible] விடியோக்களை [illegible] தயாரித்து [illegible].

இந்த விடியோவை Youtube இல் இரண்டு மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் பார்த்து ரசித்துள்ளனர்.

உலகின் மிகப்பெரிய தொங்கு பாலத்தை நிர்மாணித்து மெக்ஸிக்கோ கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துக் கொண்டது. 1000 மீற்றர் நீளமானதும் 400 மீற்றருக்கும் அதிகமான உயரம் கொண்டதுமான இப்பாலம் பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் மையப் பரப்பு பாரிஸிலுள்ள ஈபிள் கோபுரத்தின் பரப்புடன் பொருந்துகிறது.

பல மில்லியன் டொலர்கள் செலவில் உருவான இப்பாலம் மெக்ஸிக்கோவின் சியரா மத்ரே, ஒக்ஸிடெண்டல் மலைகளின் ஆழமான இடுக்குகளின் வழியாக ஊடறுத்துச் செல்கிறது. இதை உருவாக்க 4 ஆண்டுகள் எடுத்துள்ளது. 1810ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டிடமிருந்து மெக்ஸிக்கோ சுதந்திரம் பெற்ற இருநூறு ஆண்டுகளைக் குறிக்கும் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இப்பாலம் கட்டப்பட்டுள்ளது. மெக்ஸிக்கோ ஜனாதிபதி பெலிப்பே கால்டெரோன் இது குறித்து தெரிவிக்கையில், முன்னெப்போதும் இல்லாத வகையில் வடக்கு மெக்ஸிக்கோ மக்கள் இதன் மூலம் ஒன்றுபடப் போகின்றனர் என்றார்.

# உறவுப் பாலம்




தரம் 5,4,3 மாணவர்களே!


இதோ உங்கள் வெற்றிக்கான அருந்தவார வழிகாட்டி.

புலமைச்சுடர்

தரம் 3, 4, 5 மாணவர்களுக்கான ஒரு வாரகால ஆக்கங்களைத் தாங்கி வரும் சிறப்பு வழிகாட்டி

முற்றிலும் புதிய பாடத்திட்டத்தைத் தழுவியது 18

பக்கங்கள் : 16 30.01.2012 - 05.02.2012



பிரபல ஆசிரியர் திலீப்குமாரினால் தயாரிக்கப்பட்ட தரம் 05 மாணவர்களின் தகுதிநிலையை பரீட்சிப்பதற்கான அரச பரீட்சைக்கான வினாக்கள் அடங்கும் (விசேட தயாரிப்பு)

திங்கள் தோறும் சகல பத்திரிகை முகவர்களிடமும், புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 071 8850005 , 071 4273035.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கினி நிலம்

சிறுகதை

காணி, வீடு வாசல்களை விட்டு வெளியேறிய செல்வராசனுக்கு பத்தாவது நாள்தான் திரும்பவும் வீட்டுப் பக்கம் போக முடிந்தது.

நாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்த நிலைமையால் இவர்களின் குடியிருப்புப் பகுதிகளில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன.

இடம்பெயர முன்பாக அவனது கிராமத்தில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்திருந்ததில் ஐந்து பேர்கள் அந்தந்த இடத்திலேயே உடல் சிதறிச் செத்தும் போயினர்.

பத்துக்கும் கூடுதலான ஆட்கள் படுகாயமடைந்து நகர ஆஸ்பத்திரியில் உயிருக்காகப் போராடிக் கொண்டும், இருபது பேர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகியும் இருவர் அவயவங்களை இழந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவன் அறிந்திருந்தான்.

இந்த நிலைமை அந்தக் கிராமத்துக்கென்று இல்லாமல் அயல் கிராமங்களுக்கும் தான்.

அக்கிராமங்களில் நிரந்தரமாக வாழ்ந்து வந்த மக்கள் சிறிது சிறிதாக அங்கிருந்து அகன்று கொண்டிருந்தனர். இதனால் அக்கிராமங்கள் மக்கள் நடமாட்டம் இல்லாத சூனியப் பிரதேசங்களாகக் காட்சியளித்தன.

தூரந்துலையிலும், அண்மித்த பகுதிகளிலும் வாழ்கின்ற சொந்த பந்தங்களின் வீடுகளிலும் பாடசாலைகள் மற்றும் கோவில்கள் போன்ற இன்னோரன்ன இடங்களிலும் அப்பகுதி மக்கள் தஞ்சமடைந்து வாழத் தொடங்கினர்.

வசதியான நேரங்களில் எறிகணை வீச்சுக்கள் நிறுத்தப்பட்டிருக்கும் சமயங்களைக் கவனித்து தத்தமது வீடுகளுக்குச் செல்லும் மக்கள் தேவைக்குரிய பொருட்களை எடுத்து மீழ்வதும் நடந்து கொண்டிருந்தது.

இதனை அறிந்து கொண்ட செல்வராசனும் வீட்டுக்குப் போய்த் தேவையான பொருட்களை எடுத்துவரத் தீர்மானித்துக் கொண்டான்.

இப்படியான சந்தர்ப்பங்களில் அப்பகுதியில் வீழ்ந்து வெடிக்கும் எறிகணைகளில் ஒரு சிலர் அகப்பட்டுக் காயமடைந்ததையும், படையினரிடம் மாட்டிக்கொண்டதையும், இன்னும் சிலர் மடிந்து போயுள்ள நிகழ்வுகளையும் அவன் அறிந்திருந்தான்.

மிகக் கூடுதலான அயலவர்கள் அங்கே சென்று பெறுமதியான பொருட்களை வண்டில்கள், வாகனங்களில் எடுத்து வந்திருக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொண்ட அவனுக்கு தனது வீட்டுக்குப் போய் பார்த்து ஒரு சில பொருட்களையேனும் எடுத்து வர வேண்டும் என்ற எண்ணம் முளைவிட்டது.

"இராசாத்தி... நானொருக்கா சைக்கிள்ல... எங்கட வீட்ட போய் வேலை செய்து பிழைக்கக் கூடிய ஆயுதங்களோடும் எடுத்துக்கொண்டு கசற் றேடியோவையும் கொண்டு வரலாமெண்டு நினைக்கிறன்...."

"உதென்ன விசர்க்கதை பறைபிறியள். அங்கே போய் நிக்கேக்க செல்கில் வந்து வீழ்ந்து மாழவே"

"அவனென்ன நெடுகவே செல்லடிச்சுக் கொண்டிருக்கிறான். உங்க எவ்வளவு சனம் போய் சாமான் சக்கட்டுக்கள் எடுத்துக் கொண்டு போகுதுகள்...!"

"ஓமோம் சொன்னாப் போல மற்றவங்களின்ட சாமான்களையும் சனம் களவெடுத்துக்கொண்டு போகுதுகளெண்டும் கதைக்கினம்"

"அதுதான் நான் போய் அங்கையிருக்கிற எங்கட முக்கிய சாமான்களை எடுத்துக் கொண்டாறன் நீ தடுக்காதை"

"நானேன் தடுக்கிறன் அங்கே இருந்திருந்திட்டு நடக்கிற காரியங்களை யோசிக்கத்தான் பயமாயிருக்கு"

"அதில்ல ராசாத்தி.... இங்கை சாமான்கள் விக்கிற விலேக்க தேங்காய் கொண்டாந்தாலும் எங்களுக்கு உதவியாகக் கிடக்கும்..."

அவனது கிராமத்தில் இருந்து இருபத் திரண்டு மைல்கள் தூரத்தில் வாழ்ந்த தங்கையின் வீட்டுக்குச் சென்று தங்கியதாலேயே இதுவரையும் அவன் வீடு வாசல்களுக்குப் போகும் எண்ணத்தைத் தூரப் போட்டிருந்தான்.

கிராமத்தில் நுழைந்த செல்வராசனுக்கு மனதில் ஒருவகைப் பயம் தோன்றியது. இன்றைக்கு ஒருமே அங்கு வரவில்லைப் போலும்?

பார்க்கும் இடமெல்லாம் வெறிச்சோடி நிசப்த நிலைமை காணப்பட்டது. ஊரில் உள்ளவர்கள் ஒரிருவரைக் கண்டாலும் அவனுக்கு தென்பாக இருக்கும். இவ்வளவு தூரம் வந்து விட்டு சும்மா திரும்ப அவனுக்கு எதுவோ போலிருந்தது.

காற்றின் வீச்சில் மரஞ்செடிகள், தகர வீட்டுக் கூரைச் சத்தங்கள், நாய்களின் குரைப்போசை, பறவைகளின் அவல கீச்சுக் குரல்கள் மனதில் பயப் பீதியை மேலும் அதிகரிக்க வைத்தது.

எறிகணை வீச்சுக்கள் ஓய்ந்திருந்ததால் வீட்டுக்கு சுணங்காமல் போய் காரியத்தை முடித்துக்கொண்டு வெளிக்கிட்டு விடலாமென்ற எண்ணத்துடன் தனது வீட்டு ஒழுங்கையுள் சைக்கிளைத் திருப்பினான்.

வீட்டு முற்றத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு வீடு வாசல்களை பார்த்தபோது மனதில் பூரிப்பு ஏற்பட்டாலும் கடந்த பத்து நாட்களாக கூட்டாமல், செவ்வைப் படுத்தாமல் கிடக்கும் காணி, வீடு, வாசல்களைப் பார்த்தபோது தாயை இழந்த பிள்ளையின் அனாதரவான கோலங்கள் மனக்கண்ணில் தோன்றியது.

தென்னை மரங்களில் கிடந்த முட்டுக்காய்களும், தேங்காய்களும் பிடுங்கப்பட்டிருந்தன. மாமரங்களிலும் காய்களைக் காணவில்லை. கள்ளர் வந்து போய் இருக்கிறார்கள் என்ற எண்ணம் வந்த போது வீட்டுக் கதவைப் பார்த்தான்.

கதவு பூட்டிய படி அப்பிடியே இருந்தது அதைக் கண்டதும் நெஞ்சில் பால் வார்த்தது போல் உணர்ந்தான். பார்வையை மேலும் விரித்தபோது வளவில் நாலைந்து கோம்பைகள் வீசப்பட்டிருந்ததைக் கண்டான்.

அதைக் கண்டதும் செல்வராசனின் மனது துணுக்குற்றது. மணல் தரைகளில் பார்வையை ஓட விட்டான். அவன் நினைத்தது சரியாக் இருந்தது.

"முருகா செல்வச் சந்நிதியானே என்னைக் காப்பாத்து.."

சப்பாத்துக் காலடிகளை மணல் தரையில் பார்த்த அவன் வாய் விட்டு வேண்டினான். ஒருவரும் இல்லாத இடத்தில் தான் மட்டும் வந்து மாட்டிக் கொண்டோமோ என்று நினைத்தவனுக்கு காலும் கையும் ஓடவில்லை.

சட்டென்று சாமான்களை எடுத்துச் சைக்கிளில் கட்டிக்கொண்டு கிளம்புவம் என கால்களை எடுத்து வைத்தான்.

"படார்"

காலுக்கடியில் கேட்ட சத்தத்தைப் பார்த்தான். வலது காலில் ரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது.

"பிழைச்சுப் போச்சு.. அவங்கள் தான் வந்திட்டுப் போயிருக்கிறாங்கள் . மிதிவெடி வைச்சிருக்கு"

ஒருவாறு கால்களை எடுத்து வைத்துக் கிணற்றடிப் பக்கம் போய் தண்ணி அள்ளிக் காலைக் கழுவிக் கொண்டு ஈரத் துணியை நனைத்துக் கட்டிக் கொள்ளவுமென செயற்பட்டான்.

கிணத்தை எட்டிப் பார்த்தவன் விறைத்துப் போனான். வளர்ப்பு நாய் கிணற்றுள் மிதந்தது. மேலும் நாலைந்து கோம்பைகளும் கிணற்றுள்ளே கிடந்தன.

"இதெல்லாம் அவங்கட வேலை தான். கள்ளனும் வரேல்ல.... பொடியளும் வரேல்ல"

துலாக்கொடியில் கிடந்த பழைய துணித்துண்டொன்றை எடுத்து காலில் ஏற்பட்ட காயங்களை மூடிக் கட்டிக்கொண்டான். இதுவரை அவனுக்கு காலில் வேதனை தெரியவில்லை.

மெது மெதுவாகக் கால்களை எட்டி வைத்து வீட்டு வாசலுக்கு வந்தவன் அதில் இருந்து சிறிது ஓய்வெடுத்துக் கொண்டான். அப்பகுதியில் எந்த விதச் சன நடமாட்டமும் இருப்பதாக அவனது கண்களில் படவில்லை.

நான் நல்லாப் பிந்திப்போனன். சனம் வந்து போகேக்க வந்து போயிருக்கலாம். இப்படியே இருந்தாச் சரிவராது.... மெள்ளவாக வீட்டைத் திறந்து பாத்திட்டுப் போவம். சாமான் ஒண்டும் கொண்டு போகேலாது.. காலுக்கு முதல் அலுவல் பாக்க வேணும்....

எழுந்து சென்று கதவுத் துவாரத்தில் சாவியைப் போட்டு திறந்த செல்வராசனுக்கு அடுத்த ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

கதவு இடுக்கில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த மற்றொரு பொறிவெடி சிதறியது.

அவனது முகம் மார்பு கைகளிலிருந்து இரத்தப் பெருக்கு பாய்ந்து வந்தது. மயக்கம் அடைந்த செல்வராசன் அந்த இடத்திலே சரிந்தான்.

மயக்கம் தெளிந்து பார்த்த போது பொழுது மம்மலுக்குச் சென்றிருந்தது. காலையில் சாப்பிட்டதைத் தவிர இதுவரை எந்த உணவும் எடுக்காமல் இருந்ததால் பசிக்களையும் தாகமும் எடுத்தது.

அவனால் எழுந்து சென்று எதனையும் செய்ய முடியாமல் இருந்தது. நிலத்தில் அரைந்தரைந்து போய் குசினியில் ஏதாவது கிடைக்குமா என்று பார்த்தவனுக்குக் குடிக்க நீர் கூடக் கிடைக்கவில்லை.

பத்து நாட்களாக செயலற்றுக் கிடக்கும் குசினியில் வேறெது தான் கிடைக்கும். ஏமாற்றத்துடன் திரும்பிய செல்வராசனுக்கு சலம் முடுக்கியது. மெதுவாக தாழ்வாரமாக இறங்கி கைகளால் ஊன்றி எழுந்து நிற்க முயற்சித்தான். ஊன்றிய கையை எடுத்தவனுக்குக் கேட்ட சத்தத்தில் அவ்விடத்திலேயே சலம் வெளியேறியது. வீழ்ந்து கிடந்தான்.

தாழ்வாரத்தில் புதைக்கப்பட்டிருந்த இன்னுமோர் பிறிவெர அவனது தலைப் பகுதியைச் சல்லடை போட்டது. இப்பொழுது செல்வராசனுக்கு எந்தப் பசியும் தாகமும் எடுக்கவில்லை. இது வரை அவனுடன் ஒட்டிக்கொண்டிருந்த சீவன் அவனை விட்டு முற்றாகவே அடங்கி இருந்தது.

"நான் போக வேண்டாம். போகவேண்டா மென்று சொன்னன்.. இந்த மனிசன் கேட்டுதா.. அங்கை என்ன நடந்ததோ ஒண்டுமாத் தெரியேல்லயே, ஆளையும் இன்னும் காணேல்லயே"

இராசாத்தி பொழுதுபட்டுக்கொண்டு போன நேரத்தில் இருந்து இரவிரவாக அரற்றியவாறு தூக்கம் கெட்டுக் கிடந்தாள். பிள்ளைகள் இரண்டும் அவளைச் சுற்றி இருந்து கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தன.

"மச்சாள் இப்ப ஏன் நீ அழுகிறாய் அண்ணன் ஏதாவது மினக்கேட்டில் நின்டிருப்பார். விடியட்டும் பாத்திட்டு மனித உரிமைக் கந்தோரில் போய்ச் சொல்லுவம்..."

செல்வராசனின் தங்கை பேரகம்மா இதனைக் கூறி மச்சாளை தேற்றினாலும் அவளுக்கும் துக்கம் தொண்டைக்குள் அடைத்தது.

மனித உரிமைக் காப்பகத்தில் அறிவித்து அந்த முழுநாளும் கழிந்தது. செல்வராசன் திரும்பவில்லை.

'தென்மராட்சி கோவாவில் பகுதியில் படையினர் விதைத்து வைத்த பொறிவெடிகளில் பயங்கரவாதி ஒருவர் சிக்கி உயிரிழந்தார். அவரது சடலத்தை பொலிசார் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.'

இச்செய்தி பத்திரிகைகளில் மறுநாள் வெளிவந்திருந்ததை அறிந்து செல்வராசனின் முடிவை குடும்பத்தினர் அறிய முடிந்திருந்தது.

"ஐயோ.. இனி நானென்ன செய்வேன்.. செல்வச் சன்னதி முருகா உனக்குக் கண்ணில்லையா எங்களையேன் இப்படி வதைக்கிறாய்..."

செல்வராசனின் சடலத்தை ஆஸ்பத்திரியில் இருந்து பயங்கரவாதி என்னும் நாமத்துடன் கையெழுத்துப் போட்டு மீட்டு வந்த இராசாத்திக்கு சடலத்தின் மீது விழுந்து அழவும் அனுமதிக்கப்படவில்லை.


சடலம் பழுதடைந்து போனதால் சவப்பெட்டி மூடி திறக்கப்படவில்லை. செத்தவீட்டுப் பந்தல் தரையில் கிடந்து அழுதவளை பேரகம்மா வந்து தேற்றினாள்.

"மச்சாள் அண்ணன் போயிட்டார்.. இருக்கின்ற இந்த இரண்டு குஞ்சுகளையும் காப்பாத்தவேணும் மனதை விட்டிடாதே மச்சாள். ஐயோ.."

அதனையும் மீறி இராசாத்தி தரையில் கிடந்து புழுவாகத் துடிப்பதைப் பார்த்திருந்த முதியவரொருவர் குரல் கொடுத்தார்.

"சரி விடுங்க அவள் தன்ர மனவேதனையைச் சொல்லி ஆறட்டும்."

இராசாத்தியின் அழுகுரல் ஊரின் எல்லையைத் தாண்டியும் கேட்டுக்கொண்டே இருந்தது.



—தேவிபரமலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களப் புயல்

# நெப்போலியன்

16



நெப்போலியனின் இத்தாலி ஆக்கிரமிப்பு, ஒரு வருட காலத்துக்கும்மேல் நீடித்தது. இந்தக் கால கட்டத்தில் போர் முறைகள் சம்பந்தமான பல விஷயங்களை நேரடியாக முயன்று பார்த்துக் கற்றுக்கொண்டார். படை வீரர்கள், உபதளபதிகள், பாரிஸில் இருக்கும் இராணுவ அதிகாரிகள், ஆட்சிக் குழுவினர், ஜெயித்த ஊரின் மக்கள், அங்குள்ள முன்னாள், பின்னாள் ஆட்சியாளர்கள் என்று பலதரப்பட்டவர்களையும் அனுசரித்துக் கொண்டு போனால்தான், கிடைத்த வெற்றிக்கு ஓர் அர்த்தம் இருக்கும் என்பதை அனுபவபூர்வமாகப் புரிந்துகொண்டார்.

இதன்மூலம், அவருடைய தன்னம்பிக்கை அதிகரித்தது, அரசியல் பார்வை கூர்மையாகியது. இதையெல்லாம் விட முக்கியமாக, பிரெஞ்சு அரசாங்கத்தின் பிரதிநிதியாக, ஐரோப்பா முழுவதும் புகழ் பெற்றார் நெப்போலியன்.

இத்தாலிப் போர் முடிந்தது. பாரிஸ் திரும்பிய நெப்போலியனுக்கு, ஆரவாரமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன் மத்தியில், அடுத்து என்ன செய்யலாம் என்கிற தீவிரமான யோசனையில் மூழ்கினார்.

நெப்போலியன் யோசிக்க யோசிக்க, ஆட்சியில் இருந்தவர்களுக்குப் பதற்றம் கூடியது. எப்படியாவது இந்த ஆளைத் தூரதேசம் எங்காவது அனுப்பிவிட்டால் நிம்மதி என்று நினைத்தார்கள்.

இத்தாலியை ஜெயித்த நெப்போலியனே, உன் வீரத்தை மெச்சினோம். உன்னைப்போன்ற மகா வீரனுக்கு, உள்நாட்டில் என்ன வேலை? மறுபடியும் ஒரு பெரிய படை திரட்டிக்கொண்டு எங்கேயாவது கண்காணாத தேசத்துக்குப் போய்விடேன்!

சூசகம்தான். ஆனால், அவர்கள் சொன்ன இந்த யோசனை நெப்போலியனுக்குப் பிடித்திருந்தது. போர்களைப் பழகிவிட்ட அவரால் பாரிஸில் சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை.

ஆகவே, மீண்டும் போருக்குச் செல்வது என்று நெப்போலியன் தீர்மானித்தார். இனிமேல் மிச்சமிருப்பது இரண்டு கேள்விகள்தான் - யாரோடு? எங்கே?

அப்போதைய பிரான்ஸின் நீண்ட நாள் விரோதி என்று பார்த்தால், இங்கிலாந்துதான். பிரெஞ்சுப் படை வீரர்கள் யாரிடமும், "நீங்கள் யாரை ஜெயிக்க விரும்புகிறீர்கள்?" என்று கேள்வி கேட்டால், அவர்களுடைய பதில், ஒரே மாதிரிதான் இருக்கும், "அந்த இங்கிலாந்துக்காரனை எப்படியாவது ஜெயிக்க வேண்டும் சார்" - தளபதியிலிருந்து சாதாரண சிப்பாய் வரை, இந்தப் பதிலைத்தான் சொல்வார்கள்.

நெப்போலியனுக்கும் அந்த ஆசை இருந்தது. ஜெயிக்க முடியாத சாம்ராஜ்ஜியம் என்று ஒன்று உண்டா? அப்படியே இருந்தாலும், அது பிரான்ஸாகத்தானே இருக்க வேண்டும்? எப்படியாவது இந்த இங்கிலாந்தின் வாலை ஒட்ட நறுக்க முடிந்தால் நல்லது என்று அவரும் மிகத் தீவிரமாக யோசித்துக்கொண்டிருந்தார்.

உளவாளிகளை ஏமாற்றுவதற்காக, நெப்போலியன் இங்கிலாந்தின் மீது படையெடுக்கப்போகிறார் என்கிற செய்தியையும் வேண்டுமென்றே பரப்பினார்கள். இதைக் கேள்விப்பட்ட இங்கிலாந்துக் கடற்படை சுறுசுறுப்படைந்து தயார்நிலையில் இருக்க, நெப்போலியன் வேறு வழியில் எகிப்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்.

ஆனால் அதற்காக, உடனடியாகப் படை திரட்டிக் கொண்டு இங்கிலாந்துக்குக் குதிரையை விரட்டிவிட முடியாது. கடல் தடுக்கும், இங்கிலாந்துக் கடற்படை தடுக்கும், அவர்களிடம் சிக்கினால், உயிரோடு பட்டாசு கொளுத்திவிடுவார்கள்.

இங்கிலாந்தை ஜெயிக்க வேண்டுமானால், பிரான்ஸின் கப்பல் படைக்குப் பலம் சேர்க்க வேண்டும். அதற்குக் குறைந்தது ஒரு வருடமாவது ஆகும். அத்தனை நாள் காத்துக்கொண்டிருப்பதில் நெப்போலியனுக்குச் சம்மதம் இல்லை.

அப்படியானால், வேறு என்ன செய்யலாம்?

இங்கிலாந்துப் படைகளை நேரடியாகத் தாக்குவது இப்போதைக்கு முடியாது. ஆகவே, மறைமுகமாக அவர்கள் வயிற்றில், அல்லது முதுகெலும்பில் தாக்கலாம் என்று தீர்மானித்தார் நெப்போலியன். இதற்காக, பிரான்ஸ் இராணுவத்துக்கு நெப்போலியன் சொன்ன யோசனை, "நாம் எகிப்து மீது படையெடுக்கலாமா?"

எதற்கு?

நெப்போலியனின் இந்த ராஜதந்திரத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், மீண்டும் நாம் உலகப் படத்துக்குத் திரும்பவேண்டியிருக்கிறது.

நெப்போலியன், பிரெஞ்சு இராணுவத்தில் முன்னேறிக் கொண்டிருந்த அந்தக் காலகட்டத்தில், இந்தியா உள்ளிட்ட பல நாடுகளை இங்கிலாந்து தன்னுடைய காலனிகளாக மாற்றியிருந்தது. இந்த நாடுகளை வெறுமனே அடிமைப்படுத்தி வைத்திருப்பதோடு நிறுத்திவிடாமல், அவற்றில் தன்னுடைய வியாபாரப் பொருள்களை விற்று, நல்ல லாபம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஐரோப்பாவின் ஒரு மூலையில் இருக்கிற இங்கிலாந்திலிருந்து, ஆசியாவின் கீழ்ப்பகுதியில் இருக்கும் இந்தியா போன்ற நாடுகளுக்கு வியாபாரப் பொருள்கள் வந்து சேரவேண்டுமானால், அதற்குக் கப்பல்கள்தான் ஒரே வழி. ஏற்றுமதி வணிகத்தைத் தங்களுடைய நாட்டுப் பொருளாதாரத்தின் மிக முக்கியமான அம்சமாகக் கொண்டிருந்த காரணத்தால்தான், இங்கிலாந்துக் கடற்படை அத்தனை வலிமையாக இருந்தது.

ஆக, இங்கிலாந்திலிருந்து அந்நாட்டுப் பொருள்கள் இந்தியாவுக்குள் வரவேண்டும். அதற்கு என்ன வழி?

ரொம்பச் சுலபம். இங்கிலாந்தில் புறப்பட்டு, மத்தியதரைக்கடல் பகுதிக்குள் புகுந்து, எகிப்தின் வடக்கு எல்லைக்கு வந்துவிட வேண்டும். அதன்பிறகு, அங்கிருந்து செங்கடல் வழியாக அரபிக்கடலைத் தொட்டு விட்டால் பம்பாய்

# அடுத்த குறி எகிப்து !

அகப்பட்டுவிடும். உலகப் படத்தில் இந்தக் கடல் வழிகளைத் தெளிவாகப் பார்க்க முடியும்.

இங்கிலாந்தின் வர்த்தகத்துக்கு இந்த வழி மிக முக்கியமானது என்று புரிந்துகொண்டிருந்த நெப்போலியன், அதில் கை வைக்கத் தீர்மானித்தார். எகிப்தின் வடக்குக் கடற்கரை, மத்திய தரைக் கடலைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. கிழக்குக் கடற்கரை, செங்கடலைத் தொட்டுக் கொண்டிருக்கிறது.

போதாதா? எப்படியாவது எகிப்தைப் பிடித்து விட்டால், இங்கிலாந்துக் கப்பல்கள் இந்த வழியைப் பயன்படுத்த முடியாதபடி தடுத்து விடலாம். அதன்பின் இங்கிலாந்துக் கப்பல்களுக்குக் கஷ்ட காலம்தான். அவை மத்தியதரைக் கடலுக்குள் நுழையாமல், அட்லாண்டிக் கடல் வழியாக ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டுதான், இந்தியாவுக்கு வரவேண்டும். இப்படி அவர்கள் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதற்கு, ஏராளமான நாள் பிடிக்கும், செலவு அதிகம், பொருள்கள் வீணாகிவிடும், மொத்தத்தில் பெரிய நஷ்டம்.

வியாபாரத்தைக் கெடுத்துவிட்டாலே இங்கிலாந்தின் பாதி பலம் குறைந்துவிடும். அதன்பிறகு அவர்களை ஜெயிப்பது சுலபம் என்று நினைத்தார்.

நெப்போலியன் எகிப்தைத் [illegible] ஒன்று, சரித்திரத்தில் இடம் [illegible] விஷயங்களைப் [illegible] அறிஞர்கள் பல்வேறு காரணங்களைச் சொன்னாலும், அடிப்படையில் இங்கிலாந்தின் வர்த்தக முதுகெலும்பை முறிப்பதுதான் நெப்போலியனின் முக்கிய நோக்கமாக இருந்தது.

பிரான்ஸ் ஆட்சியாளர்களுக்கு இந்தக் கணக்கெல்லாம் புரிந்ததா இல்லையா என்று தெரியவில்லை. எப்படியோ நெப்போலியனை பாரிஸிலிருந்து வெளியே அனுப்பினால் போதும் என்று அவரை வாழ்த்தி வழியனுப்பிவைத்தார்கள்.

பத்துக்கும் மேற்பட்ட கப்பல்களில், சுமார் முப்பத்தைந்தாயிரம் படை வீரர்களோடு கிளம்பினார் நெப்போலியன். இத்தனை கப்பல்கள் எங்கே செல்கின்றன என்கிற விவரம், யாருக்கும் தெரியாதபடி ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

உளவாளிகளை ஏமாற்றுவதற்காக, நெப்போலியன் இங்கிலாந்தின் மீது படையெடுக்கப் போகிறார் என்கிற செய்தியையும் வேண்டுமென்றே பரப்பினார்கள். இதைக் கேள்விப்பட்ட இங்கிலாந்துக் கடற்படை சுறுசுறுப்படைந்து தயார்நிலையில் இருக்க, நெப்போலியன் வேறு வழியில் எகிப்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்.

நெப்போலியனுக்குப் பெரும்பாலும் கடல் பயணம் என்றாலே அலர்ஜி. ஆனால், எகிப்தைப் பிடிப்பதற்கு வேறு வழியில் செல்வது பெரும் [illegible] வேலை. ஆகவே, வாந்தியும் தலைவலியுமாகக் கப்பலில் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தார்.

அவருடைய கடல் பயணம் [illegible], நாம் அப்போதைய எகிப்து எப்படி இருந்தது என்பதைச் சுருக்கமாகப் பார்த்துவிடலாம்.

ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் கூப்பிடு தூரத்தில் இருந்தாலும், எகிப்து அதுவரை உலகச் சரித்திரத்தில் அவ்வளவாக முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. எகிப்தின் சில பகுதிகளை மட்டும் துருக்கியர்கள் கைப்பற்றி வைத்திருந்தார்கள். மற்றபடி சுதந்திர நாடுதான்.

நெப்போலியனைப் பொறுத்தவரை, முதன்முறையாக ஓர் இஸ்லாமிய தேசத்துக்குப் படையெடுத்துச் செல்கிறார். ஆகவே, அந்த நாட்டு மக்களைப் பற்றியும், அவர்களுடைய சமூக, மத நம்பிக்கைகளைப் பற்றியும் நன்றாகப் புரிந்து கொள்ள விரும்பினார்.

இதற்காகக் கப்பல் பயணம் முழுவதும், இஸ்லாமியர்களின் புனித நூலான குர் [illegible]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மனவெளிகள்

நா.யோகேந்திரநாதன்

குறுநாவல்

06

"சின்னன்.. இதுக்கை எப்பன் ஊத்தி விடு"

சின்னனின் கைகள் ஓலையைக் கிழித்துக் கொண்டிருந்த போதும் பல வருடங்கள் பின் னோக்கிப் போய்க் கொண்டிருந்த அவளின் எண்ணங்கள் திடீரென அவரின் குரல் கேட்டுத் தடைப்பட்டன.

அவள் எழுந்து காலியாகிவிட்ட சுண்டுக் கோப்பையை மீண்டும் கள்ளால் நிரப்பி விட்டு அவரின் முன் வைத்தாள்.

அவர் அவளின் முகத்தை உற்று நோக்கி விட்டு "என்ன கடுமையாய் யோசிக்கிறாய்?" எனக் கேட்டார்.

"ஒண்டுமில்லை..." எனச் சொல்லிச் சமாளித்து விட்டு அவள் மீண்டும் ஓலையைக் கிழிக்கத் தொடங்கினாள்.

ஏனோ எண்ணங்கள் மீண்டும் மீண்டும் பின்னோக்கியே ஓடின.

"எடியேய்...எப்பவும் நான் உன்னைக் கைவிட மாட்டன்" என அவர் அன்று சொன்ன அந்த வார்த்தைகளை பெரும் நெருக்கடியைச் சந்தித்த போது அவர் இம்மியும் பிசகாமல் கடைப்பிடித்த சம்பவம் அவள் நினைவுக்கு வந்து போனது.

ஒரு நாள் சீதேவிப் பாட்டி அவளின் வயிற்றுப் பகுதியில் ஒரு வித்தியாசம் தெரிவதை அவதா னித்து விட்டாள்.

"சின்னன் என்னடி வயிறு கொஞ்சம் வீங்கின மாதிரிக் கிடக்குது.. சொக்கும் வைச்சுக் கிடக்குது"

இப்படியான கேள்வியைச் சின்னன் எதிர்பா ர்த்துத்தானிருந்தாள். அந்தக் கேள்விக்குப் பயந்து சில சமயங்களில் தற்கொலை செய்யவும் நினைத்ததுண்டு. ஏனோ அவளுக்கு அதற்கான துணிவு வர மறுத்து விட்டது.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். கண்களிலிருந்து நீர் கட்டுக் கடங்காமல் பெருக ஆரம்பித்தது.

கிழவி விஷயத்தைப் புரிந்து கொண் டாள். அவள் கோபத்துடன் அதட்டினாள் "என்னடி ஆரட்டை வேண்டினியடி.. சனியன் நீயும் ஒரு பொம்பிளையே...?"

சின்னன் விம்மத் தொடங்கினாள். கிழவி போட்ட சத்தத்தில் கனகாம்பி கையும் வெளியே வந்து விட்டாள்.

"எல்லாவற்றையும் உள்ளே நின்று கேட்டுக் கொண்டிருந்த விதானையார் வேகமாக வெளியே வந்தார். அவள் ஆரட்டைப் பிள்ளை வேண்டினாள் எண்ட கதை இஞ்சை ஒரு தருக்கும் தேவை யில்லை. நீ போய் வேலையைப் பாரடி"

விதானையாரின் ஓங்கி ஒலித்த குரலின் பின் அந்த இடமே நிசப்தமானது. சின்னன் கிழவியை அழுத கண்களுடன் மீண்டும் ஒரு முறை பார்த்தாள்.

"அவளட்டை ஒருதரும் ஒரு கதையும் கதைக்கத் தேவையில்லை. சொல்லிப் போட்டன் நீ போடி"

அவர் சொல்லி விட்டு உள்ளே போய் விட்டார். அதன் பிறகு என்றும் எவரும் அவளிடம் அதைப்பற்றி எதுவுமே கேட்கவில்லை. அவர்களுக்கோ அந்த ஊரில் இருப்ப வர்களுக்கோ அவளிடமும் கேட்கவும் நையாண்டி பண் ணவும் மனமில்லை என்று சொல்லி விட முடியாது. ஆனால் விதானையாரின் கோபத்துக்கு அஞ்சி எவருமே எதையும் கதைப்பதில்லை.

ஆனால் தன்னைப்பற்றி முதுகுக்குப் பின்னால் கேவலமாகக் கதைப்பார்கள் என்ப தைச் சின்னன் அறிந்தே இருந்தாள். ஆனால் இவளால் என்ன தான் செய்ய முடியும்.

சின்னனுக்குப் பெண் குழந்தை பிறந்த போது அவர் போகவோ பார்க்கவோ இல்லை என்பது உண்மைதான். ஆனால் இளையவனின் தாய் செல்லியைக் கூப்பிட்டு காசைக் கொடுத்து ஒரு குறையுமில்லாமல் கவனிக்க வேண்டுமெனக் கட்டளை போட்டுவிட்டார்.

அது மட்டுமின்றி அந்தக் குழந்தைக்குத் தானே 'முத்து லட்சுமி' எனப் பெயர் வைத்துப் பிறப்புச் சான்றுப் பத்திரமும் பதிந்து விட்டார். ஆனால் தகப்பன் பெயர் என்ற இடத்தில் மட்டும் சின்னனின் இறந்து போன கணவனின் பெயரைப் போட்டு தகவல் கொடுத்தவர் என்ற இடத்தில் தனது பேரைப் போட்டுக் கொண்டார். ஆனால் மூத்த மகளுக்கு சொர்ணலட்சுமி என்று பெயர் வைத்த அவர் சின்னனின் பிள்ளைக்கு முத்து லட்சுமி என்று பெயர் வைத்து தனது உரிமையை அடையாளப்படுத்திக் கொண்டார்.

இப்போது முத்துலட்சுமி உடுப்பிட்டி பெண்கள் பாடசாலையில் எட்டாம் வகுப்புப் படிக்கிறாள். அவளும் சொர்ணத்தைப் போலவே படிப்பில் நல்ல கெட்டிக்காரியாக விளங்கினாள்.

சின்னன் கிழித்து முடிந்த ஓலைகளை அள்ளிக் கொண்டு போய் மாட்டுக் கொட்டிலின் தொட்டியில் போட்டு விட்டு புறப்படத் தயாரானாள்.

"வரப்போறன்" என்றாள் அவள்.

அவர் ஒரு மெல்லிய புன்னகையுடன் "போறு? போகலாம்" என்றார்.

"பிள்ளை தனிய..." என இழுத்தாள்.

"அது தெரியும் போகலாம் தானே" என்றார்.

அதற்கு மேல் அவள் எதுவும் பேசவில்லை. அப்படி அவர் சொல்லும் எதையுமே மறுத்துப் பேச அவளுக்கு என்றுமே துணிவு வந்ததில்லை. சின்னன் போய் சிறிது நேரத்தில் மழை கொட்ட ஆரம்பித்து விட்டது. விதானை யாரும் இரவு உணவை முடித்து விட்டு படுத்து விட்டார். சின்னனுக்கும் அவருக்கும் தொடர்பு ஏற்பட் டதை அறிந்த நாளிலிருந்து கனகாம்பிகைக்கு விதா னையார் அருகில்



வந்து படுக்கும் போது உள்ளூர ஒரு அருவருப்பு ஏற்படும். அதை அவள் வெளியில் காட்ட என்றுமே துணிந்ததில் லை.

ஒரு நாள் கனகாம் பிகை சீதேவிக் கிழவியிடம் அது பற்றிச் சொல்லி அழுத போது 'எப்படியோ ஆம்பிளையள் எண்டால் அப்பிடித்தான்? சேறுகண்ட இடத்திலை மிதிச்சு தண்ணி கண்ட இடத்திலை கழுவுவினை. அதைவிட ஒரே வசனத்தில் சொல்லி விஷயத்தை முடித்து விட்டாள். அவளும் சேறு வீட்டுக்குள் வராததே போதும் என்ற அளவில் இருந்து விட்டாள். ஆனால் அந்த மன அருவருப்பை மட்டும் அவளால் அகற்ற முடியவில்லை.

சொர்ணம் அதிகாலையில் தூக்கம் கலைந்து எழுந்த போது தவளைகளின் கத்தல் காதைப் பிய்த்தது. கண்டுப்புளிக் காணிக்குப் பின்புறம் இருந்த சிறிய வயல் துண்டிலே தவளைகளின் கத்தல் ஒலித்துக் கொண்டிருந்தது. காலையில் எப்படியும் ஒரு ஏழெட்டுத் தவளைகளாவது புரண்டு போய்க் கிடக்கும் என அவள் நினை த்துக் கொண்டாள். இன்னும் விடிய நேரம் இருப்பது போல் படவே மீண்டும் திரும்பி மறுபக்கம் படுத்துக் கொண்டாள். தூக்கம் வர மறுத்தது. இளையவனைத் தேவையில்லாமல் கோபித்தது தொடர்பான எண்ணங்களே மனதைப் போட்டுக் குடைய ஆரம்பித்தன.

மாமரத்தில் ஏறியிருந்த சேவல் கூவும் ஒலி கேட்டது. மெல்ல யன்னலைத் திறந்து பார்த்தாள். கிழக்கு வெளித்துக் கொண்டிருந்தது. கதவைத் திறந்து வெளியே வந்த போது சீதேவிப்பாட்டி விறாந்தையில் இரு கால்களையும் நீட்டிக் கொண்டு தூணில் சாய்ந்தவாறே சுருட்டைப் புகைத்துக் கொண்டிருந்தாள்.

சொர்ணம் வீட்டின் பின்புறம் போக நினைத்த போது சின்னன் சங்கடப்படலையைத் திறந்து கொண்டு முற்றத்துக்கு வந்தாள்.

பாட்டி ஆச்சரியத்துடன் கேட்டாள் "என்ன.. இண்டைக்கு நேரத்தோடை வந்திட்டாய்..?

சின்னன் மெல்லிய தயக்கத்துடன் "விடியப் பிள்ளை பெருசாகியிட்டாள். அது தான் வேலையை நேரத்துக்கு முடிச்சுப் போட்டு போவம் எண்டு பாக்கிறன்" என்றாள்.

"என்ன முந்தியோ?" எனக் கேட்ட கிழவி "ம்.. அவளையெண்டாலும் கவனமாய் வள.. உன்னைப் போலே பேர் வேண்ட விட்டுடாதே" என்றாள் ஒரு வித வெறுப்புடன்.

"உங்கடை மேன் ஆடுற கூத்துக்கு பழி முழுக்க என்னிலையே" என்ற அவளின் கேள்வி நெஞ்சுக்குள்ளேயே அடங்கி விட்டது. கண்கள் மெல்லக் கலங்க முகம் ஓடிக் கறுத்தது. போய் விளக்கு மாற்றை எடுத்துக் கூட்ட ஆரம்பித்தாள்.

சொர்ணத்துக்கு உன்னைப் போலை பேர் வேண்ட விடாதை என்ற வார்த்தைகளின் அர்த்தம் புரியவேயில்லை. அவள் இன்று வரை முத்துலட்சுமியின் தகப்பன் இறந்து விட்டதாகவே நம்பிக் கொண்டிருக்கிறாள். அவள் பின்பக்க மாகப் போனாள் நிலம் ஈரமாக இருந்தது.

சின்னன் அவசரமவசரமாக வேலையை முடித்து விட்டு மகளுக்குக் குப்பைத் தண்ணி வார்ப்பதற்குப் புறப்பட்டாள். விதானையாருக்கு எப்படியாவது தெரியப்படுத்த நினைத்த அவள் கிழவியின் வார்த்தைகளுடன் அந்த எண்ண த்தை அப்படியே அடக்கி விட்டாள். அது மட்டுமின்றி விதானையாரிடம் தனியே சந்திப் பதை இயன்ற வரைத் தவிர்ப்பது என முடிவும் செய்து கொண்டாள். ஆனால் அது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல என்பதையும் அவள் தெரிந்தே வைத்திருந்தாள்.

சின்னன் போன பின்பு தான் விதா னையார் எழுந்து வெளியே வந்தார். கிழவிக்கு வாய் கிடக்கவில்லை. "உன்ர மேன் சாமத்தியப்பட்டிட்டாளாம். போய்ப் பாலறுகு வைச்சிட்டு வாவன்"

விதானையாருக்கு எதுவும் விளங்க வில்லை. சொர்ணம் பருவமடைந்து மூன்று வருடங்களாகி விட்டன.

"நீ என்னாண்ட சொல்லுறாய்"

கிழவியின் நக்கல் தொடர்ந்தது" சின்னன்ரை பெட்டை பெரிசாகிவிட் டாளாம். அது எந்த வெள்ளாளனைப் பிடிக்கப் போகிதோ?"

விதானையாரிற்கு கிழவியின் நையா ண்டி எரிச்சலை மூட்டியது.

"பேய்க் கதைகதைச்சு விடியக் காலமை என்னட்டை வேண்டிக் கட் டாதை" என்று விட்டு கிணற்றடிப் பக்கம் போகத் தொடங்கினார்.


"ஆடுற கூத்தெல்லாம் ஆட வெக்கமில்லை. ஏதும் சொன்னால் மட்டும் கோவம் மூக்கு நுனி யிலை வந்திடும்" எனக் கிழவி புறுபுறுத்துக் கொண்டாள். கிழவியின் புருஷன் அதாவது விதானையாரின் தகப்பன் மருதப்பிள்ளை தூய் மையானவர் என்று கூறி விட முடியாது. ஆனால் அவர் இறைச்சி தின்னுறதெண்டு எலும்பைக் கழுத்திலை தொங்கவிடுவதில்லை எனக் கிழவி தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொள்வ துண்டு.

விதானையாருக்கு உள்ளூர ஒரு விதமான சந்தோஷம் தோன்றியது. அன்று இரவு சின்னன் வரும்போது ஐநூறு ரூபா கொடுத்து பூப்பு நீராட்டு விழா பெரிதாகச் செய்யும் படி சொல்ல வேண்டும் என நினைத்துக் கொண்டார். ஆனால் தனது பிள்ளைக்கு நான் பாலறு வைக்க முடியாது என் பதை நினைத்த போது ஒரு மெல்லிய கவலை அவருக்கு எழத் தவறவில்லை.

"அவள் தகப்பன் இல்லாத பிள்ளையில்லை" என மனதுக்குள் சொல்லிக் கொண்டார். அவர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைப் புனல்

## எதுவும் அழகில்லை

சிறுவயதில் சூரியகாந்திப்
பூவை
பார்த்தபோது
இதைவிட எதுவுமே
அழகில்லை என்று
நினைத்தேன்
பள்ளிப் பருவத்தில்
வானவில்லை
பார்த்தபோது
அழகினின் முதலிடம் என்று
நினைத்தேன்
என்று உன்னைப்
பார்த்தேனோ
அன்று தான் புரிந்தது
உன்னை விட இந்த உலகத்தில்
எதுவுமே அழகில்லை என்று

[illegible] ராஜா,
[illegible]

## தமிழுக்காய்

எத்தனை வேதனைகள்
எண்ணற்ற சோதனைகள்
முடிவில்லாத துன்ப...
முடிவில்லை அவை...

யார் துடைப்பார்
கண்ணீரை
யார் புரிவார் அவலத்தை
நிலை தடுமாறுகின்றோமே
நிம்மதி இல்லை இங்கே

தமிழர்க்கா இந்த நிலை
தடுமாற மாட்டோம்
என்றும்
உணர்வது உள்ளவரை
உயிர் கொடுப்போம்
தமிழுக்காய்.

[illegible]

## பாடகனே

என்
உள்ளத்தினை
தொட்டுச் சென்று
என்னை— உன்
அடிமையாக்கியது
உன் பாடல்களின்
கவி வரிகள்.

கொற்றையூர்,
வசந்தமதி.

## மெய்யரங்கம்

தாவரமும் விலங்கும்
இறந்து
தாளங்களை எழுப்பினால்
மிருதங்கம்

காதலனும் காதலியும்
சேர்ந்து
கனவுகளை மூழ்கினால்
ஜலதரங்கம்

அரசியலும் நடிப்பும்
இணைந்து
ஏழ்மையை சுரண்டினால்
சதுரங்கம்

கவிஞர்களும்
கவிதைகளும் அமர்ந்து
மொழிகளைக் கொன்றால்
கவியரங்கம்

கண்ணீரும் கற்பனையும்
வந்து
கருக்களைக் கொடுத்தால்
மணியரங்கம்

அமைச்சனும்
விலைமகளும்
அரைக்கதவை மூடினால்
அந்தரங்கம்

கவர்ச்சியும் காமமும்
பிணைந்து
கதைகளை மறந்தால்
திரையரங்கம்

நெடுந்தீவு,
க. யோகேஸ்வரன்,
யாழ். பல்கலைக்கழகம்.

## புரியாத காதல்

தூங்காத கண்களில்
நிம்மதி இல்லை
துடிக்காத இதயத்தில்
மூச்சில்லை
எழுதாத பேனாவில்
மை இல்லை
நடக்காத கால்களில்
உணர்வு இல்லை
புரியாத நெஞ்சத்தில்
காதல் இல்லை

[illegible]

## போதனையும் சாதனையும்

மறுக்கப்பட்டது
நியாயங்கள் மட்டுமல்ல
வரலாற்று உண்மைகளும்
கூட!

வழங்கப்பட்டது
உரிமைகள் அல்ல
அதிகாரமற்ற சலுகைகள்!

பேசப்பட்டது
உண்மைகள் அல்ல
ஏமாற்றும்
பசப்பு வார்த்தைகள்!

போதிக்கப்படுவது
அமைதிக்கான
அருளுரைகள் அல்ல
இனவாதத்தீயை
தூண்டும் கருத்துக்கள்!

காப்பாற்றப் படவில்லை
வாக்குறுதிகள் அது
காற்றில் பறக்கப்படுகின்றன!

[illegible]
சேனையூர்-06



## பயணங்கள்

பாதை தவறிப்
படுகுழியில்
விழுந்த பயணங்கள்
முடிவாகிப் போகும்
மூன்று சரியான
பாதைகளும் தவறான
பயணங்களில்
தொடர்கின்றன.....

## கவிதை

எவருடைய காதலையும்
ஏற்றுக் கொள்ளாத
எனக்கு உனது காதலை
ஏற்றுக் கொள்ள
எப்படி முடிந்தது
கவிதையே.
இறுதி வரை நீ மட்டும்
தான் என்னுடன்
பயணிப்பாய்
என்றதனால்.....

குணசேகரன் சக்தினா,
வேரவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினி.. பிட்ஸ்...

## சைவ பிரியர்கள் தனுஷ், மல்லிகா

உணவுக்காக விலங்குகளை கொல்வதைத் தடுக்கவும், மாறாக அசைவத்தில் இருந்து சைவத்துக்கு மாற்றும் நோக்கிலும் விலங்குகள் பாதுகாப்பு நல அமைப்பான பீட்டா விழிப்புணர்வு செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, பிரபலங்களிடம் கருத்து கேட்டு, ஆண்டுதோறும் சினிமா பிரபலங்களில் சிறந்த சைவ பிரியர்களை அறிவித்து வருகிறது. அந்த வகையில் 3 படத்தில் இடம்பெற்ற ஒய் திஸ் கொலவெறி பாடல் மூலம் உலக அளவில் பிரபலமான தனுஷ் மற்றும் மர்டர் படம் மூலம் பிரபலமான பாலிவுட் நடிகை மல்லிகா ஷெராவத், 2011ன் சிறந்த சைவ பிரியர்களாக தேர்வாகினர். சைவ உணவை சாப்பிடுவ தால் எப்போதும் ஆரோக்கியமாக இருப்பதை உணர்வதுடன், சீரான உடற்கட்டுடன் உள்ளேன் என்று தனுசும், சைவ உணவே மிகவும் சிறந்தது என்று மல்லிகாவும் தெரிவித்தனர்.

## கொலைவெறிக்கு காசியில் வழிபாடு

நடிகர் தனுஷ் பாடிய ஒய் திஸ் கொலைவெறி பாடல் உலகம் முழுவதும் பிரபலமாகியுள்ளது. ஜப்பானியர்கள் டிஸ்கோ, நைட்கிளப்புகளில் பாடுகின்றனர். பாகிஸ்தானிலும் பாடுகிறார்கள். காங்கிரஸ் கட்சி உத்தரபிரதேச சட்ட மன்றத் தேர்தல் பிரசாரத்தில் இப்பாடலை பயன்படுத்த தனுசுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறது.

பிரபல நிறுவனம் 'கொலை வெறி' பாடலின் உரிமையை ரூ. 2 கோடிக்கு வாங்கி இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில் தனுஷ் திடீரென்று உத்தரபிரதேச மாநிலம் பனாரஸில் உள்ள காசி விஸ்வ நாதர் கோவிலுக்கு சென்றார். கோவிலில் கொலைவெறி பாடல் வெற்றி பெற்றதற்காக தனுஷ் சிறப்பு பூஜை செய்து வழிபட்டார்.

## பெப்ரவரியில் கோச்சடையான்!

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்கும் 'கோச்சடையான்' படத்தில் அவர் ஜோடியாக கேத்ரினா கைஃப் நடிக்கிறார். ரஜினிகாந்தின் இளைய மகள் சவுந்தர்யா இயக்கும் படம், கோச்சடையான். கதை, திரைக்கதை, இயக்கம் மேற்பார்வையை கே.எஸ்.ரவிக்குமார் கவனிக்கிறார். ஏ.ஆர்.ரகுமான் இசை அமைக்கிறார். படப்பிடிப்பு பெப்ரவரி -15 ஆம் தேதி தொடங்கும் என அவர் அறிவித்துள்ளமை ரஜினி ரசிகர்களுக்கு புது உற்சாகத்தை அளித்துள்ளது.

## ரஜனியின் பெருமனசு

ரஜினி மனைவி லதா 'ஆஸ்ரம்' என்ற பெயரில் பாடசாலை நடத்துகிறார். அவற்றின் ஆண்டுவிழா தேனாம் பேட்டை காமராஜர் அரங்கில் நடைபெற்றது. இதில் ரஜினி பெயரில் சிறந்த சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டன.

இயக்குனர் கே.பாலச்சந்தர், நடிகை ஆஷா பரேக், மறைந்த நடிகை ஷம்மிகபூர் ஆகியோருக்கு இவ்விருதுகளை லதா ரஜினிகாந்த் வழங்கினார்.

விழாவில் ரஜினிகாந்த் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில்;

கே.பாலச்சந்தர், ஷம்மி கபூர், ஆஷா போன்றோருக்கு விருது கொடுத்துள்ளது சந்தோசமாக இருக்கிறது. ஆனால் எனது பெயரில் என் குருநாதர் பாலச்சந்தருக்கு விருது



## நோ... நோ... இப்ப வேண்டாம்



திருமணம் செய்துகொள்ளும் நிலையில் நான் இல்லை என்றார் காஜல் அகர்வால். பலர் தெலுங்கு படத்தில் மகேஷ்பாபுவுடன் முத்தக்காட்சியில் நடித்தது பற்றி கேட்கிறார்கள். இக்காட்சியை ஆபாசம் இல்லாமல் பூரி ஜெகன்நாத் இயக்கினார். ரசிகர்களும் அதை ஏற்றுக்கொண்டனர். முத்தக்காட்சியை தவிர எத்தனையோ காட்சிகள் படத்தில் இருக்கின்றன. அதுபற்றிக் கேட்காமல், முத்தம் பற்றியே கேட்பது ஏன்? கதைக்கு அவசியம் என்பதால்தான் அப்படி நடித்தேன்.

தெலுங்கு ஹீரோ பிரபாசுடன் எனக்கு காதல் என்று எழுதுகிறார்கள். திருமணம் ஆகாதவர்கள் இரண்டு பேர் பழகினால், உடனே அவர்கள் காதலிக்கிறார்கள் என்று அர்த்தமா? அவர் எனக்கு நல்ல நண்பர், அவ்வளவுதான். தற்போது திருமணம் செய்துகொள்ளும் நிலையில் நான் இல்லை என்றார் அவர்.

## ஜெனிலியாவுக்கு பெப்ரவரி 3 டும் டும்

நடிகை ஜெனிலியாவுக்கு திருமணம் முடிவாகியுள்ளது. தனது நீண்டகால காதலரான நடிகர் ரிதேஷ் தேஷ்முக்கை மணக்கிறார். ரகசியமாக வைத்திருந்த காதலை சமீபத்தில் வெளிப்படையாக அறிவித்தனர். இரு வீட்டு பெற்றோரும் திருமணத்துக்கு சம்மதித்து விட்டார்கள். வருகிற 31-ந்தேதி மும்பையில் உள்ள பந்த்ரா ஓட்டலில் திருமண நிச்சய தார்த்த சடங்குகள் நடக்கின்றன.

பிப்ரவரி 3-ந்தேதி திருமணமும் 4-ந்தேதி திருமண வரவேற்பும் மும்பை சாந்தா குரூபில் உள்ள கிராண்ட் ஹயாஷ் ஓட்டலில் நடக்கிறது. இந்தி, தமிழ், தெலுங்கு நடிகர்-நடிகைகள் திருமணத்தில் பங்கேற்கின்றனர். அவர்களுக்கு திருமண அழைப்பிதழை ஜெனிலியாவும் ரிதேஷ் தேஷ்முக் கும் கைப்பட எழுதி அனுப்பி வருகின்றனர்.

திருமணத்துக்கு பின் ஜெனிலியா சினிமாவுக்கு முழுக்கு போடுகிறார். சினிமாவில் நடிக்க வேண்டாம் என்று ரிதேஷ் அறிவுறுத்தி இருப்பதாக கூறப்படுகிறது



## விலைமாது வேடத்தில் நடிக்க ஆசை – ஸ்ரேயா

தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகர்களுடன் ஜோடியாக நடித்த ஸ்ரேயா தற்போது ஆங்கில படமொன்றில் நடிக்கிறார். அவர் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில்,

நடிகைகள் எல்லோருக்கும் விலைமாது வேடத்தில் நடிக்க ஆர்வம் உண்டு. எனக்கும் விபசாரியாக நடிக்க ஆசை இருக்கிறது. அனுஷ்கா வேதம் படத்தில் அதுபோன்ற கேரக்டரில் நடித்தார். விலைமாது வேடத்தில்தான் நடிப்புத் திறமையை வெளிப்படுத்த முடியும். வங்காள மொழி பட மொன்றில் நான் விலை மாதுவாக நடிக்கிறேன்.

மிகச் சிறந்த இடத்தைப் பிடித்த நடிகைகள் எல்லோருமே இந்த கேரக்டரில் நடித்து உள்ளனர் என்றார் ஸ்ரேயா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தது தர்மசங்கடமாக இருந்தது. என் பெயரில் விருது வழங்கும் அளவுக்கு நான் பெரிதாக சாதித்துவிட வில்லை என்றார்.

## ஐஸ்வர்யாவின் மறுப்பு

ரஜினி பெயரை நானும், சவுந்தர்யாவும் விளம்பரத் துக்கு பயன்படுத்துவதாகவும், எங்கள் இருவர் இடையே போட்டி நிலவுவதாகவும் வெளியான செய்தி வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது. எனவே ஊடகங்கள் எம் சார்ந்த செய்திகளை வெளியிடும்போது என்னிடமோ தனுசிடமோ தொடர்பு கொண்டு விளக்கம் பெற்று செய்திகளை வெளி யிடவேண்டும் என்கிறார் ஐஸ்வர்யா.

## 1 மில்லியன் டாலர் – பில்லா 2 போஸ்டர்!

இந்த ஆண்டு அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் படங்களில் பில்லா 2 . அல்டிமேட் ஸ்டார் தல அஜீத் நடிப்பில் பில்லா வசூலில் பட்டையைக் கிளிப்பிய தோடு அஜீத்துக்கு ஒரு பிரேக்கை ஏற்படுத்தி தந்தது. இப்போது பில்லா 2 படுவேகத்தில் ஷூட்டிங் நடந்து வரு கிறது. இதற்காக அஜீத் பல கிலோ எடைகளை குறைத்து படு ஸ்லிம்மாக மாறியிருக்கிறார். அதுமட்டுமின்றி படத் தின் விறுவிறுப்பிற்கு பஞ்சம் இருக்காது என இயக்குனர் சக்ரி தெரிவித்துள்ளார்.

அண்மையில் பில்லா 2 படத்தின் போஸ்டரைதான் வெளியிட்டிருக்கிறார்கள். அதற்குள் படத்தின் வெளி நாட்டு உரிமை விலை போயிருக்கிறது. அதுவும் எப்படிப்பட்ட விலை? மூச்சை இழுத்துப் பிடித்துக் கொள்ளுங்கள். அதிகமில்லை ஒரு மில்லியன் அமெரிக்க டாலர்கள். ரஜினி, கமல் படங்கள்தான் இவ்வளவு பெரிய தொகைக்கு விலை போய்க் கொண்டிருந்தன என்பது முக்கியமானது.

## பில்லா 2 ரூ.5 கோடிக்கு விற்பனை

அஜீத்தின் பில்லா 2 படப்பிடிப்பு விறு விறுப்பாக நடக்கிறது. இதில் நாயகியாக பார்வதி ஓமன குட்டன் நடிக்கிறார். இதன் வெளிநாட்டு உரிமையை பிரபல நிறு வனம் ஒன்று ரூ.5 கோடியே 30 லட்சத்துக்கு விலைக்கு வாங்கி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதுவரை அஜீத் படம் எதுவும் இவ்வளவு தொகைக்கு வெளிநாட்டில் விற்பனையாகவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. மங்காத்தா படம் ரூ.3 கோடியே 7 லட்சத்துக்கு விலை போனது. ரஜினி, கமல், விஜய், சூர்யா படங்கள் ஏற் கனவே ரூ.5 கோடியை எட்டி உள்ளன. அந்த வரிசையில் அஜீத்தின் பில்லா 2 படமும் தற்போது சேர்ந்துள்ளது.

## அஜித், கமலை இணைக்கும் ஆஸ்கார்!

ஆஸ்கார் ரவிச்சந்திரன் தயாரிப்பில் கமல் நடிக்க விருக்கும் புதிய படத்தில் ஒரு முக்கியமான ரோலில் அஜித்தை நடிக்க வைக்கும் முயற்சியில் இறங்கியிருக் கிறாராம் தயாரிப்பாளர்.

த்சாவதாரம் ரிலீஸாக இருந்த நேரத்தில் ரவிச்சந்திர னுக்கும், கமலுக்கும் ஏற்பட்ட மனக்கசப்பின் காரணமாக படத்தின் ரிலீஸ் திகதியை கூட விளம்பரத்தை பார்த்தே அறிந்துகொண்டார் கமல் என்று அப்போது பேசப்பட்டது.

இவர்கள் இருவரும் இனி இணைவார்களா? என்ற கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக கமலை தன் படத் திற்கு புக் செய்திருக்கிறார் ரவிச்சந்திரன். இப்போது கமல் நடித்துக் கொண்டிருக்கும் விஸ்வரூபம் படப்பிடிப்பு முடிந் ததும் ரவிச்சந்திரன் படத்தில் நடிப்பார் என்று தெரிகிறது.

ரவிச்சந்திரன் தயாரிப்பில் அடுத்தடுத்து சில படங்கள் நடித்த அஜித்தும், சில கருத்து வேறுபாடு காரணத்தால் தான் தொடந்து ஆஸ்கார் நிறுவனத்தின் தயாரிப்பில் நடிக்கவில்லை என்று பேசப்பட்டது.பெரும்பாலும் இருவரும் இதற்கு சம்மதிப்பார்கள் என்ற நம்பிக்கையில் தான் ஆஸ்கார் நிறுவனம் இந்த முயற்சியில் இறங்கியுள்ளது.

## இந்திக்கு செல்கிறார் லிங்குசாமி


தமிழில் ரிலீசான வேட்டை, இந்தியில் ரீமேக் ஆகிறது. இதுகுறித்து இயக்குனர் லிங்குசாமி கூறியதாவது: என்னு டன் இணைந்து வேட்டையை தயாரித்த யுடிவி நிறுவனம், அதை இந்தியிலும் தயாரிக்கிறது. இந்தி நட்சத்திரங் களுக்கு படம் திரையிடப்பட்டது. நடிகர்கள் முடிவாகவில்லை. வேட்டையை தொடர்ந்து, எனது இயக்கத்தில் தமிழில் ரிலீசான சண்டைக்கோழி, ரன் படங்களை இந்தியில் தயாரிக்கிறேன். மேலும், இந்தியில் விரைவில் படம் இயக்க உள்ளேன் என்றார்.

## 3 நாளில் ரூ.27 கோடி வசூல்

தெலுங்கு நடிகர் மகேஷ் பாபு நடித்த பிசினஸ்மேன் படம் பொங்கலுக்கு ரிலீசாகி ஓடிக் கொண்டிருக்கிறது. தமிழகத்திலும் இப்படம் திரையிடப்பட்டுள்ளது. இத் திரைப்படம் 3 நாளில் 27 கோடி வசூலை அள்ளி வழங்கி யுள்ளது.

## ஏஞ்சலினா ஜோலியின் விருப்பம்

பிரபல ஹொலிவுட் நடிகை ஏஞ்சலீனா ஜோலி (35). அவரது கணவர் நடிகர் பிராட்பிட் (48). இவர்கள் 6 குழந்தைகளை தத்தெடுத்து வளர்த்து வருகின்றனர். இந்த நிலையில் 7-வதாக மற்றொரு குழந்தையை தத் தெடுக்க விரும்புவதாக ஏஞ்சலினா ஜோலி தெரிவித்துள்ளார்.




எதைச் செய்தாலும் அதை விருப்பப்பட்டு செய்தால் அந்த துறையில் நீ வெற்றிய டையலாம் என்ற ஒரு வரிக் கதைதான் நண்பன் . பாலிவுட்டில் வெற்றி பெற்ற த்ரீ இடியட்ஸ் படத்தை அப்படியே தமிழில் ரீமேக்கியிருக்கிறார் இயக்குனர் ஷங்கர்.

என்ஜினியரிங் படிக்க வரும் மாணவர்களான விஜய் (பஞ்சவன் பாரி வேந்தன்), ஜீவா (சேவற்கொடி செந்தில்), ஸ்ரீகாந்த் (வெங்கட் ராமகிருஷ் ணன்) ஆகிய மூவரும் பள்ளி நண்பர்கள்.

என்ஜினியரிங் கல்லூரியை சத்யராஜ் (விருமாண்டி சந்தனம் என்கிற வைரஸ்) நடத்தி வருகிறார். மிகவும் கண்டிப்பான மனிதர். ஒரே நேரத்தில் பல வேலை களை செய்வதில் வல்லவர். இவரது திறமையான வழிகாட்டுதலால் அந்த கல்லூரி இந்தியாவி லேயே 7 வது சிறந்த கல்லூரியாக முன்னேறி இருக்கிறது.

பணக்கார வீட்டு பையனாக விஜய், நடுத்தர குடும்பத்து பையனாக ஸ்ரீகாந்த், ஏழைக்குடும்பத்து பையனாக ஜீவா. இவர் களில் விஜய்க்கு என்ஜினீயரிங் என்றால் மிகவும் விருப்பம். ஸ்ரீகாந்த்திற்கோவைல்ட் லைப் போட்டோ கிராபியில் விருப்பம், ஜீவாவிற்கு தன் குடும்ப கஷ்டத்திற்க்காக வும், தன் விருப்பமும் என்ஜினியரிங் என்ப தாலும் அங்கே படிக்க வருகிறார்கள்.

எதையும் விட்டுக் கொடுக்காமல் ரூல்ஸ் படி சத்யராஜ் இருப் பதால் ஒரு மாணவர் தற்கொலை செய்துகொள்கிறார். அது தற் கொலையல்ல, சத்யராஜ் செய்த கொலை என்று அவரிடமே விஜய் வாதிடுகிறார். இத னால் விஜய் மேல் வெறுப்படைகிறார் சத்ய ராஜ்.

இவர்களுக்கு போட்டியாளனாக வரும் சத்யன் (ஸ்ரீவத்சன் என்கிற சைலன்சர்) எல்லாவற்றையும் மனப்பாடம் செய்து ஒப்பிப் பதில் கில்லாடி. இதை விஜய் நாசூக்காக தவறு என்று எடுத்து சொல்வதால் சத்யரா ஜின் வெறுப்பு இன்னும் அதிகமாகிறது.

இடையில் சத்யராஜின் திருமணத் திற்குள் நுழையும் விஜய் குழுவினர் அங் கும் கலாட்டவை ஏற்படுத்துகிறார். அங்கே கதாநாயகியான இலியானாவை (ரியா) சந்திப் பது மட்டுமின்றி அவரது வருங்கால கணவரையும் கலாட்டா செய்துவிடுகிறார்.

மேலும் சில சம்பவங்களால் வெறுப்பின் உச்சத்திற்கு செல்லும் சத்யராஜ் இந்த மூவரையும் கல்லூரியை விட்டே நீக்குகிறார். அப்போது சத்யராஜின் மூத்த மகளான அனுயாவிற்கு (ஸ்வேதா) பிரசவ வலி வந்து விட, தன் கண்டு பிடிப்புகளால் இக்காட்டான அச்சூழலில் தாயையும் சேயையும் காப்பாற்றுகிறார் விஜய்.

கல்லூரி முடிந்ததும் விஜய் காணாமல் போய் விடுகிறார். அவரை ஜீவாவும், ஸ்ரீகாந்தும் 10 வருடங்களாகத் தேடு கின்றனர். இறுதியில் விஜய் என்ன ஆனார்? மற்ற இருவரும் அவர்களது லட்சியத்தை அடைந்தார்களா? விஜயின் காதல் என்ன ஆனது ? என்பதை பலவித திருப்பங்களோடு சொல்லியிருக்கிறார் சங்கர். படத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை கலகலப்புக்கு பஞ்சமில்லை.

இல்லாத இடுப்பைக் காட்டியபடி வரும் இலியானா அப்பா சத்யராஜிடம் தன் அண்ணனுக்காக வாதிடும் போதும், கிளைமேக்ஸ் காட்சியில் இவரது பதற்றமான நடிப்பும் பிரமாதம். ஹாரிஸின் பின்னணி இசை படத்தோடு இழைந்து கலந்திருக்கிறது.

கதை வசனம் படத்தின் முதுகெலும்பு என்றே சொல்ல வேண்டும். வாழ்க்கையில் எந்த பக்கம் போறதுன்னு ஒரு இக்கட்டான சூழ்நிலை வரும். அப்போ எந்த பக்கம் போறதுன்னு யோசிப்பது ரொம்ப முக்கியம் . உனக்கு பிடிச்ச துறையா இருந்தா அதுல நீ ஜெயிக்கலாம் போன்ற வசனங்கள் ஓர் ரகம். ஆல் ஈஸ் வெல் என்ற விஜயின் டயலாக், இனி அவர்களது ரசிகர்களிடம் பிரபலமாகிவிடும்.

## விஜய் - ஏ.ஆர். முருகதாஸ் மீண்டும் மோதல்

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடிக்கும் படம் 'துப் பாக்கி'. படத்தின் ஷூட்டிங் படுவேகமாக மும்பையில் நடந்து வருகிறது. இதில் இளைய தளபதி விஜய்க்கும் டைரக்டர் ஏ.ஆர். முருகதாசுக்கும் மீண்டும் சண்டை ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த மோதலுக்குக் காரணம் இந்த காட்சி யிலே அந்த நடிகர் நடித்திருந்தால் அப்படி நடிச்சிருப்பார் என்று முருகதாஸ் சொல்ல விஜய் கோபித்துக் கொண்டு ஹொட்டலுக்கு சென்றுவிட்டதாக கிசு..கிசுக்கள் வெளியாகியுள்ளன. மேலும் ஒரு நாள் முழுக்க ஓட்டல் ரூமை விட்டு வெளியே வரவே இல்லையாம் விஜய்! ஏற்கனவே விஜய்க்கும், முருகதாசுக்கும் சம்பளப் பிரச்சனை யில் சண்டை வந்ததாகக் கூறப்பட்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லறையாக அமைய இருந்த தங்கச்சுரங்கம்




பிலிப்பைன்ஸ் தீவில் மின்டானோப் பகுதியில் உள்ளது வெப்டான்போ தங்கச் சுரங்கம். பல தொழிலாளர் பணிபுரியும் சுரங்கமாகும்.

வழமைபோல அன்றும் வேலைகள் சுரங்கத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இவ்வாறான சுரங்கங்களில் எப்போதாகிலும் மண்சரிவு அல்லது பாறைப்பிளவுகள் நேர்வதுண்டு.

இவ்வாறான அனர்த்தங்களையெல்லாம் எதிர்கொண்டுதான் எந்நேரமும் மிக்க அவதானத்துடனும் எச்சரிக்கையுடனும் சகல தொழிலாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

170 அடி ஆழத்தின் கீழ் அன்றும் வழமை போல வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. சுரங்கத்தின் மேற்கூரை திடீரென இடிந்து விழுந்தது. எங்கும் மரண ஓலம். மூச்சுத் திணறியவர்களின் முனகல் ஒலிகள்.

சற்று நேரத்தில் எங்கும் ஒரே நிசப்தம். சத்தம் எதுவும் எழவேயில்லை. மேற்கூரை இடியும் சமயத்தில் சுரங்கத்தின் அடியில் 47 பேர் வேலையில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் மத்தியில் 38 வயது நிரம்பிய குடும்பஸ்தரான அல்பிரட்டும், 33வயதான வில்பிரட்டும் இருந்தனர். தொழிலாளர்கள் சுரங்கத்தின் உள்ளே வேலைக்குச் செல்கையில் நெற்றியில் அணியும் பட்டரியில் இயங்கும் விளக்கினையும் உணவுப்பொதி மற்றும் கருவிகளையும் தம்முடன் எடுத்துச் செல்வது வழமை.

நிலத்தின் அடியில் தங்கம் வெட்டி எடுக்கும் வேலையில் அவர்கள் மூவரும் இருந்த சமயம் பாறைகள் இடிந்துவிழும் முதல் எச்சரிக்கை அவர்களுக்குக் கிடைத்தது.


என்ன செய்வது? எச்சரிக்கை கிடைத்து அவர்கள் தயங்கிய சமயம் மேற்கூரை இடிந்து விழுந்து மேலே செல்லும் வழியை முழுவதுமாக மூடிவிட்டது. அல்பிரட், வில்பிரட் மற்றும் யூலியஸ் எனும் மற்றொரு தொழிலாளியையும் தவிர ஏனையோர் அனைவரும் இடிபாடுகளில் சிக்கி மாண்டு விட்டார்கள்.

அவர்கள் மூவரும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பவித்திரமான பிரார்த்தனைகளை மேற்கொண்டனர். தமது குடும்பங்களை நினைத்து ஏங்கித் தவித்தனர். ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறித் தம்மைத் தேற்றிக் கொண்டனர். சற்று நேரத்திற்கு முன்னர் வெகு அருகாமையில் சக தொழிலாளர்கள் துணையோடு இயந்திரம் சகிதம் வேலைசெய்ததும், மண்வெட்டிகளின் சப்தமும் கேட்டவண்ணம் இருந்தன. அவையாவும் மண்சரிவால் ஒடுங்கி அடங்கி விட்டன. இடையிடையே மண்ணும் கல்லும் கீழே விழுந்தன.

அவர்களிடம் இருந்த பட்டரி விளக்கு மெல்ல மெல்லமாகச் சக்தியை இழந்து சிவப்பு நிற வெளிச்சம் வெளிறத் தொடங்கியது. அவர்கள் வசமிருந்த உணவுப்பொதிகள், நீர்ப்பைகள் யாவும் சேதமடைந்தும் மண்ணுள் புதைந்தும் போயின.

இன்னும் சிறிது நேரத்தில் பாட்டரி விளக்கு முழுமையாகச் சக்தியை இழந்து எங்கும் இருள் சூழ்ந்துவிடும் நிலைமை தவிர்க்கமுடியாதது.

வெளிச்சமின்றி, உணவின்றி, நீரின்றித் தவிக்க நேரிடும். அவர்கள் மூவரும் மூச்சுத் திணறிச் சாகவேண்டிய நிலைமை நெருங்கிக் கொண்டிருந்தது. முற்றிலுமாக மூடப்பட்ட நிலையிலும் அதனூடே சற்று உயரத்தில் ஓர் பெரும் இடை வெளி தெரிந்தது. பாறைகளினூடே ஆயினும் அவர்களால் அதனை நோக்கி நகர இயலாது.



அவர்கள் பலம் முழுவதையும் திரட்டித் தாங்கள் அடைபட்டுக்கிடக்கும் இடத்தைச் சுட்டிக்காட்டச் சுட்டியலால் தட்டி பலம் கொண்ட மட்டும் ஓசை எழுப்பினார்கள். இரைந்து கத்தினார்கள். ஆனால் பயப்பீதியால் குரல் தொண்டையில் இருந்து எழவேயில்லை. ஏக்கத்துடன் உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் சுவர் ஓரத்தில் சாய்ந்தபடி மூவரும் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

நிமிடம், மணி என்று கழிந்து இருண்ட பகல் இரவுகளைக் கழித்தார்கள். சுரங்கத்தின் இன்னமும் மூடப்படாமல் தெரியும் சிறு துவாரத்தின் வழியாக ஏதேனும் உதவி கிடைக்காதா எனும் ஏக்கத்துடன் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

சுரங்க நிர்வாகத்தின் அவசர உதவிப் படைப்பிரிவு, சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சில மணித்தியாலங்களுக்குள்ளேயே அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் அவர்களால் இடிந்துவிழுந்த இடத்தினைக் குறிப்பாகக் கண்டுபிடிக்க முடியவில்லை.

**அவர்கள் பலம் முழுவதையும் திரட்டித் தாங்கள் அடைபட்டுக் கிடக்கும் இடத்தைச் சுட்டிக்காட்டச் சுட்டியலால் தட்டி பலம் கொண்ட மட்டும் ஓசை எழுப்பினார்கள். இரைந்து கத்தினார்கள். ஆனால் பயப்பீதியால் குரல் தொண்டையில் இருந்து எழவேயில்லை. ஏக்கத்துடன் உதவிகிடைக்கும் என்ற நம்பிக்கையில் சுவர் ஓரத்தில் சாய்ந்தபடி மூவரும் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.**

வெறுமனே கண்ட கண்ட இடத்திலும் நிலத்தைத் துளையிடமுடியாது. அது ஏற்கனவே மூடப்பட்டிருக்கும் சுரங்கப்பாதையினை முற்றாகவே மூடிவிடும் ஆபத்துண்டு.

மூன்று நாட்கள் கழிந்துவிட்டன. உதவிப் படையினர் நம்பிக்கையை இழக்கும் நிலையிலும் முழுமுனைப்புடன் வியர்வை கொட்டக் கொட்ட முயற்சியில் ஈடுபட்டனர்.

விபத்தில் சிக்குண்டவர்களின் குடும்பத்தினர், உறவினர், பொதுமக்கள் எனப் பலரும் கவலையுடன் அங்கு கூடியிருந்தனர். தொலைக்காட்சி ஊடாக நிருபர்களும் கூடவே அங்கு தத்தமது பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

சற்றுத் தொலைவிலுள்ள சுரங்க நிபுணர்களுக்குத் தகவல் அறிவிக்கப்பட்டு, உதவி கோரப்பட்டது. நான்காம் நாள் காலையில் விசேட நிபுணர்குழாம் ஒன்று சம்பவ இடத்திற்கு வானூர்தி மூலம் வந்து சேர்ந்தது.

அவர்கள் துளையிடக் கூடிய பொருத்தமான இடத்தை ஆராய்ந்து கொண்டிருந்தனர். இயற்கையாகவே பிலிப்பைன்ஸ் நாடு அடிக்கடி பூமியதிர்வு நிகழும் ஓர் இடமாகும். இந்நிலையில் அவ்வாறான ஓர் பூமியதிர்வு ஏற்படுமாயின் விளைவுகள் பயங்கரமானவையாக இருக்கும். மீட்புப் பணிகள் எதுவும் பயனற்றதாகிவிடும்.

அவ்வேளையில் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு சிறு சத்தம் கேட்டது. சத்தம் வந்தது உண்மை. மெல்லிய கத்தியால் தட்டுவது போன்ற ஓசை. நிபுணர்கள் அவ் ஒலியின் அதிர்வுகளைச் செவிமடுத்துக் கேட்டனர். தமது அனுபவம், திறமை என்பவற்றால் ஓர் குறித்த இடத்தில் துளைபோடும் இயந்திரம், மண்வாரும் இயந்திரம் முதலியவற்றை எடுத்துக்கொண்டு ஓன்று கூடினர்.

'யாரோ உயிருடன் இருக்கிறார்கள்' என்ற செய்தி பரவியது. எங்கும் பரபரப்பு. சனக்கூட்டம் அலை மோதியது.

தீயணைக்கும் படையினர் மற்றும் அவசர சிகிச்சை அளிக்க டாக்டர்கள், அம்புலன்ஸ் வண்டி சகிதம் ஸ்தலத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

நிபுணர்கள் காட்டிய இடத்தில், தாமதமின்றிப் பொறியியலாளர்கள் துளைபோடும் வேலையை ஆரம்பித்தனர். மண் அகழ்ந்தெடுக்கும் வேலையும் தொடங்கிக் குழாயை உள்ளே இறக்கினார்கள்.

எது எப்படியிருப்பினும், அந்த வேலையை அவர்கள் அவசரமாகச் செய்யக் கூடாது. ஆத்திரமாக அதிகப்பளுவைச் சுமத்தினால் மேலும் புதிதாகக் கூரை இடிந்து விழலாம். அதனால் உயிருடன் தப்பி இருப்பவர்களின் உயிர்களுக்கும் ஆபத்து ஏற்படலாம்.

மிக்க அவதானத்துடனும், நிதானத்துடனும் மீட்புப் பணிகள் தொடர்ந்தன. எப்படியிருந்தும் இடிபாடு பிளவு ஏற்படாதவகையில் தரையின் மேற் பரப்பில் இருந்து உள்ளே துளையிட்டு மண்ணை அகழ்ந்தெடுத்தபடி அதனூடே குழாயினை நாளொன்றிற்கு 30 அடிகள் ஆழத்திற்கு மாத்திரமே செலுத்த முடிந்தது.

துளையிடும் வேலைகள் தொடர்ச்சியாக நடைபெற்றன. ஐந்து நாட்கள் கழிந்த நிலையில் உள்ளிருந்தவர்களின் நிலைமை குறித்து எல்லோர் மனதிலும் கேள்விக்குறி. 170 அடி ஆழத்தில் 150 அடி வரையில் குழாயை இறக்கியாகிவிட்டது. இன்னமும் விபத்தில் சிக்கியவர்களின் தளத்தை அடைய 20 அடிகளே எஞ்சியிருந்தது. உணவின்றி, நீரின்றி ஒன்பது நாட்கள் கடந்துவிட்ட நிலையில் எவராவது உயிருடன் தப்பியிருப்பார்களா என்ற எண்ணமே எல்லோர் மனதிலும் நிறைந்திருந்தது.

மறுநாட்காலையில் வேலையை ஆரம்பித்தனர். மதியம் 2 மணியளவில் அடித்தளத்தைக் குழாய் அண்மித்து குழாயினூடே மின்சார ஏணி மூலம் முதலில் இறக்கப்பட்ட டாக்டர் மற்றும் அவரது உதவியாளர்கள் மயங்கிய நிலையில் குற்றுயிராகக் கிடந்த மூவரையும் கண்டுகொண்டனர். தாமதமின்றி அவர்களுக்கு முதலுதவி வழங்கப்பட்டு மேல்தளத்துக்கு அனுப்பப் பட்டனர்.

கிட்டத்தட்ட 10 நாட்களாக ஒளி எதனையும் காணாது இருட்டில் இருந்த அவர்களது கண்கள் சூரிய ஒளியைத் திடீரெனப் பார்க்க நேரிடின் அவர்கள் கண்பார்வையை இழக்கும் சாத்தியமுள்ளதால் முன்னெச்சரிக்கையாக அவர்களுக்குக் கறுப்புக் கண்ணாடிகள் அணிவிக்கப்பட்டது. அம்புலன்ஸ் வண்டியில் அவசர அவசரமாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

சகதொழிலாளர்களின் சடலங்களுடன் மூவரும் எத்தனை நாட்கள் இருந்துள்ளார்கள் அவர்கள் மனோநிலை எந்த நிலையில் இருந்திருக்கும் என்பதனைக் கற்பனை செய்துபார்க்கவே முடியவில்லை.

எது எப்படியிருந்தபோதிலும், இரண்டு வாரங்களில் அவர்கள் மூவரும் பூரண குணமடைந்து வீடு திரும்பினார்கள். ஆனால் மறுநாளே மூவரும் புதுத்தெம்புடன் மீண்டும் அவர்களுக்குக் கல்லறையாக அமைய இருந்த தங்கச் சுரங்கத்திற்கு வேலைக்குச் சென்றனர்.

தமிழில் – ஜெகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

சொன்ன சொல் தவறாதவர்களே! சாதிக்க வேண்டுமென்ற தன்னம்பிக்கை வரும். நாடாளுபவர்களின் நட்பு கிடைக்கும். புது வேலை, பொறுப்புகள் தேடி வரும். பணவரவு அதிகரிக்கும். பிள்ளைகள் நல்ல வழிக்கு திரும்புவார்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை இருந்தாலும் அதிகாரிகளின் பாராட்டு ஆறுதல் தரும். கணவன் - மனைவியிடையே இருந்த கசப்பு தீர்ந்து வாழ்க்கை இனிமையாகும். பழைய சிக்கல்களுக்கு தீர்வு கிட்டும் வாரமிது.




**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ஆம் பாதங்கள்**

எது நடந்தாலும் சலனப்படாமல் அன்றாட பணிகளை திறம்பட முடிப்பவர்களே! எதிர்பாராத பணவரவு உண்டு. கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். பிள்ளைகளிடம் குவிந்துக் கிடக்கும் திறமைகளை இனம் கண்டறிந்து வளர்ப்பீர்கள். எதிலும் ஈடுபாடற்ற நிலை, ஒருவித படபடப்பு, வீண் விரையம், ஏமாற்றம் வந்து செல்லும். வெற்றியை சுவைக்கும் வாரமிது. வீண் பேச்சுக்களைத் தவிர்ப்பது நல்லது.





**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2, 3-ஆம் பாதங்கள்**

சுய கட்டுப்பாடும், தாராளமனமும் கொண்ட நீங்கள், தடைக் கற்களை படிக் கட்டுகளாக்கி முன்னேறுபவர்கள். குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். குடும்பத்தில் அன்பு பெருகும். பிள்ளைகள் படிப்பில் முன்னேறுவார்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். ஆன்மிகத்தில் நாட்டம் ஏற்படும். ஏழை எளியவர்களின் துயர் துடைக்கும் வாரம் இது.




**புனர்பூசம் 4 ஆம் பாதம் , பூசம், ஆயில்யம்**

அறிவியல் பூர்வமாக எதையும் யோசிக்கும் நீங்கள், பந்த பாசத்திற்கு கட்டுப்பட்டவர்கள். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். திடீர் பயணங்கள் உண்டு. உத்தி யோகத்தில் விமர்சனங்கள் தூக்கம் தூக்கும். கலைத்துறையினர்களே! மூத்த கலைஞர்களின் நட்பால் ஆதாயமடைவீர்கள். துணிவே துணை என்று நினைக்கும் வாரமிது.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

எங்கும் எதிலும் வெற்றியை விரும்புபவர்களே! குடும்பத்தாரின் ஒத்து ழைப்பு அதிகரிக்கும். தவறான எண்ணங்களுடன் பழகியவர்களை ஒதுக் கித் தள்ளுவீர்கள். எதிலும் பொறுமை காப்பது நல்லது. உத்தியோகத்தில் உயர்வு உண்டு. மக்கள் சேவையே மகேசன் சேவை என சமூகத்தில் சேவையாற்றுவீர்கள். கலைத்துறையினர்களே! உங்களின் திறமைகள் வெளிப்படும். முயற்சியால் முன்னேறும் வாரமிது.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள் அஸ்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்**

கனிவாகவும், கண்டிப்பாகவும் பேசி காரியம் சாதிப்பவர்களே! பணவரவு சுமாராக இருக்கும். கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் கவனமாகப் பழகுங்கள். விடாமுயற்சியினால் வெற்றி பாதையை அடையலாம்.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள் சுவாதி, விசாகம் 1,2,3-ஆம் பாதங்கள்**

அடிக்கிற கைதான் அணைக்கும் என்பார்களே! அது உங்களுக்குத்தான் பொருந்தும். உடல் வலி, களைப்பு, சோர்வு வந்து நீங்கும். தாய்வழியில் மதிப்பு, மரியாதைக் கூடும். ராகு, வீண் பேச்சால் பிரச்னை, ஒருவித படபடப்பு, ஏமாற்றம் வந்து செல்லும். உத்தியோகத்தில் உயரதிகாரி பாராட்டுவார். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். சாதிக்கத் தூண்டும் வாரமிது.




**விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

மனதில் பட்டதை மறைக்காமல் பேசுபவர்களே! மனோபலம் அதிக ரிக்கும். கணவரின் நம்பிக்கையை பெறுவீர்கள். இடமாற்றம், வீண் செலவுகள் வந்துப் போகும். தள்ளிப் போன வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் தெளிவு, சலுகைகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தி யோகத்தில் அலுவலக ரகசியங்களை மூத்த அதிகாரிகளிடம் பகிர்ந்து கொள்வார். சவால்களை சமாளிக்கும் வாரமிது.




**மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம்**

தலைமைப் பண்புடன் தன்னம்பிக்கையுடன் உழைப்பவர்களே. குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பிள்ளைகள் உங்கள் அருமையைப் புரிந்து கொள்வார்கள். வியாபாரத்தில் சில அதிரடி திட்டங்களை அறிவித்து வாடிக்கையாளர்களை கவர்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமை யைக் கண்டு உயரதிகாரி வியப்பார். கலைத்துறையினர்களே! வேற்று மொழி வாய்ப்புகளால் புகழடைவீர்கள். செல்வம், செல்வாக்கு கூடும் வாரமிது.




**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள் , திருவோணம், அவிட்டம் 1,2-ஆம் பாதங்கள்**

ஈட மனதும், எதிர்பார்ப்பு இல்லாமல் உதவும் குணம் கொண்டவர்களே! உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பழைய இனிய அனுபவங் களை நினைத்து மகிழ்வீர்கள். சுப காரியங்கள் இழுபறியாகும். வியா பாரத்தில் போட்டிகள் இருக்கும். வெறுத்துப் போகாமல் போராடி நின் றால் வெற்றி பெற வாய்ப்புள்ள வாரமிது.




**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

எது நடந்தாலும் சலனப்படாமல் பணிகளை திறம்பட முடிப்பவர்களே! புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். சகாக்களுடன் விவாதங்களை தவிர்ப்பது நல் லது. அனுசரித்துப் போவதன் மூலம் அதிகாரம் பெறும் வாரமிது.




**பூரட்டாதி 4-ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

எதையும் திட்டமிட்டு செய்பவர்களே! எதிலும் வெற்றி பெறுவீர்கள். பணம் வரும். தலைமையின் அன்புக்கு பாத்திரமாவீர்கள். வியாபா ரத்தில் ஆரம்பம் பிறக்கும். பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார் கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். சக ஊழி யர்களுக்கு உதவுவீர்கள். வசதி, வாய்ப்புகள் பெருகும் வாரமிது.

## பாபாவின் அருளுரையிலிருந்து...



எந்த வேலையையும் முழு ஈடுபாட்டுடன் செய்யுங்கள். அவை உங்களுக்கு விருப்பம் இல்லாத வேலை என்றாலும், உங்களை நம்பி கொடுக்கப்பட்டிருப்பதால் அதனை எத்தகைய சிரத்தை எடுத்தாவது சிறப்பாக முடிக்க வேண்டும். அவ்வாறில்லாமல், வெறுமனே இயந்திரம் போல செய்யக்கூடாது. இது, எண்ணெய் இல்லாத விளக்கில், பிரகாசிக்காமல் எரியும் திரிக்கு ஒப்பானதாகும். மனதில் ஈடுபாடு என்ற எண்ணெயை விட்டு பணி செய்தால்தான், முடிவும் சுடர்போல பிரகாச மாக இருக்கும்!

# ஆலய வழிபாட்டின் முக்கியத்துவம்

மனத்தை ஒருவழிப்படுத்தவும், கீழ்ப்படிவு, நீதி வழி நிற்றல், தன்னலம் மறுப்பு, பணிவு, இரக்கம் ஆகிய பல சிறந்த பண்புகளை உண்டாக்கி வளர்க்கவும், இறுதி யாக மோட்ச சாம்ராஜ்யம் அடைந்திடவும் வழி காட்டுகின்றன ஆலயங்கள்.

### ஆகம விதிப்படி அமைந்தவையே ஆலயங்கள்

ஆகமங்களில் விதித்துள்ள சிற்ப சாஸ்திரங்களுக்கொப்ப அமைந்துள்ள திருக் கோவில்களே பரம்பொருள் வீற்றிருக்கும் தேவாலயங்கள். ஆகம விதிப்படி அமை யாத ஆலயங்கள் மடாலயங்கள் எனப்படும்.

### சரணாகதி

சாதாரணமாக, நம் கைகள் இரண்டு விரிந்து, வளைந்து, பற்பல செய்கைகளைச் செய்கின்றன. இறைவனுடைய சந்நிதானத்தில் கும்பிடும்போது, அத்தகைய செய்கை கள் எல்லாம் ஒழிந்து, கைகள் ஒன்று சேர்ந்து குவிகின்றன. அவ்வாறு குவிந்திடும் கைகள் ஆண்டவனே ! இனி என் செயல் என்று ஏதும் இல்லை என்பதை உணர்ந்துவிட்டேன். எல்லாம் உன் அருட் செயலே என்ற சரணாகதி தத்துவத்தை உணர்த்து கின்றது.

### விக்கிரஹம்

ஆலயங்களில் விக்ரஹ ஆராதனை முக்கியத்துவம் பெறுகிறது. உலகத்தில் சக்திகள் யாவும் உறையும் இடம் என்று பொருள் தருகிறது. விக்கிரஹம் என்ற சொல், வி - என்றால் விசேஷமான, சிறப்பான, இறைத்தன்மையுள்ள என்று பொருள். கிரஹிப்பது என்றால் ஈர்த்துக்கொள்வது. பல்வேறு மந்திர - தந்திர - யந்திர வழிபாட்டு முறைகளினால் ஆராதிக்கப்படும்போது, இறையருளை முன்வைத்து, இறைத் தன்மையை ஈர்த்துத் தன்னுள் தேக்கி வைத்துக்கொண்டு, தன்னை வணங்கு வோருக்கு அருள் புரியும் வல்லமை உள்ள பொருள்தான் விக்கிரஹம்.

### சிவதன்மம்

இவ்வாறு ஆலய வழிபாட்டை மையமாக வைத்து அமைக்கப்பட்ட வாழ்க்கை முறையே சிவதன்மம் ஆகிறது. சிவதன்மம் என்றால் சைவ ஒழுக்கம் என்று பொருள். சிதம்பரம் மறைஞானதேசிகர் (கி.பி.1560) சிவாகம பரிபாஷா மஞ்சரி என்ற வடமொழி நூலில் சிவதன்மம் பத்துக் கோட்பாடுகளைக் கொண்ட நெறி என்கிறார்:

1. அஹிம்சை. 2. தயை, 3. சத்யம். 4. அடக்கம் 5. வளம், 6. புலனடக்கம், 7. எளி யோர்க்கு வழங்குதல், 8. தியாகம், 9. ஜெபம், 10. தியானம். இக்கோட்பாடுகள் அனைத்தும் ஆலய வழிபாட்டு நெறிக்கு இன்றியமையாததாகும்.

### ஆலயக் கிரியை வகைகள்

சிவாலயங்களில் நடைபெறும் கிரியைகள் மூவகைப் படுத்தப்பட்டுள்ளன:

1. நித்தியக் கிரியைகள். 2. நைமித்தியக் கிரியைகள் 3. காம்யக் கிரியைகள். தினந்தோறும் (குறைந்தது ஒரு காலம், அதிகபட்சம் 12 காலம்) நிகழும் பூஜைகள் நித்தியக் கிரியைகள். ஏதாவது காரணம் கொண்டு நிகழ்வன நைமித்தியக் கிரியைகள் (நிமித்தம் என்றால் காரணம்). இவை விசேஷக் கிரியைகள், அதாவது, சதுர்த்தி, ஷஷ்டி, சிவராத்திரி, பிரதோஷம், பௌர்ணமி, நடராஜர் அபிஷேகம், கும்பாபி ஷேகம்..... போன்ற நாள்களில், அல்லது காலங்களில், அல்லது முகூர்த்தங்களில் விசேஷமாகத் திட்டமிடப்பட்டுச் செய்யப்பெறும் நிகழ்ச்சிகள். ஒரு குறிப்பிட்ட பேறு பெற விழைந்து, ஒருவராலோ அல்லது பலர் ஒரு குழுவாகச் சேர்ந்தோ, செய்யப்படும் கிரியைகள் காம்யக் கிரியைகள்.

## ஆறிலும் சாவு...! நூறிலும் சாவு...!!

இந்த பழமொழி உருவானதற்கு ஒரு புராணக் கதை உண்டு.

குருக்ஷேத்திர போரில் போருக்கு முன்னதாக தனது மூத்த பிள்ளை கர்ணன் என் பதை அறிந்த குந்திதேவி அவனிடம் சென்று பாண்டவர் ஐவருடன் சேர்ந்து கௌரவர்களை எதிர்த்து போரிட அழைக்கிறாள்.

அப்போது கர்ணன், தனது தாய் குந்திதேவிக்கு பதிலுரை அளிக்கிறான்.

அதில், தாயே நான் பாண்டவர் ஐவருடன் சேர்ந்து ஆறாவது ஆளாக போரிட்டாலும் சரி, கௌரவர்கள் நூறு பேருடன் சேர்ந்து போரிட்டாலும் சரி, இறப்பது உறுதி என்பது எனக்குத் தெரியும்.

ஆகவே, ஆறிலும் சாவுதான், அப்படி இல்லாவிட்டாலும் நூறிலும் சாவுதான். எப்படி செத்தால் என்ன? அதற்கு செஞ்சோற்றுக் கடன் கழிக்க என்னை வளர்த்து ஆளாக்கிய துரியோதனனிடமே இருந்து உயிரை விடுகிறேன் என்கிறான்.

கர்ணன் கூறியதுதான் மேற்படி பழமொழிக்கு உண்மையான பொருள்.

# மஞ்சளின் தெய்வீகம்

எந்தவொரு மங்கல காரியம் என்றாலும் அங்கே மஞ்சளுக்கு முக்கிய இடம் உண்டு, இது ஏன் தெரியுமா? மங்கலப்பொருள்களில் மகாலட்சுமியின் அம்சமாகத் திகழ்வது மஞ்சள். மஞ்சள் இருக்கும் இடத்தில் திருமகள் வாசம் செய்கிறாள். அதனால் தான் சுமங்கலிப் பெண்கள் மஞ்சளை உடலில் பூசிக் கொள்கிறார்கள். புத்தாடை அணியும்போதும் அதில் மஞ்சள் தடவி அணி கிறோம்,

சுபநிகழ்ச்சி அழைப்பிதழில் மஞ்சள் தடவிக் கொடுக்கிறோம், எந்த பூஜை என்றாலும் மஞ்சளால் செய்த பிள்ளையாரை வணங்குவதும் நம் வழக்கம். இத்தகைய சிறப்புமிக்க மஞ்சள் கிழங்குச் செடியை பொங்கல் நாளில் புதுப் பானையில் கட்டி அடுப்பில் ஏற்றுவர்.

அந்த மஞ்சளைப் பத்திரப்படுத்தி மறுநாள் காலையில் மஞ்சள் கீறுதல் என்னும் சடங்காகச் செய்வர். வீட்டில் இருக்கும் பெரியவர்கள் அந்த மஞ்சள் கிழங்கினைக் கீறி சிறியவர்களின் நெற்றியில் இட்டு ஆசி வழங்குவார்கள், வீட்டில் உள்ள அனைவரும் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ வேண்டும் என்பதே இந்தச் சடங்கின் நோக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுஜனப் படைப்பிலிருந்து வெகுதூரம் தள்ளியிருப்பதே இலக்கியப் படைப்பு என்பதைக் வாசகர்களுக்கு விரித்து எழுத வேண்டியது அவசியமல்ல. இரண்டும் ஒரே மொழியில்தான் எழுதப்பட்டிருக்கின்றன என்ற போதிலும் படைப்பைப் போலவே வாசிப்பும் இரண்டு வகைப்பட்டதாகவே இருக்கிறது.

இலக்கியத்தின் மொழி கடினமாகவோ எளிமையாகவோ வார்த்தைகளில் நுட்பங்களை வெளிப்படுத்து வதாகவோ விளங்குகிறது. ஆனால் வெகுஜனப் பத்திரிகைகளின் மொழி ஜனநாயகப் பொதுமை கொண்டது. அதன் எழுத்தாளர்களிடம் வெளிப்பாட்டில் தனித்துவம் இருந் தாலும் 'மெனக்கெடலே' தேவைப்படாத மேலோட்ட வாசிப்பை மட்டுமே பொதுமையாகக் கொண்டது. காரணம் பெரும்பான்மையினரின் தேர்வு அதுதான் என்னும் நம்பிக்கை. பெரும்பாலும் அது உண்மை.

நுட்பமே விற்கும் சரக்காக ஆகிப்போகும் எதிர்காலக் கற்பனை உலகில், வெகுஜன வணிகப் பத்திரிகைகளின் பொருளடக் கமும் நுட்பமாகவே அமையும். அதன் நோக்கம் வியாபாரம் மட்டுமே. வியா பாரம் அதனளவில் கீழ்மை யானதும் அல்ல. தேவை என்று இருந்தால் அதை நிறைவேற்றும் அவசிய மும் அனிச்சையாய்த் தோன்றி விடுவதே இயற்கை.



# இணையமும் இலக்கியமும்

-விமலாதித்தமாமல்லன்

கலை இலக்கியத்திற்கான தேவையை இலக்கியப் பத்திரி கைகள் நிறைவுசெய்ய முயன்று குறுங்குழுக்களில் இருந்து நாள டைவில் மீண்டு ஓரளவு விரிவாக் கம் நடந்திருப்பதற்குப் புத்தகக் கண்காட்சி சிறந்த சாட்சியம். அன்றைய, இன்றைய மக்கள் தொகை மற்றும் கல்வி விரிவாக்கத்து டன் புத்தக விற்பனையை ஒப்பிட்டு நம் ரத்தக் கொதிப்பை ஏற்றிக்கொண்டு மகிழ்ச்சி யைக் கெடுத்துக்கொள்ளாதிருப்பது ஆரோக்கியத் திற்கு நல்லது. எனவே அதைத் தவிர்ப்பதே புத்திசாலித் தனம்.

இந்தப் பரவலாக்கத்தில், கல்வி மட்டுமன்றித் தொழில்நுட்பத்தின் - குறிப்பாக இணையத்தின் - தாக்க மும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

எப்படிச் சிறுபத்திரிகைகள் வணிகத்திற்கு எதிராய் சுயேச்சையாகவும் சுதந்திர மாகவும் சுவாசிக்கத் தலைப்பட்டனவோ அதேபோல இன்று இணையத்தைச் சொல்லலாம். இணையத்தின் அவலங்கள் பட்டியலிட்டு மாளாத அளவிற்கு அநேகம் என்ற போதிலும் சுதந்திர எழுத்துக்கு அது தரும் களத்தை எந்தப் பத்திரிகையும் எந்தக் காலத்திலும் கொடுத்துவிட முடியாது. பக்க நெருக்கடியோ ஆசாமிகளின் பக்கவாட்டு நெருக்கடியோ கால நெருக்கடியோ இல்லாமல் எழுத ஒரே இடம் இணையம் மட்டுமே.

இணையத்தின் முக்கியப் பிரச்சினையும் சுதந்திர வெளிப்பாடுதான். தனக்குப் பட்ட கருத்தை அப்பட்டமாக வெளியிட்டால் அடுத்த கணமே விவாதமென்னும் போர்வையில் பக்கச் சார்புகொண்ட ரசிக ரௌடிகளின் அர்த்தமற்ற கொலை வெறிக்கூப்பாடு அலைக் கழிக்கத் தொடங்கிவிடும். அதற்கு முகம்கொடுப்பது நேரவிரயம். ஆனால் பெரும்பாலும் உண்மையான கருத்தை வெளிப்படுத்தாத சமாதானச் சகோதரத்துவச் சகவாழ்வில் முக்தியடைவதை லட்சியமாய்க் கொண் டோரே பெரும்பான்மை என்பதால் தமிழ் எழுத்தாளர்களுக்கு இது பிரச்சி னையே அல்ல.

வன்லைப்பூவைப் பிரத்தியேக நாட்குறிப்பாய் வைத்துக்கொள்வதில் இருந்து தனது நம்பிக்கையின் பிரச்சாரத்திற்கு உபயோகித்துக்கொள்வதுவரை எதற்கு வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ளும் சுதந்திரத்தை எழுத்தாளனுக்கு அளிப்பதாய் இணையமே இருக்கிறது. தெரு நாடகத்தின் உடனடி எதிர்வினை போல எல்லைகளற்ற இணையத்தின் எதிரொலிப்பு பிரமிக்கவைப்பது.

கைத்தட்டலுக்கு மயங்காத கர்மயோகியால் மட்டுமே கலையை மார்போடு இறுக அணைத்துக் கொண்டு இணையத்தில் தப்பித்து நிற்கவும் முடியும். கொஞ்சம் அசந்தாலும் ஆரவார வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டு நீர்த்துப் போகவைக்கும் அபாயச் சுழிப்புகளே அதிகம்.

இணையத்தில் முக்காலுக்கும் மேற்பட்டோர் வயது மற்றும் அனுபவம் காரண மாய், முதிராநிலை வாசகர்களே. அனுபவ மூளையைவிடவும் வாழ்வின் தட்ப வெப்பங்களைக் கண்ட அனுபவ மனம் கிடைப்பதும் வாசித்து அனுபவிக்கும் மனம் கிடைப்பதும் அல்லவா அபூர்வம். தீவிர நுட்ப வாசிப்புக்குப் பழக்கப் படாதவர்களும் அப்படியே கிடைத்தாலும் அதை வாசித்துப் பயிலவியலாத வேலைச் சூழலின் அழுத்தம் காரணமாய், அதிலிருந்து தப்பிக்க இணை யத்தைக் கேளிக்கை வடிகாலாய்ப் பார்ப்பவர்களுமே ஏராளம்.

இன்னும் கொஞ்சம் முன்னேறி, வாசிப்பைப் பழக்கமாக்கிக் கொண்டவர் களில் பெரும்பாலோருக்கு. இலக்கியம் பற்றிய பிரமை பிடித்த துலாக்கோல் கொண்டு பார்க்கையில், எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்கள் எல்லாம் ஒன்றாகவும் நன்றாகவும் இருப்பதான காலல் தோற்றமே தெரிகிறது. தரம் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருப்பது. கண்ணுக்குத் தப்பிவிடுகிறது. ஆகவே விமர்சன எழுத்து விதண்டாவாதத்தையே எதிரொலியாய் எழுப்புகிறது. இந்தத் தீவிர மித வாதிகளுக்கு அரிச்சுவடியிலிருந்து ஆரம்பித்து விளக்குவதற்குள் ஆயுளே முடிந்துவிடும். ஆனால் கண்ணிமைக்காது வெல்ல முடியாக் கர்வத்துடன் காலத் துக்கும் தம் பிரிய எழுத்தாளர்களுக்குச் சிறப்புக் கமாண்டோக்களாய் இணையத் தில் இவர்கள் காவலுக்கு நின்றுகொண்டே இருப்பார்கள்.

ரசிகர் மன்றத் தற்கொலைப்படையைக் காட்டிலும் பலமானது திராவிடக் காவற்படை. இடம் வலம் தீவிர இடது எனக் கட்சிசார் கமாண்டோக்களின் திண் டோள் திறம் சொல்லி மாளாது. ஒரே ஆள் ஒன்பது ஐடியை வைத்துக்கொண்டு முற்போக்குக் கதிர்வீச்சைத் தேச எல்லைகளையெல்லாம் தாண்டிக் கண்டம் விட்டுக் கண்டம் பரப்பிக்கொண்டிருப்பார். இதேபோல் ஒன்பது நபர்கள் குழுவாய் ஒன்றிணைந்தால் அதுவே இணையத்தின் அதிதீவிர இயக்கமாகிவிடும்.

என்றாலும் சலசக்கடைக் காத்திருப்பின் பத்திரிகைப் புரட்டலாய்த் தினந் தோறும் தளத்திற்கு வந்துபோவோரின் எண்ணிக்கையை எல்லாம் தீவிரமாக எடுத்துக் கொண்டு புளகிப்பது கடைசியில் கழிவிரக்கத்திலேயே கொண்டுவிடும். இன்னமும் ஆழ்ந்த வாசிப்பிற்கானது அச்சுவடிவமே.

டுவிட்டரில் அக்கப்போரே அதிகம் எனினும், 140 தட்டல்களுக்குள் உயர் நகைச்சுவையையும் கவித்துவ வெளிப்பாடுகளையும் காணலாம். 140 கேரெக்டர் களுக்குள் எழுத்தின் கேரெக்டரை வெளிப்படுத்துவது என்பது ஆகப்பெரிய சவால். பல்லுடைப்புக் கட்டுரையாளர்கள் கல்லுடைப்புத் தண்டனை போல் டுவிட்டரில் எழுதப் பணிக்கப்பட்டால் மொழி வெளிப் பாட்டில் கூர்மை வர வாய்ப்புண்டு. டுவிட்டரின் பயன் பாடு தனிநபரின் வெளிபாட்டைத் தாண்டிப் பொது அக் கறைகள் சார்ந்து இயங்கவும் இடங்கொடுக்க வல்லது. குறிப்பிட்ட நிகழ்வு அல்லது பொருள் குறித்த முனைப்பைத் தீவிரப்படுத்திப் போராட்ட வடிவமாக்கி உலகின் கவனத்தை ஈர்க்கவும் வழியுள்ளது. 140 தட்டல்களுக்குள் ஏதேனும் ஓர் இடத்தில் - பெரும்பாலும் இறுதியில் - ஒரே வார்த்தையைக் குறிப்பிடும் டுவிட்டுகள் ரெண்டிங் என் ம் அளவீட்டின்படி எண்ணிக் கையில் உச்சத்தை எட்டுவதைச் சுட்டிக் காட்டலாம். டுவிட்டர் உலகம் எதைப்பற்றி அதிகம் பேசுகிறது என்பதன் மூலம் ஊடகங்களின் கவனத்தைக் கவர வாய்ப்புள்ளது. இந்த வகையில் சமீபத் திய எடுத்துக்காட்டாகத் தமிழக மீன வர்கள் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உலக அளவில் எதி ரொலித்த டுவிட்டர் குரலைக் கூறலாம்.

இதைவிடவும் அதிகமாய் எழுத முகநூலின் சுவரும் அதை விடவும் நீளமாய் எழுத அதன் குறிப்பேடும் இடம் கொடுக் கின்றன. எனினும் இரண்டு ஊடகங்களில் பிந்தையதன் வீச்சே அதிகம். ஆனால் டுவிட்டரை ஒப்பிட்டால் முகநூலில் தீவிர வெளிப் பாடு குறைவு என்றே தோன்றுகிறது. இணை யத்தின் வாசகர்கள் பெரும்பாலும் ஒற்றை வரி இரட்டை வரியோடு நிறுத்திக்கொள்பவர்கள் என்னும் குற் றச் சாட்டுக்குப் பொருத்த உதாரணமாய் முகநூலையே கூற வேண் டும். நிலைச் செய்தி என்னும் குறுஞ்செய்திகளைப் படிப்போரே அதிகம். ஆனால் குறைந்த அளவில்தான் என்றாலும் தீவிர விவாதங்கள் முகநூலில் நடப்பதையும் சுட்டாமல் போவது நியாயமல்ல. எல்லாவற்றிலும் கடைசியில் எஞ்சுவது தனி நபரே என்பதுபோல் விவாதிக்கும் பொருளும் நபர்களையும் சார்ந்தே விவாதத் தின் தீவிரமும் விளங்குகிறது.

கிட்டத்தட்ட இறுதி மூச்சை இழுத்தபடி இருக்கும் கூகுள் பிளஸ் என்பது கூடி விவாதிக்க ஆகச் சிறந்த இடம் என்றாலும் இரண்டாம் மூன்றாம் உரைக் கீற்றிலேயே விவாதத்தின் தீவிரத்தை இழக்கவைக்க உற்சாகத்துடன் கிண்டலும் கேலியுமாய் ஓடிவருவோரே ஏராளம். அவர்களைச் சொல்லியும் குற்றமில்லை. வேலை அழுத்தத்தில் இருந்து தப்பிக்க இடையிடையில் இளைப்பாற எட்டிப் பார்ப்போரே அநேகர். அவர்களிடம் தீவிரத்தை எதிர்பார்ப்பது அறிவார்ந்த மடத் தனம்.

இவையனைத்தையும் கபளீகரம்செய்து ஓரிடத்தில் கொண்டுவர கூகுள் பிளஸ் முயல்கிறது. வியாபாரப் போட்டியின் காரணமாய் எழுத்தோடு சேர்ந்து டுவிட்டர் புகைப்படம் போட வழிசெய்கிறது. பிளாக்கை தூக்கிச் சாப்பிடக் கூட்டற்ற இடம் கொடுத்து எவ்வளவும் எழுதிக்கொள் என்கிறது முகநூல்.

ஆனால் இவையனைத்தும் வலைத்தளத்தில் எழுதி வெளியிடப்பட்டிருப் பதைச் சுட்டியின் மூலம் அறிவிக்க இவை பேருதவியாய் இருக்கின்றன.

ஒழுங்கமைதியை மேற்பார்வையிட ஆசிரியர்குழு இருப்பதன் காரணத்தால் அச்சுப் பத்திரிகைகளில் பக்கச் சார்புகள் இருப்பினும் அடிப்படைத் தரம் பேண இருக்கும் வாய்ப்பு இணையத்தில் இல்லாததுமொரு குறை.

அச்சுப் பிரதி, எழுதப்பட்டிருப்பதைப் பற்றிய ஆழ்ந்த வாசகனிடம் ஏற்படுத்தும் ஆழ்மன அங்கீகாரம் அளப்பரியது. இணைய எழுத்து அறிமுகமில்லாத் தொடக் கத்தில் இளக்காரத்தையே எதிர்கொண்டாக வேண்டியிருக்கிறது. எதுவுமே தொடர்ந்த இயக்கத்திலும் இருத்தலிலும் மட்டுமே வலுப்பெறும் என்பது விதியாய் இருக்கையில் இணையம் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியுமா?

விரலெண்ணிக்கையிலான எழுத்தாளர்களைத் தவிர, பெயராக நிலைத்து விட்ட பெரும்பான்மைப் படைப்பாளிகள் தளங்கள் வெளிப்பாடுகளாய் இல்லா மல் வெறும் பிரதிபலிப்புகளாய் எஞ்சிநிற்பது ஏமாற்றமே.

இணையத்தின் இலவச வாசிப்பு புத்தக விற்பனையைப் பாதிக்கும் என்பது ஓரளவிற்கு உண்மைதான். அதற்காக வெள்ளெழுத்துக் கண்ணாடிகளின் விற் பனை அமோகமாகட்டும் என்று மந்தரித்துத் தாயத்து கட்டிக்கொள்ள முடியுமா என்ன? வருங்காலத்தில் கருவிலிருக்கும் உருவம் கருண்டு தட்டச்சியபடியே வெளியில் வந்தாலும் வியப்பல்ல.

இன்னும் இன்னும் என்று இணைய வாசிப்பு எதிர்காலத்தில் பல்கிப் பெருகு வதற்கான வாய்ப்பு அது இலவசமாய்க் கிடைக்கிறது என்பதால் மட்டுமே அன்று. அந்நியப் பணத்தைச் சதா உருமாற்றிக் கணக் கிட்டுக்கொண்டிருக்கும் சொந்த வீட்டார் போலவே பதிப்பகங்களும் ஏதோ வெள்ளைக்காரனுக்கு விற்பது போன்ற பாவனையில் பன்மடங்கு விலையேற்றி விற்பதும் ஒரு காரணம். அப்பித்தப்பி வாங்கிய அச்சுப் பிரதிகளை விமானத்தில் எடுத்துச்செல்வதற்கும் திரும்பக் கொண்டுவருவதற்கும் 'சுக்கு காப்பணம் சுமை கூலி முக்காப்பணம்' என்று தன் னிடம் அழ வேண்டியிருப்பதைக் கணினிக்குள் எப்போதும் விழித்தபடி பார்த்திருக் கும் இணையத்தின் இளிப்பு இன்னொரு காரணம்.

அந்நிய மண்ணில் ஆயிரம் வசதிகள் கிடைத்தாலும் வயிற்றைக் கடந்த மனம் தன் அடையாளத்தைத் தன் மண்ணிலேயே தக்கவைத்துக்கொள்ளப் பார்ப்பது இணைய வாசிப்பிற்கான அதிமுக்கியக் காரணமாகும்.

அச்சுப் பத்திரிகையில் வெளியாகிப் புத்தகமானால் தான் அங்கீகாரம் என் னும் தற்கால யதார்த்தத்தை முற்காலத் தலைமுறையின் மூடநம்பிக்கையாய் ஆக்கப்போகும் எதிர்காலம் தொலைதூரத்தில் இல்லை.


-நன்றி: காலச்சுவடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் அடுத்த ஜனாதிபதி யார்?

சுரேந்திரஜித்.





**அத்வானி இனிமேல் பிரதமராக வாய்ப்பில்லை என்பதால் அவரை ஜனாதிபதியாக்க பி.ஜே.பி. விரும்பும். மேலும் இன்னும் 2 வருடங்களில் மன்மோகன் அரசின் பதவிக் காலம் முடியும் போது அத்வானி 87 வயதானவராகி விடுவார் என்பதால் அப்போது அவரை பிரதமராக்கி 5 வருடம் தொடரவிடுவது சாத்தியமில்லை. மேலும் எதிர்வரும் லோக்சபா தேர்தலில் காங்கிரஸ் தோற்றாலும் பி.ஜே.பி. அறுதிப் பெரும்பான்மை பெறாது என்றே கருதப்படுகிறது.**

இந்த ஆண்டு யூன் மாதத்துடன் இந்திய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவுக்கு வருகிறது. இரண்டாவதுமுறை அவருக்குப் பதவி தருமளவுக்கு அவரது வயது இடம்தராது. மேலும் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக இந்தியாவில் தொடர்ச்சியாக இரு பதவிக்காலங்களுக்கு ஒரே நபரையே ஜனாதிபதிக்கும் வழக்கம் இல்லாமல் போய்விட்டது. 2007ல் (கடந்த முறை) அப்துல்கலாமை இரண்டாவது தடவை ஜனாதிபதியாக்க பி.ஜே.பி. முயன்றாலும் காங்கிரஸ் கட்சி அதற்கு முட்டுக்கட்டை போட்டுவிட்டது. இவ்வகையில் தற்போதைய ஜனாதிபதி திருமதி பிரதீபா பட்டேல் யூனுடன் ஓய்வு பெறுவது அனேகமாக நிச்சயமான ஒன்றாகும். அவருக்கு அடுத்து யார் என்பதே பிரதான கேள்வி. இந்திய ஜனாதிபதி தேர்தலில் நாடாளுமன்றின் இரு அவைகளான மக்களவையும் (லோக்சபா) மாநிலங்களவையும் (ராஜ்யசபா) வாக்களிப்பதுடன் மாநிலங்களின் எம்.எல்.ஏ.க்களும் வாக்களிப்பர். லோக்சபாவில் காங்கிரசுக்கு பெரும்பான்மை இருந்தாலும் ராஜ்யசபாவில் அவ்வாறு இல்லை. காங்கிரஸ் கட்சி தனிப்பெரும் கட்சியாக இல்லை என்பதுடன் மாநிலங்களில் பலவற்றில் காங்கிரசுக்கு போதிய எம்.எல்.ஏ.க்களும் இல்லை. கடந்த 2007ல் நடந்த ஜனாதிபதி தேர்தலின் போது இடதுசாரிக்கட்சிகளின் ஒட்டு மொத்தக் கூட்டணி காங்கிரசுடன் நல்லுறவில் இருந்ததால் காங்கிரசின் வேட்பாளரான பிரதீபா பட்டேல் இலகுவாக கரைசேர முடிந்தது. இந்தமுறையோ காங்கிரசுக்கு இவர்களின் ஆதரவு கிடையாதென்பதுடன் இந்த இடதுசாரிகள் பி.ஜே.பி.யுடன் கைகோர்க்கவும் காங்கிரசுக்கு தண்ணீர் காட்ட இடதுசாரி வேட்பாளர் ஒருவரை பி.ஜே.பி.ஆதரிக்கவும் கூடும். அப்போது காங்கிரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட இடமுள்ளது. இடதுசாரிகளும் பி.ஜே.பி.யும் பரமஎதிரிகளே என்றாலும் காங்கிரசை வீழ்த்த இவ்வாறு உபாயம் வகுப்பது சாத்தியமே. பி.ஜே.பி.யின் வேட்பாளரை இடதுசாரிகள் ஆதரிக்க மாட்டார்கள் என்பதால் மறுதலையாக இடதுசாரிகள் பிரேரிக்கும் ஒருவரை பி.ஜே.பி.ஏற்கலாம். இதுதவிர காங்கிரசுக்கு நெருக்கடி தர இடதுசாரியும் பி.ஜே.பி.யும் அல்லாத ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக்கி அவருக்கு பி.ஜே.பி. ஒருபக்கத்திலும் இடதுசாரிகள் மறு பக்கத்திலும் ஆதரவளித்தால், வெற்றி நிச்சயமாகும். ஜெயலலிதா இவ்வாறு இருதரப்பும் ஏற்கத்தக்க ஒருவராவார். ஆனால் ஜெயலலிதாவின் கனவு ஜனாதிபதி மாளிகையல்ல பிரதமர் நாற்காலியே என்பது சகலரும் அறிந்த உண்மையாகும். ஜனாதிபதி பதவி அதிகாரமற்ற பொம்மை பதவி என்பதால் ஜெயலலிதா இதை விரும்பமாட்டார். அவரை மெதுவாக பிரதமர் பதவிப் போட்டியிலிருந்து அகற்ற நரேந்திரமோடி, முலாயம்சிங், சந்திரபாபுநாயுடு முதலிய அவரது நண்பர்கள் விரும்பக்கூடும். ஜனாதிபதியாக இருந்துவிட்டால் அதன் பின் பிரதமராக வருவதை ஜெயலலிதா நினைத்துப் பார்க்கமுடியாது. மேலும் ஜனாதிபதி பதவியில் இருக்கும் 5 வருடங்களும் கட்சி அரசியலில் ஈடுபடமுடியாது. இது அவரது கட்சி மீதான அவரது பிடியை வெகுவாக தளரவைக்கும். மறுபுறம் பிரதமர் பதவி அதிகாரம் நிறைந்தது என்பதுடன் தீவிர அரசியலில் ஈடுபடுவதற்கு பிரதமர் பதவியால் தடையும் இல்லை. எனவே அதிகாரங்கள் குவிக்கப்பட்ட பிரதமர் நாற்காலியே ஜெயலலிதாவின் குறி என்பதால் அவரை ஜனாதிபதியாக்க அவர் இணங்கமாட்டார்.

எதிர்கட்சிகளின் ஏனைய தெரிவுகளை பொறுத்தவரை முலாயம் சிங் உத்தரப் பிரதேசத்தில் ஆட்சியை கைப்பற்றினால் அவர் தனது மகன் அகிலேஷ் யாதவை முதல்வராக்கிவிட்டு, தான் ஜனாதிபதியாக போட்டியிடக் கூடும். ஜனாதிபதி தேர்தலில் மாநில சட்டமன்ற உறுப்பினர்களும் வாக்களிப்பர் என்பதும் உத்தரப்பிரதேச மாநிலம் அதிகூடிய (403) உறுப்பினர்களைக் கொண்ட மாநிலம் என்பதாலும் அங்கு அடுத்த மாதம் நடக்கவுள்ள தேர்தலில் முலாயம்சிங்கின் கட்சி வென்றால் அவருக்கு கணிசமான எம்.எல்.ஏ.க்கள் கிடைப்பர். அதுவும் அவரது ஜனாதிபதி பதவிக்கு உதவலாம். ஆனால் பி.ஜே.பி.யும் அவருக்கு ஆதரவளித்தால் மட்டுமே இது சாத்தியம். பி.ஜே.பி. தனது கட்சியினர் ஒருவரை ஜனாதிபதியாக்க உடும்புப்பிடியில் நின்றால் எதிரணி முகாம் பிரிந்துவிடும். அத்வானி இனிமேல் பிரதமராக வாய்ப்பில்லை என்பதால் அவரை ஜனாதிபதி யாக்க பி.ஜே.பி. விரும்பும். மேலும் இன்னும் 2 வருடங்களில் மன்மோகன் அரசின் பதவிக் காலம் முடியும் போது அத்வானி 87 வயதானவராகி விடுவார் என்பதால் அப்போது அவரை பிரதமராக்கி 5 வருடம் தொடரவிடுவது சாத்தியமில்லை. மேலும் எதிர்வரும் லோக்சபா தேர்தலில் காங்கிரஸ் தோற்றாலும் பி.ஜே.பி. அறுதிப் பெரும்பான்மை பெறாது என்றே கருதப்படுகிறது. இவற்றை கருதினால் அத்வானியை ஜனாதிபதியாக்குவது சரியான உத்தியாக இருக்கக் கூடும். மேலும் பிரதமர் பதவி போலன்றி ஜனாதிபதி பதவி வெறும் பொம்மைப் பதவி என்பதால் அத்வானி வயதானவர் என்பது ஜனாதிபதி பதவிக்குத் தடையாக அமையாது. அத்வானி ஜனாதிபதியாக ஜெயலலிதா முழு ஆதரவு தரக்கூடும் என்பதும் கவனிக்கத்தக்கது. மேலும் பி.ஜே.பி.சார்பில் அடுத்த பிரதமராக விரும்பும் மூவர் உள்ளனர். மோடி, சுஷ்மா ஸ்வராஜ், அருண் ஜெட்லி ஆகிய இவர்களும் அத்வானியை ஜனாதிபதியாக்கி அவருடன் பிரதமர் பதவிக்கு போட்டியிடுவதிலிருந்து தவிர்க்கமுயல்வர்.

அத்வானி தவிர பி.ஜே.பி.யின் ஜனாதிபதி வேட்பாளர்களுள் திருமதி நஜ்மா ஹெப்துல்லா முக்கியமானவராக இருக்கக் கூடும். மௌலானா அபுல்கலாம் ஆசாத்தின் பேத்தியான இவர் சோனியாவுடன் முரண்பட்டு சில வருடம் முன்புதான் காங்கிரசிலிருந்து விலகினார். காங்கிரசில் இருந்திருந்தால் பிரதீபா பட்டேலுக்கு முன் ஜனாதிபதியாக வேண்டியவர் இவர் தான். ராஜ்யசபா துணைத் தலைவர் பதவியை பல ஆண்டுகள் வகித்த இவரது நாடாளுமன்ற அனுபவம் மிகப்பெரியது. இதனால் கட்சி கடந்த நட்பும் இவருக்கு உள்ளது. இவர் உண்மையில் அடிப்படைவாத பி.ஜே.பி.யினர் அல்ல. எனவே இவரை ஆதிக்க இடதுசாரி முலாயம், ஜெயலலிதா என பலரும் விரும்பக் கூடும்.

இவ்வாறு பி.ஜே.பி. வேட்பாளரை ஏனைய எதிர்க்கட்சிகள் விரும்பாவிடின் முலாயம், சரத்பவார் என எவரையாவது ஆதரித்து காங்கிரசை நெருக்கடியில் தள்ள பி.ஜே.பி.உபாயம் வகுக்கலாம். முன்பு பிரதமர் பதவி கனவில் இருந்தபவார இனிமேல் அது இந்த வயதில் சாத்தியமில்லை என உணர்ந்து ஜனாதிபதியாக வர இணங்கக் கூடும். இதன் மூலம் காங்கிரசின் மத்திய அரசு கூட்டணியும் குழப்பமடையலாம். சரத்பவார் ஜனாதிபதியானால் கட்சியை கைவிட நேரிடும் என்ற சிக்கலும் இல்லை. அவர் இல்லாத போது கட்சியை நடத்த அவரது மருமகன் அஜித் பவார் பலமாக உள்ளார். மகள் சுப்ரியா சூலேவும் ஒரு லோக்சபா எம்.பிதான். ஆனால் பவார் ஜனாதிபதியானல் அவரது கட்சி மத்திய அமைச்சர் பதவிகளை இழக்க நேரிடுவதுடன் மன்மோகன் அரசு கவிழவும் இடமுண்டு. இவ்வளவு தீவிரமுடிவை பவார் இந்த முதிர்வயதில் துணிந்து எடுக்கமாட்டார் என்றே பலரும் கருதுகின்றனர்.

காங்கிரசைப் பொறுத்த வரை துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரியையே நியமிக்க அக்கட்சி விரும்புவதாக தெரிகிறது. இல்லாவிடில் கர்நாடக ஆளுநரும் மூத்த காங்கிரஸ் தலைவருமான H.R. பரத்வாஜ், மஹாராஷ்டிர தலைவர் சுஷில் குமார் ஷிண்டே (இவர் தலித் சமூகத்தினர்), சபாநாயகர் மீராகுமார் (இவர் பாபு ஜகஜீவன்ராமின் புதல்வியும் தலித் சமூகத்தினரும் ஆவார்) ஆகியோரில் ஒருவரை வேட்பாளராக்கக் கூடும். அடுத்த மாதம் நடக்கும் 5 வட மாநில தேர்தல்களில் உத்தர காண்ட் மற்றும் பஞ்சாப்பில் காங்கிரஸ் தற்போதுள்ள இடங்களை விட அதிகம் வென்று ஆட்சியைப் பிடிக்க வாய்ப்புள்ளது. இதனால் ஜனாதிபதி தேர்தலில் தனக்கு சார்பாக வாக்களிக்க அதிக எம்.எல்.ஏ.க்கள் காங்கிரசுக்கு கிடைப்பர். இது தவிர உத்தரப்பிரதேசத்தில் இப்போதுள்ள 20 எம்.எல்.ஏ.க்களை விட கணிசமான இடங்களை பெற ராகுல், பிரியங்காவின் பிரசாரம் உதவுமென கட்சி கருதுகிறது. கடந்த 2007ல் ஜனாதிபதி தேர்தலில் இருந்ததைவிட அதிக மாநிலங்களில் இப்போது காங்கிரஸ் ஆட்சியிலுள்ளது. 2007ல் கட்சிக்கு இருந்த 146லோக்சபா எம்பிக்களுடன் ஒப்பிட இன்று கட்சிக்கு 207 எம்பிக்கள் உள்ளனர். இதுவும் காங்கிரசுக்கு சாதகமாகும் என கட்சியினர் கூறுகின்றனர். எவ்வாறாயினும் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளரை தீர்மானிப்பதில் அடுத்த மாத வடமாநில தேர்தல்கள் முக்கிய பங்கு வகிக்கும் என்பது தெளிவான உண்மையாகும்.


சுகத்துவம்

நரைமுடியை கறுப்பாக்க, 3வாரத்தில் வளர்ச்செய்ய, உயரத்தை அதிகரிக்க, நிறை குறைக்க, வெண் குஷ்டம், தழும்பு, முகப்பரு நீக்க, முகம் வெண் மையாக, மதுபானம், புகைத்தலை கைவிட ஆங்கில மருந்து (வாசி மூலமும்).

தொடர்பு - 0715175957




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச் சுடர்

# கடி நாய் கவனம்



**சில** வீடுகளுக்கு நாம் செல்லும் போது எம்மை வரவேற்கும் வரவேற்பு வார்த்தைகள் 'கடி நாய் கவனம்'.

ஒரு வீடு. உயர்ந்த மதில். உயரமான கேற். கேற் நடுவில் தொங்கிக் கொண்டிருந்த வாசகம் 'கடி நாய் கவனம்'.

காற்சட்டையோடு நின்ற அந்தப் பக்கத்து வீட்டு குடிசைப் பையனைக் கேட்டேன். ''உண்மையில் அந்த வீட்டில் நாய் நிற்கிறதா?'' அது கடிக்குமா?

அந்த வீட்டில் நாய் நிற்கிறது ... அது கடிக்குமா தெரியாது. ஆனால் அந்த வீட்டு ஐயா ஒரு கடி நாய். எந்த நேரமும் தமது மனைவி, பிள்ளைகளுடன் வள்ளென்று நிற்பார். வெளியார் ஆரும் வந்தால் சொல்லவே தேவையில்லை. வள் வள் தான் என்றான் பையன்.

சின்னப் பையன் தானே பலதையும் பத்தையும் சொல்வான்.

கூட நின்ற மற்றைய பையன் சொன்னான், அந்த நாயைக் கவனமாக இருக்கச்சொல் லித்தான் கடி நாய் கவனம் போட் பலகை என்றான். (கேற் நடுச் சென்ரரில) அந்த அறிவித்தல் பலகை தொங்குவதால் அது போட் பலகை தான். முதலாமவன் நாய்களுக்கு வாசிக்கத் தெரியாது. ஆகவே சனத்தை எச்சரிக்கப் போட்ட அறிவித்தல் தான் அது என்று வாதிட்டான்.

நாய்களுக்கு வாசிக்கத் தெரிந்தால்...

இப்போ நிறையச் சந்தோசப்படுங்கள். வீதி விபத்துச் செய்திபோல, அன்றாட தினசரிகளில் நாய் பற்றிய செய்திகளும் அதிகளவு இடம் பெறுகின்றன. செய்திகளுடன் படங்களும் போட்டால் நாய்களின் மகிழ்ச்சி இன்னும் இரண்டு மடங்காகும்.

நட்ட நடு வீதியில் நாயினால் கடியுண்ட பாதசாரி. என்று செய்தி போட்டு - படத்தையும் போட்டால், நாய் எவ்வளவு மகிழ்ச்சி அடையும். நாயினால் கடியுண்ட மனிதனும் நாயும் என்று படத்தைப் போட்டுவிட்டு- படத்தில் இடது பக்கம் நிற்பவர் கடியுண்ட மனிதர் வலது பக்கம் கடித்த நாய் என்று குறிப்புப் போடாவிட்டால் இடது பக்கம் நிற்பது நாய் வலது பக்கம் நிற்பவர் மனிதன் என்று மாறி விளங்கிக்கொள்ளமாட்டார்கள். ஆனால் நாய் அப்படி மாறி நினைத்துக் கொள்ளாமலிருக்க அப்படி அடிக் குறிப்புப் போடுவது அவசியம். ஏனென்றால் அந் நாய்கள் வசிக்கும் வீட்டில் வீட்டுக்காரன் அடிக்கடி பிள்ளைகளை, மனைவியைப் போ நாயே ... வா நாயே என்று கூறக் கேட்டிருப்பதால் நாய் என்று தன்னைக் குறிப்பிடுகின்றார்களா அல்லது கடியுண்டவரைக் குறிப்பிடுகிறதா என சந்தேகம் எழ வாய்ப்பு உள்ளது.





நாய்களுக்கு வாசிக்கத் தெரியாமலிருப்பது ஒருவகைக்கு நல்லதுதான். இல்லையேல் பஸ்ஸுக்கு காத்திருந்த பயணிகளை வெறிநாய் கடித்தது என்ற செய்தியை வாசித்துவிட்டு தன்னைப்பற்றியும் செய்தி வராதா என்ற எதிர்பார்ப்பில் ஏதும் வில்லங்கமான செயற்பாடுகளில் நாய்கள் இறங்கிவிடும். ஒரு மூன்று வயதுச் சிறுமியைக் கடித்த நாய், 30 நிமிடங்களில் மேலும் ஒரு யுவதியைக் குதறியுள்ளது - இச் செய்தியை வாசிக்கும் நாய் 30 நிமிடத்துள் 3 பேரைக் கடித்தால், அது பற்றிய செய்தியாக இருக்கும் என நினைக்கும். அதனைச் செயலில் காட்டப் புறப்படும். இப்படியே போய் நாளடைவில், கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறும்.30 நிமிடத்துள் 30 பேரைக் கடித்த நாய் எனச் செய்தி வருவதற்காகக் கடினமாக அந்த நாய் உழைக்கத் தொடங்கிவிடும். இன்னொரு நாய் அச்சாதனைச் செய்தியை வாசித்துவிட்டு கின்னஸ் றெக்கோட் உடைக்கப் புறப்பட்டால்... நம் பாடு அதோ கதிதான்.

அருணாசலம் எனது நண்பர். அவர்கள் வீட்டில் ஒருஅழகான பெண் நாயை வளர்த்தனர். அதற்கு பைரவி எனப் பெயர் சூட்டி இருந்தனர்.

ஒரு நாள் அருணாசலமும் தம்பியாரும் தங்களது ஊருக்கு வெளியே 10 கிமீ தொலைவில், 60கிமீ வேகத்தில், மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர்.

தூரத்தே ரோட்டைக் குரோஸ் செய்தவாறு, ஒரு நாய் ஓடியது. மோட்டார் சைக்கிள் ட்றைவிங் செய்து கொண்டிருந்த அருணாசலதின் தம்பியார்,

''அட அண்ணை... அங்கை எங்கட பைரவி ரோட்டைக் கடந்து வேகமாக ஓடுது'' என்றார்.

டக் கெண்டு சிலோ பண்ணி, நிற்பாட்டு... நிற்பாட்டு என்று அவசரப்படுத்தினார்.



பின்னாலிருந்து அருணாசலம், வேகத்தைக் குறைத்து பிரேக் அமுக்க, கணக்காக பைரவி ரோட்டைக் கடந்த இடத்தில் வந்து தரித்து நின்றது மோட்டார் சைக்கிள். மோட்டார் சைக்கிள் நிற்கவும் ஐந்தாறு நாய்கள் வரிசையாக பைரவி சென்ற திசையில், ரோட்டை வேகமாகக் குறுக்கறுத்து செல்லவும் சரியாக இருந்தது. ''பார்த்தாயா... பைரவி போனால், பின்னால் நாலைந்து பைரவன்கள் எப்படியாவது வருவார் என்றார். அதில் மோதுப்படாமலிருக்கத்தான் அவசரமாக நிறுத்துவித்ததாக அருணாசலம் விளக்கினார். அப்போது தான் தம்பியார் யோசித்தார். வந்த வேகத்திற்கு விட்டிருந்தால் இருவரும் டமார் தான்.

இதே போன்றுதான் வீதிகளுக்கு ஒரு பந்து வந்தால், அதனைத்தொடர்ந்து, ஒரு சிறு பிள்ளை அப்பந்தினை எடுக்க ஓடி வரும். வாகனம் செலுத்துபவர்கள் இதனை மனதில் இருத்தி விழிப்பாகவும், எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

வீதிகளில் நாய்கள் குறுக்கறுத்து ஓடும் இடங்களில் - 'நாய்கள் குறுக்கறுத்து ஓடும்' இடம் என



ஒரு எச்சரிக்கை அறிவுறுத்தல் பலகை இடப்பட்டால் நாய் - மோட்டார் சைக்கிள் விபத்தைக் குறைக்கலாம். அல்லது குறிப்பிட்ட இடங்களில்; நாய்கள் குறுக்கறுத்து ஓட உள் நுழையும் வழி- வெளியேறும் வழி என நாய்களுக்கு விளங்கிய மொழியில் அறிவித்தல் போடுவதன் ஊடாகவும் விபத்தைக் குறைக்கலாம்.

நாய்கள் மோட்டார் சைக்கிள் ஓடினால்தான் றைவிங் இலுள்ள சிக்கல் அவற்றிற்கு விளங்கும். வீதியில் கண்டபாட்டிற்கு குறுக்கறுத்து ஓடக் கூடாதென்று அவற்றிற்கும் தெரியவரும்.

நான் வருகின்ற வழியில், பிற்பகல் நேரத்தில், ஒருவர் தமது வீட்டு முன் கேற்றடியில் வந்து அமர்ந்து கொள்வார். அவரது செல்லப் பிராணியும், ஜிம்மியோ, ஜூலியோ- பெயர் தெரியாது. அதுவும் வந்து சுருண்டு படுத்துக்கொண்டிருக்கும். யாராவது அதனருகில் சைக்கிளில் சென்றால் கொஞ்சத்தூரம் குரைத்தவாறு, துரத்திச் செல்லும் . அவர்கள் திடுக்கிட்டுப் பயந்தால், அந்த நாய்ச் சொந்தக்காரர் தான் ஏதோ சாதனை படைத்தவர்போல மகிழ்வு கொள்வார்.

அன்றும் அப்படித்தான். தனது நண்பருடன் அதிலிருந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தார். ஒரு பெண் பிள்ளை சயிக்கிளில் செல்ல, நாய் வழமை போன்று தனது வீரத்தைக் காட்டியது; அவர்கள் அதனைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தனர். எதிர்த் திசையிலிருந்து வந்த நான் அவர்களது இரசனையைக் கண்டு முறைத்துப் பார்த்தேன். இந்த நாய் எங்களுக்குப் பேச்சு வாங்கித் தரும் போல இருக்குது... ஓடு உள்ளுக்கு என்று ஒப்பாசாரத்திற்கு நாயை விரட்டினர்.

ஆனால் நாய்கள் பாவம் ஒப்பாசாரத்திற்காக எதனையும் புரிவதில்லை. வீட்டில் வீட்டுக்காரருடன் சேர்ந்து குதூகலிக்கப் பழகியவை, வீதியிலும் அதே குதூகலத்தை எதிர்பார்க்கின்றன. ஆனால் பாதையில் போவோர் வருவோர்தான் தாமும் மிரண்டு நாயையும் மிரளச் செய்து ஆபத்தில் மாட்டிக்கொள்கின்றனர்.

**செ.செல்வதாசன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் சுடர்





# பெண்களின் அழகைக் குலைக்கும் செலுலைட்!

பெண்களுக்கு அதிகப்படியாக கொழுப்பு சேரும் இடம், தொடை, இடுப்பு மற்றும் பின் பகுதி தான்! குழி விழுந்த, மேடு பள்ளமான தோற்றத்தை தரும். இந்த கொழுப்புக்கு பெயர் தான் செலுலைட்.

**எதனால் செலுலைட் உருவாகிறது?**

எண்ணெயில் பொரித்த உணவு, மது, கஃபைன் (கோப்பியில் உள்ளது) சர்க்கரை ஆகியவை செலுலைட் உருவாக முக்கிய காரணம். அத்தோடு, ஹார்மோன் மாத்திரைகள் சாப்பிடுவது, பரம்பரையாக வருவது, உடற்பயிற்சி அதிகம் இல்லாதது, இவற்றாலும் செலுலைட் உருவாகிறது.

**செலுலைட்டை ஒழிப்பது எப்படி?**

செலுலைட்டை ஒழிக்க இரண்டு வழிகள் உண்டு.

**1. இயற்கை வழி: உடற்பயிற்சி**

வருவதற்கு முன் காப்பது நல்லது, என்பதை மறந்து விடாதீர்கள். கொழுப்புச் சத்து உள்ள உணவை சாப்பிட்டு விட்டு உடற்பயிற்சி செய்தால் பயனில்லை. உடற்பயிற்சியால் தற்போது இருக்கும் செலுலைட்டை தான் குறைக்க முடியும்.

உணவுக் கட்டுப்பாட்டால்தான் செலுலைட் உருவாகுவதைத் தடுக்கலாம். எடை குறைக்க பத்து நாள் பட்டினி கிடந்தால் பயனில்லை. இந்த வகையான டயடிங் உங்கள் தசைகளைக் குறைத்து உங்களை பலவீனமாக்கும்.கொழுப்பு அப்படியே தங்கிவிடும். வறுத்த, பொரித்த உணவுப் பொருட்கள், நெய், அசைவ உணவு ஆகியவற்றை சாப்பிடுவதைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு வாரத்தில் மூன்று நாட்களாவது 1/2 மணி நேரத்திற்கு உடற்பயிற்சி செய்தால் தான் பயனளிக்கும்.

தண்ணீர் குடிப்பது குறைந்தாலும் செலுலைட் உருவாகும். அதனால் தினமும் 10,12 டம்ளர் தண்ணீர் குடிப்பது நல்லது.

**பிரஷ்:** நம் முன்னோர்கள் தேங்காய் நாறால் உடலை தேய்த்துக் குளிப்பது வழக்கம். இது எந்த அளவுக்கு நம் உடலுக்கு நல்லது என்பது இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது. தேங்காய் நாரை, உடலை தேய்க்கும் பிரஷ் போல் உபயோகிக்கவும். பிளாஸ்டிக் பிரஷை விட இது பன்மடங்கு சிறந்தது.

**செயற்கை முறை:**

லைபோஉஅக்சன்: இந்த முறையில் ஒரு சின்ன டியூப்பை கொழுப்பு இருக்கும் இடத்தில் விட்டு, கொழுப்பு உறிஞ்சப்படுகிறது. இதனால் கொழுப்பு குறைந்தாலும் வளவளப்பான தோற்றத்தை அந்த இடம் இழந்து விடுகின்றது. அது மட்டுமல்லாமல் இதில் அதிகமாக வலி ஏற்படும். ஒரு மாதம் வரை தழும்புகள் நீடிக்கும்.இது பெரும்பாலும் பெண்களுக்குத்தான் ஏற்படுகின்றது. ஆனால் ஆண்கள் அதிர்ஷ்டசாலிகள் என்று நினைக்க வேண்டாம்! ஆண்களைப் போல் நமக்கு வழுக்கை ஏற்படுவது இல்லையே என்று நினைத்து சந்தோஷப்பட வேண்டியது தான்!

# முதுகை மறைக்கவும் வேண்டுமோ?



குளிக்கும் போது நாம் அதிகம் கவனம் செலுத்தாத பகுதி முதுகு. இதனால் பொதுவாக முதுகுப் பகுதி அழகிழந்து, மங்கலாக தோற்றம் அளிக்கிறது. அழகான முதுகு தெரியும் வகையில் பிறர் அணியும் உடைகளைப் பார்த்து நீங்கள் இனி பொறாமை பட வேண்டாம்! இதோ உங்கள் முதுகு அழகு பெற சில குறிப்புகள்.

குளிக்கும் போது முதுகு தேய்க்க உங்கள் கைகளை விட பிரஷ் உபயோகிப்பது நல்லது. முதுகுப் பகுதியை முழுவதாக சுத்தம் செய்ய இப்பொழுது நீண்ட கைப்பிடி உள்ள பிரஷ் கடைகளில் கிடைக்கிறது.

வாரத்தில் ஒரு முறை சந்தனம் மற்றும் பன்னீர் கலந்த கலவையை முதுகில் தடவவும். உலர்ந்த பிறகு கழுவிவிடவும். இது முதுகிற்கு நல்ல பொலிவை தரும்.

முதுகை ஸ்க்ரப் செய்வதால் உயிரிழந்த சருமம் அகன்று முதுகு புத்துயிர் பெறும்.கடையில் கிடைக்கும் ஸ்க்ரப் உபயோகிக்க விருப்பமில்லை என்றால், வீட்டிலேயே தயாரித்துக் கொள்ளலாம்.

உலர்ந்த சருமத்திற்கு : இரண்டு தேக்கரண்டி சர்க்கரையுடன் நான்கு தேக்கரண்டி ஆலிவ் எண்ணெய்யை சேர்க்கவும். இந்தக் கலவையால் முதுகை நன்றாக தேய்க்கவும். பிறகு கழுவவும்.

எண்ணெய் பசை சருமத்திற்கு: இரண்டு தேக்கரண்டி சர்க்கரையுடன் ஆறு தேக்கரண்டி எலுமிச்சை சாற்றை சேர்க்கவும். இதைக் கொண்டு முதுகை நன்றாக தேய்த்து, பின் கழுவவும்.

இது மட்டுமில்லாமல் நேராக நிமிர்ந்து நடப்பதும் உங்கள் முதுகிற்கு அழகை சேர்க்கும்.

இந்த குறிப்புகளை பின்பற்றினால், அடுத்த முறை ஷாப்பிங் போகும் போது முதுகை மறைக்கும் உடைகளை தேர்ந்தெடுக்க அவசியமில்லை!

# கண்ணில் உள்ள கருவளையத்தை நீக்குவது எப்படி?



வெற்றிலைப் போட பயன்படுத்தும் சுண்ணாம்பை ஒரு பட்டாணி அளவு எடுத்துக் கொள்ளுங்கள். அதை ஒரு கப் குளிர்ந்த நீரில் கரைத்து சுமார் ஒரு மணி நேரம் அப்படியே வைத்து விடுங்கள். அந்த சுண்ணாம்பு நீரானது தெளிந்தவுடன், அதில் இருந்து 2 ஸ்பூன் தெளிந்த தண்ணீரை வேறொரு கிண்ணத்தில் பிரித்தெடுத்துக் கொள்ளுங்கள்.

பிரித்தெடுத்த தண்ணீரில் சிறிது எலுமிச்சைச் சாறும் பிழிந்து வடிகட்டிக் கொள்ளுங்கள். தொடர்ந்து, இரண்டையும் ஒன்றாகக் கலந்து, அதை ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை கண்ணை சுற்றி பூசுங்கள். கண்விழியில் பட்டுவிடக்கூடாது. இப்படி தொடர்ந்து செய்து வந்தால் சில நாட்களில் கண் கருவளையம் மறைந்து விடும்

# பெண்கள் பற்றிப் பெரியார்.



பெண்ணடிமை தீர்ந்தால்தான் - மக்கள் அடிமை மனப்பான்மை நீங்கும் என்று கண்ட பெரியார் - பெண்களுக்கு மட்டும் என அவர்களை அடக்கி - ஒடுக்கிக் கட்டுப் படுத்தி வைப்பதற்காகக் கூறப்பட்ட கருத்துகளையும் -அதனோடு கலந்த கற்பனைகளையும் எல்லாம் கடுமையாகக் கண்டிக்கலானார்.

பெண்கள் பாவப்பிறவிகள் என்பதாகக் கருதி அவர்களைத் தேவதாசிகளாக - விற்பனைப் பண்டமாக, பிள்ளை பெறும் இயந்திரமாக தொண்டு செய்யும் தகுதியன்றி வேறு தகுதியற்றவராக, விதவையாகிவிட்டால், மறுமண உரிமையற்றவராக, சொத்துரிமை இல்லாதவராக அடிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையை மாற்றுவதற்கான புதிய சிந்தனையை பெரியார் வரைச்செய்தார்.

புரோகிதச் சடங்குகள் நீக்கிய திருமணம்,
சாதி வேற்றுமை ஒழிக்கும் கலப்புத் திருமணம்,
விதவைப் பெண்ணின் மறுமணம்

முதலாக மனித வாழ்வில் இடம்பெறும் தலையாய திருமண நிகழ்ச்சியைச் சமுதாய மாற்றத்துக்கான உரிமை உணர்வு தழைக்கும் முறையில் நடத்தும் புதுமை வழிகண்டார்.

மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளிலும், அனைத்து நிகழ்ச்சிகளிலும், மதத்தின் பிடிப்பும், அதனால் ஏற்படும் மனப்பான்மையும் தகர்க்கப்படுவதற்கு வழி காணும் பணியே அவரது பணியாயிற்று.

ஒழுக்கம், நேர்மை, உண்மை, கடமை, தருமம், புண்ணியம், கல்வி, கற்பு திரு மணம் முதலான பல்வேறு பொருள் குறித்தும் அவற்றின் அடிப்படையை - அவை மதிப்பீட்டையும் அப்படியே ஒப்புக்கொள்ளத் தேவையில்லை என்பதும், மனிதனின் அறிவு தெளிவடைய அவையெல்லாம் மறு ஆய்வு செய்யப்படவேண்டும் என்பதுமே அவரது நோக்கமாயிற்று.

எல்லோரும் ஒரு குலம் ஒரு சமம் ஒரு நிறை என ஒக்கலாக வாழ்வதற்குத் தடையாக இடையூறாக உள்ள எதனையும், அறிவு வழியில் தகர்த்து எறிந்து சமத்துவ சுயமரியாதை வாழ்வை அனைவருக்கும் உரித்தாக்குவதே பெரியாரின் குறிக்கோள்,

# சிக்கன் தக்காளி சோல்



தேவையான பொருட்கள் :

- கோழி இறைச்சி 1 கிலோ
- தண்ணீர் 4 கப்
- அரைத்த முந்திரி 150 கிராம்
- தக்காளி சாஸ் 1/2 கோப்பை
- மிளகாய் வற்றல் 4
- இஞ்சி, பூண்டு விழுது 2 தேக்கரண்டி
- தனியா தூள் 2 தேக்கரண்டி
- சீரகத் தூள் 2 தேக்கரண்டி
- மிளகாய் தூள் 2 தேக்கரண்டி
- எண்ணெய் 2 மேசைக்கரண்டி
- வறுத்த முந்திரி 10
- உப்பு தேவைக்கேற்ப
- வேகவைத்து ஸ்லைஸ் செய்த முட்டை- 2

செய்முறை :

1. 4 கோப்பை தண்ணீரில் கோழி இறைச்சியை வேகவைக்கவும்.


2. 4 கோப்பை தண்ணீர் சுண்டி, ஒரு கோப்பையாக மாறியவுடன் இறைச்சியையும் மீதமுள்ள தண்ணீரையும் இறக்கி வைக்கவும்.

3. எண்ணெயை சூடாக்கி, அதில் அரைத்த முந்திரி, தனியாத் தூள், சீரகத்தூள், மிளகாய்தூள், உப்பு, மிளகாய் வற்றல் இவற்றைச் சேர்த்து நன்றாக வதக்கவும்.

4. வேகவைத்த கோழி இறைச்சியை (மீதமுள்ள தண்ணீருடன்) சேர்த்து குறைந்த தீயில் சமைக்கவும்.


5. அதில் தக்காளி சோலை சேர்த்து 10 நிமிடம் சமைக்கவும்.

6. ஸ்லைஸ் செய்த முட்டை மற்றும் வறுத்த முந்திரியை மேலே தூவி அழகுபடுத்தி பரிமாறவும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பாடசாலைப் பருவத்தில்....



## தன்னம்பிக்கை + விடாமுயற்சி

# அப்துல் கலாம்

ஆசியாப் பிராந்தியத்தில் விஞ்ஞான முன்னேற்றத்தை நிரூபிக்கும் வகையில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே இந்தியா தனது ஏவுகணையை செலுத்தியதன் மூலமாக விண்வெளி ஆராய்ச்சியில் காலடி எடுத்து வைத்தது. அதனைத் தொடர்ந்து அது செய்மதிகள், ஏவுகணைகள் எனப் பல வெற்றிகரமான சாதனைகளை நிலைநாட்டி வருகின்றது.

இச்சாதனைகளின் பின்னால் அறிவுத்திறன் மிக்க ஒருவர் உள்ளார் என்றால் அது டாக்டர் அப்துல் கலாம் அவர்களே என்பது மிகையாகாது. உலகில் கீர்த்தி பெற்ற விண்கலங்கள் மற்றும் அதனைச் செலுத்தும் சாதனங்களை கட்டமைக்கும் பொறியியலாளராக மாத்திரமல்லாது இந்தியாவின் 11வது ஜனாதிபதியாகவும் விளங்கியவராவார்.


இவரது நற்பண்புகள் மற்றும் தன்னடக்கத்திற்காக நாட்டு மக்கள் அனைவராலும் 'மக்களின் ஜனாதிபதி' எனப் போற்றப்படுபவர்.

இந்தியாவின் விதியினை மாற்றும் பொறுப்பினைத் தனது தொலை நோக்காகக் கொண்டு செயற்படுபவர். புகழ்பெற்ற விஞ்ஞானி, அரசியல்வாதி, தேசாபிமானி என்பவற்றிற்கெல்லாம் அப்பால் தலைசிறந்த மனிதநேயம் மிக்கவர் எனச் சகலராலும் போற்றிப் புகழப்படுபவர்.

தமிழ் நாட்டின் இராமேஸ்வரத்தில் ஓர் சாதாரண குடும்பத்தில் 15.10.1931ல் பிறந்தார். இவரது தந்தையாரான அப்துல் பகீர் ஜெயினுலாப்தீன் ஓர் மீன்பிடிப்படகின் உரிமையாளர். தாயாரின் பெயர் ஆஷியம்மா.

தனது ஆரம்பக் கல்வியை இராமேஸ்வரத்தில் உள்ள ஒரு சிறிய பாடசாலையில் ஆரம்பித்தார். உயர்கல்வியை இராமநாதபுரத்தில் உள்ள உயர்பாடசாலையில் தொடர்ந்தார். மேற்கொண்டு இளநிலைப்பட்டதாரிக் கல்வியைத் திருச்சிராப்பள்ளியிலுள்ள புனித சூசையப்பர் கல்லூரியில் கற்றார். இவர் பௌதீகவியல் பாடத்தில் தலைசிறந்து விளங்கினார். 1960இல் விண்கலம் மற்றும் அதனைச் செலுத்தும் சாதனங்களை உருவாக்கும் தொழில்நுட்பவியலில் விஞ்ஞானியாகப் பரிணமித்தார்.

இந்தியாவினால் முதன்முதலில், 1980களின் ஆரம்பத்தில் ஏவப்பட்ட 'ரோகினி' என்ற பெயரைக் கொண்ட செய்மதியின் மேம்பாட்டில் இவரின் இன்றியமையாத பங்களிப்பு குறிப்பிடத் தக்கதொன்றாகும்.



சர்வதேச ரீதியில் இந்தியாவும் விண்வெளி ஆராய்ச்சியில் ஓர் உறுப்பினை வகுப்பதின் பெருமை முக்கியமாக இவரையே சாரும்.

அத்துடன் இந்தியாவின் ஒருங்கிணைந்த பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் ஒருவழிகாட்டல் ஏவுகணை அபிவிருத்தித் திட்டத்தின் (IGMDP) பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் விளங்குபவர் டாக்டர் அப்துல்கலாம்.

இந்தியாவின் 'அக்னி' மற்றும் 'பிரித்வி' ஏவுகணைகள் என்பன இவரது அறிவுத் திறனின் வெளிப்பாடுகளேயாகும், அதனைத் தொடர்ந்து வானில் ஏவப்படும் ஏவுகணைகள் மற்றும், ரொக்கட் தொழில்நுட்பத்தில் 'இந்தியாவின் ஏவுகணை மனிதன்' என எல்லோராலும் அறியப்பட்டவர்.


1998இல் நடத்தப்பட்ட 'பொக்ரான் - II' அணுப் பரீட்சைகளினால் உலகில் பலராலும் புகழப்பட்டு, விமர்சிக்கப்பட்டவர், அதுமட்டுமல்லாது இவர் பாதுகாப்பு அமைச்சரின் விஞ்ஞான ஆலோசகராகவும் அத்துடன் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் செயலாளராகவும் பதவிகளை வகித்தார்.

இவர் ஒரு விஞ்ஞானியாக, நாட்டுப்பற்றாளராக, அரசியல்வாதியாக விளங்கியது மட்டுமல்லாது, இளஞ்சமுதாயத்தினரைத் தனது உணர்வூட்டும் எழுத்துக்களின் மூலம் ஊக்கமளிப்பவராகவும், புத்துணர்ச்சி ஊட்டுபவராகவும் விளங்குகின்றார். அவர் எழுதிய நூல்கள் யாவும் நாட்டின் மேம்பாட்டிற்கு அர்ப்பணிப்புடையனவாகவே விளங்குகின்றன.

அவரது 'எரியும் சிந்தனைகள்' (Ignited Minds) எனும் நூல் ஆழ்ந்த, மனதைக் கவரும் கருத்துக்களைக் கொண்டுள்ளது. அவர் முன்னர் ஜனாதிபதியாக விளங்கிய சமயத்தில் ஓர் உயர்பாடசாலைக்கு விஜயம் செய்த போது அங்கு சந்திக்க நேரிட்ட 'சினீகல் தக்கர்' என்ற பெயரையுடைய ஒரு மாணவியிடம் "உங்களது எதிரி யார்?" எனும் கேள்வியைக் கேட்ட பொழுதில் "வறுமையே எமது எதிரி!" என்ற அம்மாணவியின் பதிலின் காரணமாக, அவர் மனதில் உதித்த கருவே குறித்த நூலினை எழுதவைத்தது. இந்நூல் பல நல்ல சீரிய சிந்தனைகளைக் கொண்டது.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல இந்தியாவின் பலம் மற்றும் பலவீனங்களை வெளிப்படுத்தி, விரைவில் இந்தியாவினை உலகின் பொருளாதாரச் சக்திபடைத்த முதல் நான்கு நாடுகளில் ஒன்றாக 2020இல் வருவதற்கு வழிசமைக்கும் விதத்தில் '2020இல் இந்தியா' எனும் மில்லேனியத்திற்கான ஒரு தொலைநோக்கு நூலினை எழுதியுள்ளார் டாக்டர் அப்துல்கலாம்.

இவர் நம்நாட்டு பல்கலைக்கழகங்களுக்கு விஜயம் செய்து தந்து பொன்னான அறிவுரைகளை வழங்குகிறார். அவரது ஆக்கபூர்வமான ஆலோசனைகள், அறிவுரைகள், வழிகாட்டல்கள் நிச்சயமாக எமது இளந்தலைமுறையினருக்கு நல்லுணர்வுகளையும், ஆக்கபூர்வமான சிந்தனைகளையும் உருவாக்கும் என நம்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளாலிப் பயணம்

**கிளாலி – பூநகரி படகுச்சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும்**

❑ ரிசிக்கேசன்



அண்மைய நாள்களில் யாழ்ப்பாணத்தில் வெளியாகின்ற பத்திரிகைகளின் முன்பக்கத்தில் சிறிய கட்டமிடப்பட்ட செய்திதான் இது. இந்த சிறிய அறிவித்தல் செய்தியே அப்போது குடாநாட்டில் வெளிவந்த பத்திரிகைகளில் பிரதான இடத்தை வகித்த முக்கிய செய்தியாகவும் இருந்தது. ஆனாலும் இந்த அறிவித்தல் செய்தி வாரத்தில் இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாள்கள் மட்டுமே பிரசுரமாகும்.

1992ம் ஆண்டின் செப்ரெம்பர் மாதம் தொடக்கம் 1996ம் ஆண்டின் ஏப்ரல் மாதம் 18ம் திகதி (குடாநாடு படையினரின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வரும் வரையான காலம்) வரையான காலப்பகுதி. யாழ்குடா நாட்டிற்கும் வன்னிப்பெரும் நிலப்பரப்பிற்கும் இடையிலான போக்குவரத்துப்பாதைகளான ஆனையிறவு தரைவழிப் பாதை, கொம்படி - புல்லாவெளி நீரேரிப் பாதை மற்றும் பூநகரி - சங்குப்பிட்டி குறுந்தூர கடல்ப்பாதை ஆகிய அனைத்துப் போக்குவரத்துப்பாதைகளும் தடைப்பட்டு கிளாலிக்கடல் வழியாக குடாநாட்டு மக்கள் தமது போக்குவரத்தினை மேற்கொண்டிருந்த நாள்கள் அவை.

இந்த கிளாலி கடல்வழிப் போக்குவரத்துப் பாதையானது உயிராபத்துக்கள் நிறைந்தது. பெரும் சவால்களுக்கு முகம் கொடுத்தே மக்கள் இந்த கடல்வழிப்பயணத்தினை மேற்கொள்ள வேண்டிய தேவை அப்போது இருந்தது. அந்த நாட்களில் விடுதலைப்புலிகளும் யாழ்ப்பாணத்தையே தளமாகக் கொண்டு செயல்பட்டார்கள். அவர்களுடைய இராணுவ நிர்வாக தலைமை அலுவலகங்கள் குடாநாட்டையே மையமாகக் கொண்டு செயல்பட்டன. எனவே விடுதலைப்புலிகளும் யாழ்.குடாநாட்டிற்கும் வன்னிப்பகுதிக்குமான தங்களது ஆளணி மற்றும் படைக்கலங்களின் விநியோகத்தினையும் இந்தக் கிளாலிக் கடல் மார்க்கமாகவே மேற்கொண்டிருந்தனர்.

கிளாலிக் கடல் போக்குவரத்து இடம்பெற்ற காலத்தில் பெரும்பாலான காலப்பகுதி விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையிலான யுத்தம் தீவிரம் பெற்றிருந்த காலப்பகுதியாகும். இதில் 1992ம் ஆண்டின் நவம்பர் மாதம் முதல் 1993ம் ஆண்டின் நவம்பர் மாதம் வரையான (பூநகரி - நாகதேவன்துறை கடற்படைத்தளம் அகற்றப்படும் வரையான காலம்) சுமார் ஒருவருட காலப்பகுதியில் மக்கள் மேற்கொண்ட இடர்மிகுந்த பயணத்தையும் நீலக்கடல் செங்குருதிக் கடலாக மாறிய அந்த நாள்களையும் மறந்து விட முடியாது.

மக்கள் கூட்டத்தால் நிறைந்திருக்கும் அந்தக் கடற்கரைப்பகுதி. அதுதான் யாழ்.குடாநாட்டின் தென்மராட்சிப் பிரதேசத்தின் புலோப்பளை - அல்லிப்பளை கிராமங்களை அண்டிய கிளாலிக்கடற்கரைப்பகுதி. கடலில் முழங்காலளவு தண்ணீரில் எட்டு,கோஸ்பவர் வெளியிணைப்பு இயந்திரங்கள் இரண்டு பொருத்தப்பட்ட நிலையில் சீனோர் படகும் அதன் பின்னால் ஒன்றன்பின் ஒன்றாகக் கயிற்றில் பிணைக்கப்பட்ட தொடுவைப்படகுகள் நான்கு அல்லது ஐந்து படகுகள் நின்றன. தொடுவைப் படகுகளுக்கு சீனோர் மற்றும் புளூஸ்ரார் படகுகளும் பயன்படுத்தப்பட்டன. கரையில் தமது பயணப்பைகளுடன் நீண்ட வரிசையில் நின்ற மக்கள் எறும்புக் கூட்டம் நகர்வதைப்போல் மெல்ல மெல்ல நகர்ந்து படகுகளுக்குச் செல்வர். படகோட்டிகள் மக்கள் படகுகளில் ஏறுவதற்கான உதவிகளையும் ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுவர். சீனோர் வகைப்படகுகளில் சுமார் பதினைந்து வரையிலான பயணிகளும் புளூஸ்ரார் வகைப்படகுகளில் சுமார் பத்து வரையிலான பயணிகளும் ஏற்றப்படுவர்.

ஒவ்வொரு படகுத்தொகுதிகளும் தமக்கென நிர்ணயிக்கப்பட்ட மக்களை ஏற்றியதும் படகுத்தொகுதியின் முதலாவது படகில் பொருத்தப்பட்டிருக்கும் வெளியிணைப்பு இயந்திரங்கள் இரண்டும் உயிர்பெறும். இயந்திரங்களின் உறுமல் ஒலியோடு [illegible] படகுத்தொகுதிகள் வன்னிப்பகுதியின் பூநகரி - நல்லூர் மற்றும் ஆலங்கேணிப் பகுதிகளை [illegible] கரையை நோக்கிய பயணத்தைத் தொடரும். இந்த மூன்று மணிநேர [illegible] தைக் கடப்பதற்கு [illegible]

விடுதலைப்புலிகள் தங்களது படைக்கலங்களை மற்றும் படையணிகளின் போக்குவரத்திற்கு [illegible] அதிவேக இயந்திரங்கள் பொருத்தப்பட்ட சிறிய வகையிலான படகுகளைப் பயன்படுத்தினர். இவை அந்த நாள்களில் 'குருவிப்படகு' என்று அழைத்தனர். சாதாரண படகுகள் மூன்று மணிநேரத்தில் கடக்கும் கிளாலிக்கடலை இந்தக் குருவி கள் அரைமணிநேரத்தில் கடக்கவல்லது.

போராளிகளின் படகுகள் அதிவேக இயந்திரங்கள் பொருத்தப்பட்டதால் அநேகமாக படையினரின் இலக்குகளிலிருந்து தப்பிக்கொள்ளும். ஆனால் கடற்படையினரின் தாக்குதல்களுக்கு சாதாரண பொதுமக்கள் பயணித்த படகுகளே இலக்காவதுண்டு. கடற்படையினர் தாக்கும் போது படகோட்டிகள் தொடுவைப்படகுகளின் கயிற்றை கத்தியால் வெட்டிவிட்டு இயந்திரப்படகோடு தப்பித்து விடுவார்கள். தொடுவைப்படகுகளில் பயணித்த பொதுமக்களே கடற்படையினரின் தாக்குதல்களுக்கு இலக்காகினர்.

கிளாலிக் கடலில் போக்குவரத்தை பாதுகாப்புடன் மேற்கொள்கின்ற விடுதலைப்புலிகள் வெடிமருந்து நிரப்பப்படும் சுடுகலன்கள் பொருத்தப்பட்டதுமான படகுகளில் சென்று பூநகரி - கௌதாரிமுனைப் பகுதிக் கடற்பரப்பில் காவல் பணியில் ஈடுபட்டார்கள். இரவு 8.00 மணி முதல் அதிகாலை 4.00 மணி வரையான சுமார் எட்டு மணித்தியாலங்களுக்கே இந்தப் பாதுகாப்பு வழங்கப்பட்டது. அதுவும் வாரத்தில் இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாட்களுக்கே இந்தப் பாதுகாப்புடனான போக்குவரத்து நடைபெறும். பூநகரி - நாகதேவன்துறைக் கடற்படைத்தளத்திலிருந்து கிளாலிக்கடற் போக்குவரத்தினைத் தடுக்கும் நோக்குடன் நீருந்து விசைப்படகுகளில் விரைந்து வருகின்ற கடற்படையினருக்கும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கின்ற போராளிகளுக்கும் கடுமையான கடற்சமர்கள் அப்போது இடம்பெற்றன. ஒரு முனையில் மக்களைப் பாதுகாப்பதற்கான கடற்சமர்கள் நடைபெற்றுக் கொண்டிருக்க மறுமுனையில் மக்களின் கடற்போக்குவரத்துக்கள் நடைபெற்றன. இவ்வாறானதொரு இடர்மிகுந்ததும் துயரங்கள் நிறைந்ததுமான போக்குவரத்து நிலைமையே அன்றைய நாள்களில் நிலவியது.

மக்களின் போக்குவரத்திற்கு விடுதலைப்புலிகள் பாதுகாப்பு வழங்கிய நாள்களில் படகோட்டிகளுக்கு புலிகளால் கட்டுப்பாடு ஒன்றும் விதிக்கப்பட்டது. அதாவது பொது மக்களை ஏற்றுகின்ற படகுகளை தொடுவைப்படகுகளாகப் பயன்படுத்த முடியாது. எட்டு கோஸ்பவர் வெளியிணைப்பு இயந்திரங்கள் இரண்டு பொருத்தப்பட்ட ஒற்றைப்படகுகள் தான் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டுமென்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அன்றைய நாட்களில் யாழ்.குடாநாடு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தமையினால் கிளாலி இறங்குதுறைகள் மற்றும் போக்குவரத்து ஒழுங்கமைப்பு அனைத்தையும் விடுதலைப்புலிகளே நிர்வகித்து வந்தார்கள்.

கிளாலிக் கடற்போக்குவரத்தின்போது மக்களுக்கு ஏற்பட்ட துயரம் நிறைந்த சம்பவங்களை எழுத்தில் எழுதி விடுவது எளிதல்ல. அவை கடலன்னையின் மடியில் அரங்கேறிய நூற்றுக்கணக்கான துயரக்கதைகள். அந்த துன்பகரமான நாள்களில் ஒரு நாள் அதிகாலை நான்கு மணியை எட்டிக்கொண்டிருந்தது. பூநகரி - ஆலங்கேணிக் கரையிலிருந்து கிளாலிக் கரையை நோக்கிப் பயணிப்பதற்கு படகு ஒன்று தயாராகியது. அதிகாலை நான்கு மணிக்குப் பின்னர் விடுதலைப்புலிகள் பாதுகாப்புக் கடமையை விலக்கிக் கொள்வதைக் கருத்திற்கொண்டு படகோட்டிகள் மூவரும் பயணிகள் இல்லாமல் வெற்றுப் படகை கிளாலிக்கரைக்கு கொண்டு செல்வதற்குத் தீர்மானித்தனர். இந்த நேரத்தில் சுமார் அறுபது வயது மதிக்கத்தக்க ஒரு தந்தையும் சுமார் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க அவரது மகளும் வந்து தங்களை கிளாலிக் [illegible] படகோட்டிகளும் தந்தையையும் மகளையும் ஏற்றிக் கொண்டு பயணத்தைத் தொடங்கினர். [illegible] அதிகாலை நான்கு மணியைத் தாண்டிவிட [illegible] புலிகள் பாதுகாப்புக் [illegible] தொடங்கினர். படகில் பயணம் செய்த தந்தைக்கும் மகளுக்கும் நீந்துவதற்கான ஆற்றல்கள் இல்லை. கடற்படையினரின் சரமாரியான தாக்குதல்களைத் தொடர்ந்து தந்தையும் மகளும் கடலில் குதித்தனர். கடலில் குதித்த தந்தை மீண்டும் மேலே வரவேயில்லை. அப்படியே கடலில் மூழ்கி விட்டார். கடலில் குதித்த மகள் தனது கைகளையும் கால்களையும் நீரில் அடித்து அப்பா அப்பா என்று [illegible] வேளையில் படகோட்டிகளில் ஒருவர் அவளின் கையைப் பிடித்து அந்த இளம் யுவதியை கரைக்குக் கொண்டு செல்வதற்கு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டார். மற்றைய இரண்டு படகோட்டிகளும் ஐம்பது மீற்றர் தூரம் முன்னே சென்றுவிட்டனர். இருள் முழுமையாக விலகியிருக்கையில் அந்த இளம் யுவதியை ஒரு கையால் பிடித்த படகோட்டி மறுகையால் நீந்தத்தொடங்கினார். குறிப்பிட்ட தூரம் அந்த யுவதியையும் கொண்டு நீந்திய படகோட்டிக்கு மேற்கொண்டு நீந்துவதற்கு இயலாமல்போனது. இவர்கள் செல்ல வேண்டிய கரை மிகத்தொலைவில் உள்ளதாலும் கடலின் நீரோட்டங்கள் அதிகமாக இருந்ததாலும் இளம்யுவதியைக் காப்பாற்றுவதற்கு படகோட்டி எடுத்த முயற்சிகள் பயனற்றுப் போயின. படகோட்டியின் கைப்பிடியிலிருந்து நழுவிய இளம் யுவதி படகோட்டியின் கண்முன்னாலேயே நீரில் மூழ்கினாள். படகோட்டிகள் மூவரும் பெரும் அவஸ்தைகளுக்கு உட்பட்டு வெவ்வேறு இடங்களில் கரையேறினர். இது போன்ற துயரக்கதைகள் எத்தனையோ. இன்னொரு சம்பவம்,

போர்க்காலச் சூழலுக்கேற்ப 1993ம் ஆண்டின் தை மாதத்தின் புத்தாண்டு தினத்தை அமைதியான முறையில் கொண்டாடியிருந்தனர் யாழ்குடாநாட்டு மக்கள். மறுநாள் 1993 ஜனவரி மாதம் 02ம் திகதி இரவு வேளை, அன்று படகுச்சேவைக்குரிய நாள். படகுச் சேவைக்குரிய நாள் தானே போராளிகள் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருப்பார்கள் என்ற எண்ணத்துடன் படகோட்டிகள் படகுகளில் வன்னிக்குச் செல்ல வேண்டிய பயணிகளை ஏற்றிக் கொண்டு தமது கடற்பயணத்தை தொடங்கியிருந்தனர். புறப்பட்ட படகுகள் கரையிலிருந்து வெகு தூரத்திற்குச் சென்றுவிட்டன. அதன் பின்னர் தான் கிளாலிப் போக்குவரத்திற்கான போராளிகளின் பாதுகாப்பு அன்றைய தினத்தில் வழங்கப்படமாட்டாது. இந்த அறிவித்தலை கிளாலிக்கடலில் பயணித்துக்கொண்டிருந்த பொதுமக்களும் படகோட்டிகளும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. கௌதாரிமுனைக் கடலில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் போராளிகளின் படகுகள் இல்லாததை அவதானித்த நாகதேவன் துறை கடற்படையினர் கிளாலிக்கடலை நோக்கி விசைப்படகுகளில் விரைந்தனர். போராளிகளின் எதிர்ப்புக்கள் எதுவும் இல்லாததால் கடற்படையினர் தமது அரக்க நாடகத்தை இலகுவில் அரங்கேற்றினர். பொதுமக்கள் பயணித்த படகுகளை இலக்கு வைத்து கடற்படையினர் சரமாரியான சுடுகலன் தாக்குதல்களை மேற்கொண்டனர். அத்தாக்குதல்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகப் படகோட்டிகள் கடலில் குதித்து நீந்தினர். படகுகளில் மக்கள் அவலக்குரலை எழுப்பிய போதும் கடற்படையினர் அவர்களை வெட்டிக்கொலை செய்தனர். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவரும் கொலை செய்யப்பட்டு படகுகளிற்குள் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்கள். கடலுக்குள் குதித்தவர்கள் படையினரின் சுடுகலன் சூட்டில் கொல்லப்பட்டு கடலில் மூழ்கினார்கள். இந்த நாளில் ஓரிரு படகுகள் மாத்திரமே கடற்படையினரின் தாக்குதல்களிலிருந்து தப்பித்து ஆலங்கேணிக் கரையைச் சென்றடைந்தது.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட நூற்றுக்குமேற்பட்ட பொதுமக்களின் சடலங்கள் எல்லாம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் உறவினர்கள் உரிமை [illegible] பட்டன. இறந்தவர்களின் உடல் [illegible] உடைகள் மற்றும் முகத்தின் [illegible] தங்களது உறவினர்கள் என [illegible] மரணக்கிரியைகள் [illegible] பத்திரிகைகளில் மரண அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டன. மரண அறிவித்தல்களில் இறந்ததாக அறிவிக்கப்பட்டவர்கள் சிலர் தாங்கள் படையினரின் தாக்குதல்களிலிருந்து தப்பித்து வன்னிக்கு வந்து தாங்கள் நலமாக இருப்பதாகவும் தங்களை இறந்ததாகக் கேள்விப்பட்டு தங்களது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி என தெரிவித்து இதன் பின்னரான நாள்களில் அவர்கள் பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரக செயலிழப்பை ஆரம்பத்திலேயே கண்டறிவது எப்படி?

அமெரிக்க நாட்டில் 13 பேரில் ஒருவருக்கு சிறுநீரகக் கோளாறு அல்லது சிறுநீரகக் குறைபாடு, சிறுநீர்ப்பை சம்பந்தப்பட்ட உபாதைகள் இருப்பதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது. நம் நாட்டிலும் நிறையப் பேருக்கு சிறுநீரக வியாதிகள் இருப்பதே தெரியாமல் இருக்கின்றனர். ஆனால் சிறுநீரக வியாதிகளை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்தால் அவற்றை குணப்படுத்துவதும் அல்லது கட்டுப்படுத்துவதும் மிக எளிது.

**1. சிறுநீரக வியாதி இல்லையா என்பதை ஒருவர் எவ்வாறு கண்டறிவது? சிறுநீரகங்களின் வேலைத்திறன் 75% குறையும் வரை பாதிக்கப்பட்டவர் எந்த தொந்தரவையும் உணரமாட்டார் என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா?**

இது முழுக்க உண்மை. சிறுநீரகங்களைப் பொறுத்த வரை நாம் இரண்டு விஷயங்களை புரிந்து கொள்ள வேண்டும். ஒன்று சிறுநீரகங்களைப் போல சக்திக்கு மீறி உழைக்கும் உறுப்புக்கள் நம் உடலில் இல்லை. அதனால் சிறுநீரகங்கள்



70-80% அவற்றின் வேலைத்திறனை இழக்கும் வரை நம் உடலுக்கு பெரிய கஷ்டம் இல்லாமல் பார்த்துக் கொள்கின்றன. அதனால் ஆரம்பநிலை சிறுநீரக செயலிழப்பை நம்மால் உணர முடிவதில்லை. இரண்டாவதாக ஆரம்பத்தில் தெரியும் அறிகுறிகளும் சாதாரணமான மற்றும் பொதுவானவையாக இருக்கின்றன. உதாரணமாக களைப்பு, சோர்வு, வேறு சில அறிகுறிகளான உயர் இரத்த அழுத்தம், இரத்த சோகை, சிறுநீரில் புரத ஒழுக்கு ஆகியவை மருத்துவ ஆய்வக பரிசோதனைகளில் மட்டுமே தெரியவரும். எனவே தான் சிறுநீரக பாதிப்பு அல்லது செயலிழப்பை ஆரம்பகட்டத்திலேயே கண்டுபிடிப்பது மிகவும் கடினமாக உள்ளது.

**2. என்றாலும் சிறுநீரக பாதிப்பின் ஆரம்ப (எச்சரிக்கை) அடையாளங்கள் என்னென்ன என்று தெரிந்தால் அதை வைத்து சிலரேனும் சிறுநீரக பாதிப்பின் ஆரம்பகட்டத்தை அறிந்து பயன் பெற உதவக்கூடுமல்லவா?**

திடீரென்று சிறுநீரகங்களை பாதிக்கும் சில வியாதிகளல்லாது (பாம்புகடி, வயிற்றுப்போக்கு போன்ற காரணங்கள்) நிரந்தரமாக சிறுநீரகங்களை செயலிழக்க வைக்கும் நோய்களால் வரும் சிறுநீரக பாதிப்பின் ஆரம்ப நிலையில் எதுவும் அறிகுறிகள் வரலாம். அவையாவன: கை, கால், முகம் வீக்கம், காரணம் தெரியாத தொடர் சோர்வு, அதிக களைப்பு, தோலில் அரிப்பு, தோல் நிறம் மாறுதல் முக்கியமாக வெளுத்துப் போகுதல், சிறு நீரில் இரத்தம் அல்லது அளவு குறைவாக போதல், உயர் இரத்த அழுத்தம், அடிக்கடி (முக்கியமாக இரவில்) சிறுநீர் கழித்தல்.

உண்மையில் சொல்லப்போனால் தங்கள் சிறுநீரகங்களை பாதுகாத்துக் கொள்ள நினைக்கும் யாரும் சில எளிய பரிசோதனைகளை செய்து பார்த்துக் கொள்வதன் மூலம் மட்டுமே சிறுநீரகங்களின் ஆரோக்கியத்தை உறுதி செய்து கொள்ள முடியும். அவையாவன சிறுநீர் பரிசோதனை, இரத்தத்தில் யூரியா, கிரியேட்டினின் இவற்றின் அளவு. இவைகளில் ஏதேனும் கோளாறு என்றால் மட்டுமே மற்ற பரிசோதனைகள் தேவைப்படும்.

**3. அப்படியென்றால் அடிக்கடி சிறுநீர் கழிப்பவர்களுக்கு சிறுநீரக செயலிழப்பு இருக்குமா?**

அப்படியில்லை. அது ஒவ்வொருவரின் அளவு அதாவது பகலில் 3-4 முறை இரவில் படுக்கச் செல்லும் முன் ஒரு முறை சிறுநீர் கழிப்பு என்று இருந்தவர்கள் திடீரென அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டி வந்தால் அதற்கு முதல் காரணம் சிறுநீரக பையில் கிருமித் தாக்குதல் சிறுநீரகப்பை அழற்சி (புண்) பெண்களுக்கு ஆண்களை விட இது இன்னும் அதிகம். இது எளிதில் குணப்படுத்தக் கூடிய ஒரு சிறிய தொந்தரவு தான்.

ஆண்களுக்கு முக்கியமாக வயதானவர்களுக்கு ப்ராஸ்டேட் சுரப்பி (மூத்திரக்காய்) வீக்கம் சிறுநீர் அடைப்பு காரணமாகவும் அடிக்கடி சிறுநீர் கழிக்கும் தொந்தரவு வரலாம். எதையும் நீங்கள் ஒரு மருத்துவரிடம் ஆலோசனை பெறுவதன் மூலம் இதை தெளிவு செய்து கொள்ள வேண்டும்.

அதேபோல நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருந்த ஒருவர் காரணம் எதுவும் இல்லாமல் அடிக்கடி சோர்ந்துபோவது, பசியில் குறைந்து விடுவது, கவனக்குறைவு, அதிக குமட்டல் போன்ற தொந்தரவுகள் இருந்தாலும் அதற்கு சிறுநீரக செயலிழப்பு ஒரு காரணமாக இருக்கலாம் என்பதை நினைவில் வைத்து முன்பே சொன்னபடி சில எளிய பரிசோதனைகள் மூலம் அதை தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

இதே போல தோல் உலர்ந்து போதல், தோல் வெளுத்தல் அல்லது நிறம் மாறுதல், குமட்டல், பசி இல்லாமல் இருப்பது, சிறுநீரகங்கள் உள்ள இடுப்பின் எலும்புகளின் கீழ் வலி, கணுக்கால்களுக்கு கீழ் வீக்கம் (ஆரம்பத்தில்) போன்ற அறிகுறிகள் இருந்தாலும் சிறு நீரகங்களை பரிசோதித்தல் தவறில்லை. மேலும் சிறு வயதில் (35 வயதிற்கு கீழ்) உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் கண்டிப்பாக சிறுநீரகங்களை பரிசோதித்துக் கொள்ள வேண்டும். இதைத் தவிர சர்க்கரை வியாதி, உயர் இரத்த அழுத்தம் (எந்த வயதினரும்), அடிக்கடி சிறுநீரில் கிருமித் தாக்குதல் வருபவர்கள், சிறுநீரக கற்கள் வந்தவர்கள், குடும்பத்தில் வேறு யாருக்கேனும் சிறுநீரக பாதிப்பு இருப்பவர்கள் சிறுநீரகங்களை பரிசோதித்து பார்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் சிறுநீரக கோளாறுகளை ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கவும் சரி செய்யவும் இயலும்.

**4. இந்த ஆரம்ப பரிசோதனைகளைத் தவிர வேறு பரிசோதனைகளும் வேண்டி வருமா?**

மேற்குறிப்பிட்ட எளிய பரிசோதனைகளில் கோளாறு இருப்பதாகத் தெரியவந்தால் அதை மேலும் உறுதிசெய்து கொள்ளவும், சிறுநீரக பாதிப்பின் தன்மை, கடுமை, சில சமயங்களில் முன்னேறிய சிறுநீரக பாதிப்பினால் வேறு உறுப்புக்கள் (முக்கியமாக இதயம்) பாதிப்பு என்பதை அறிய பல்வேறு சோதனைகள் தேவைப்படலாம்.

(சிறுநீரக பாதிப்பு உள்ளவர்கள் மேற்கொள்ள வேண்டிய சோதனைகள் பற்றி சிறுநீரகங்களுக்கான பரிசோதனைகள் என்ற கையேட்டில் விரிவாகக் காணலாம்)

**5. சரி இந்த பரிசோதனைகளில் சிறுநீரக பாதிப்பு செயலிழப்பு உள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வைத்துக்கொள்வோம். இனி என்ன நடக்கும்?**

வெறும் சிறுநீரக பாதிப்பு அல்லது ஆரம்ப சிறுநீரக செயலிழப்பு உள்ளவர்களுக்கு (சிறுநீரக ஸ்கேன் செய்யும் போது அவை சுருங்காமல் இருக்கும்) அதிலும் சில வகை பாதிப்பு உள்ளதாக சந்தேகிக்கப்படுபவர்களுக்கு (சிறுநீரக நுண்தமனி அழற்சி எனப்படும் பாதிப்பு) சிறுநீரக திசு ஆய்வுக்கு (பயாப்ஸி) என்ற ஒரு பரிசோதனை தேவைப்படலாம்.

இந்த பரிசோதனையின் முடிவைப் பொறுத்து சில மருந்துகளை குறிப்பிட்ட காலம்வரை மருத்துவரின் கண்காணிப்பில் எடுத்துக் கொள்வதன் மூலம் சிலவகை சிறுநீரக வியாதிகளை முழுவதும் குணப்படுத்தவோ அல்லது நன்கு கட்டுப்படுத்தவோ முடியலாம். சிறுநீரக தாரையில் கிருமி தாக்குதல், சிறுநீரக பாதையில் கற்கள் உள்ளவர்கள் அதற்குரிய வைத்தியத்திற்குப் பின்னரும் இவை எதனால் வந்தது என்பதை ஆராய்ந்து அதற்குரிய மருத்துவத்தை மேற்கொள்வதால் இத்தொந்தரவுகள் மீண்டும் மீண்டும் வருவதையும் அதனால் சிறுநீரகங்களின் செயல்திறன் பாதிக்கப்படுவதையும் காப்பாற்றிக் கொள்ளலாம். சர்க்கரை வியாதி, உயர் இரத்த அழுத்தத்தால் சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரத்த அழுத்தத்தை நன்கு கட்டுப்படுத்தி வைப்பதன் மூலமும் சில பிரத்தியேக மருந்துகளின் மூலமும் சிறுநீரக செயலிழப்பை பெருமளவு குறைப்படுத்தலாம்.


**6. முன்னேறிய சிறுநீரக செயலிழப்பு உள்ளவர்கள் செய்ய வேண்டியது என்ன?**

சிறுநீரக பாதிப்பு - செயலிழப்பு உள்ளவர்களின் சிறுநீரக பாதிப்பை பல்வேறு கட்டங்களாகப் பிரிக்கலாம்.

1. ஆரம்பகட்டம் (நிலை-1) சிறுநீரக பாதிப்பு மட்டும் (சிறுநீரக செயலிழப்பு இல்லை) உயர் இரத்த அழுத்தம், சிறுநீரில் புரத ஒழுக்கு, கை, கால், உடல் வீக்கம் ஆகிய தொந்தரவுகள் இருக்கலாம்.

2. லேசான சிறுநீரக செயலிழப்பு (நிலை-2): இரத்தத்தில் கிரியேட்டினின் அளவு 2 மி.கி. (டெஸிலிட்டருக்கு கீழே). இவ்விரு கட்டங்களிலும் இரத்த அழுத்தக் கட்டுப்பாடு, ஆகாரமாற்றம், சிறுநீரக பாதிப்பு வேகமாக அதிகப்படுவதைத் தடுக்கும் சில மருந்துகளை சிறுநீரக மருத்துவரின் ஆலோசனைப்படி எடுத்துக் கொள்ளுதல், தொடர்ந்து சிறுநீரக மருத்துவரின் கண்காணிப்பு, சிறுநீரகங்களை பாதிக்கும் மருந்துகள், காரணங்கள் (உதாரணமாக வலி மருந்துகள், நாட்டு மருந்துகள்) ஆகியவற்றைத் தவிர்த்தல் ஆகிய செயல்களின் மூலம் சிறுநீரக பாதிப்பை பெருமளவு சரி செய்யலாம் அல்லது மேலும் அதிகமாகாமல் கட்டுப்படுத்தி வைக்கலாம்.

3. அதிக சிறுநீரக செயலிழப்பு (நிலை 3) இரத்தத்தில் கிரியேட்டினின் அளவு 2-6 மி.கி. புள்ளிகள். இந்த சமயத்தில் மேற்கூறிய சிகிச்சைகள் அல்லாமல் இரத்த விருத்திக்கான மருந்துகள், எலும்புகளுக்கான மருந்துகள் இவைகளையும் சேர்த்து எடுத்துக் கொள்ள வேண்டும். இரத்தத்தில் கிரியேட்டினின் அளவு 6 மி.கிக்கு மேல் ஆகும் போது அடுத்த கட்ட முற்றிய சிறுநீரக செயலிழப்பில் மேற்கொள்ள டயாலிசிஸ் சிகிச்சைக்கு தேவையான சில முன்னேற்பாடுகளை செய்து கொள்ள வேண்டும். அவையாவன தொடர் டயாலிசிஸ் சிகிச்சைக்கு இரத்த குழாய்களிலிருந்து மீண்டும் மீண்டும் இரத்தம் எடுப்பதை எளிதாக்கும். இரத்த நாள இணைப்பு அறுவை சிகிச்சை செய்துகொள்ள வேண்டும். அதை சரியான சமயத்தில் செய்து கொள்ளுவதால் பின்வரும் காலத்தில் பலவித செலவுகளை பெருமளவாகக் குறைக்கலாம். டயாலிசிஸ் சிகிச்சையில் மிக அவசியமாகி விடுகின்றது. அதனைப் பாதிக்கும் ஹெபடைடிஸ் பி என்ற வைரஸ் கிருமியிலிருந்து நம்மைப் பாதுகாக்கும் தடுப்பூசியையும் மருத்துவர்கள் உங்களுக்கு பரிந்துரைப்பார். இதனால் டயாலிசிஸ் சிகிச்சையின் போது இந்த கிருமி வேறு யாரிடமிருந்தும் நமக்கு வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.



4. முற்றிலும் சிறுநீரக செயலிழப்பு (நிலை-4) இந்த கட்டத்தில் சிறு நீரகங்களின் மொத்த செயல்திறன் 10 சதவிகிதத்திற்கும் கீழே வந்து விடுகின்றது. அப்போது இரத்தத்தில் கிரியேட்டினின் அளவு 6-7 மி.கி. பெரும்பாலும் இரத்த அளவும் மிகவும் குறைந்து விடும். அப்போது நமது உடலின் பல்வேறு உறுப்புக்களும் பாதிக்கப்பட்டு பல்வேறு வித உபாதைகள் வரலாம். இந்த சமயத்தில் டயாலிசிஸ் சிகிச்சை அல்லது சிறுநீரக மாற்று சிகிச்சை மூலம் மட்டுமே ஒருவர் தொடர்ந்து ஆரோக்கியத்துடன் உயிர் வாழ முடியும். எனவே முன்பு கூறியிருந்தது போல இதற்கான ஏற்பாடுகளைத் தகுந்த நேரத்தில் செய்து முடித்து இருக்க வேண்டும். அதற்குரிய காலம் வந்தவுடன் டயாலிசிஸ் சிகிச்சையைத் தாமதமின்றித் தொடங்கி முறையாகச் செய்து வந்தால் சிறுநீரகம் முற்றிலும் செயலிழந்த பின்னரும் கூட தொடர்ந்து நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்க்கையைத் தொடர முடியும். சிறுநீரக மாற்று சிகிச்சை செய்து கொள்ளத் தகுதி உள்ளவர்கள் டயாலிசிஸ் சிகிச்சைக்கு பதில் அந்த சிகிச்சையை முயற்சி செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆண் பெண்ணுக்கு அடங்கி நடக்கலாமா?

## பித்தன் பதில்கள்

ப.பிரதீபன்,
கைதடி.
**கேள்வி:** அடிக்கிற கைதான் அணைக்கும் என்ற முது மொழி யாருக்காகச் சொல்லப்பட்டது பித்தரே?
**பதில்:** அடிக்கிற கைதான் அணைக்கும். கோபம் உள்ள இடத்தில் தான் குணம் இருக்கும். என்பதெல்லாம் சில அப்பாவிக் கணவர்மார் தம்மைத் தாமே திருப்திப்படுத்திக் கொள்ளக் கூறிக்கொள்ளும் முதுமொழிகள். இவை யாருக்காகக் கூறப்பட்டவை என்பது இப்போது உமக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.



வ.வத்சலா,
உடுவில்.
**கேள்வி:** ஆண் பெண்ணுக்கு அடங்கி நடக்கலாமா?
**பதில்:** ஆண்கள் எப்போதும் அடங்குவது பெண்களிடம் தானே, Male எப்போதும் Femaleக்குள் அடக்கமல்லவா?




த.இளையதம்பி,
வவுனியா.
**கேள்வி:** எப்போதுமே ஊர்வம்பு கதைப்பதில் ஆர்வம் காட்டுவோர் குறித்து....



**பதில்** : பாவச் சுமை சுமக்கும் நவீன ஒட்டகங்கள்.

திருமதி த. அரவிந்தன்,
நல்லூரர்.
**கேள்வி** : எங்கள் வீட்டு நாய் ஒரு போதும் குரைப்பதில்லையே அது ஏன்?
**பதில்:** பாவம் அது ஒரு வாயில்லாப் பிராணி. உங்களது கணவர் போன்று.



த.இந்திரன்,
கோப்பாய்.
**கேள்வி:** பைத்தியத்துக்கு வைத்தியம் பார்க்கும் வைத்தியருக்குப் பைத்தியம் பிடித்தால், அந்த பைத்தியக்கார வைத்தியர் தனது நோய்க்குச் சிகிச்சை பெற பைத்தியத்துக்கு வைத்தியம் பார்க்கும் எந்த வைத்தியரிடம்போக இயலும்?
**பதில்**; உமது கேள்வியால் எனக்கே பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறது. அது சரி. ஒரு சந்தேகம் நீர் நல்ல மனநிலையில் தானே இருக்கிறீர்?

உ.பைந்தமிழ்ச்செல்வி,
மட்டக்களப்பு.
**கேள்வி:** கணவன் மனைவி மத்தியில் ஒருவர் மீது ஒருவர் சந்தேகம் நிலவினால் வாழ்க்கை எவ்வாறு அமையும் பித்தரே?



**பதில்:** சந்தேகம் எரிமலை போன்றது. உள்ளுக்குள் கனன்று கொண்டிருக்கும் தீ எப்போது வெடிக்கும் என்பதைச் சொல்ல இயலாது.

தா.இ. வேல்நந்தன்,
கொழும்பு-06
**கேள்வி:** உளவியல் படித்துத் தேர்ந்த விற்பன்னர்களின் குடும்பத்தில் கூட மனவேறுபாடுகள் வருகின்றனவே?
**பதில்:** ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்று தெரியாமலா சொல்லி வைத்தார்கள்.



மா.அரியமலர்,
கைதடி.
**கேள்வி:** சுபாவம் பழக்கம் இவற்றுக்கிடையே என்ன வேறுபாடு பித்தரே?
**பதில்:** சுபாவம் பிறப்பில் உடன் வருவது. பழக்கம் இடை நடுவில் தொற்றிக்கொள்வது. ஆனால் ஒன்று இரண்டையுமே மாற்றிக்கொள்ள முடியாது என்றில்லை. முயன்றால் முடியும்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 506

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | ■ | 10 | | ■ | 11 | |
| | ■ | 12 | | ■ | 13 | | |
| ■ | 14 | | | | | ■ | |
| 15 | | | | ■ | 16 | 17 | ■ |
| 18 | | | ■ | 19 | | | 20 |
| 21 | | ■ | 22 | | | 23 | |

அனுப்புபவர் பெயர்:..........................................
விலாசம்:..........................................
..........................................
கையொப்பம்:..........................................

### மேலிருந்து கீழ்

01. தேவர் உணவு
02. குடிமகன்
03. நிலம்
04. இளம்பெண்
05. நூறு செய்யுள் கொண்ட பிரபந்தம்
06. புத்தி ஜீவி
10. பெரும் நிலப்பரப்பு
12. பொருள்
13. யானை மேல் ஆட்கள் அமரும் இடம்
14. உத்தரவு
15. இந்தக் கதிரைக்குத்தான் போட்டி
17. முத்து விளைவது இதற்குள்
19. தடுத்து வைக்கும் இடம்
20. உட்செல்

### இடமிருந்து வலம்

01. அருச்சுனன் மகன்
05. கூட்டுதல் குறியீடு
07. மாறுபாடு
08. கீறுதல்
09. உடல் இயக்கத்துக்கு உதவும் உடற்பகுதி
10. வேகம்
11. குரங்கு
12. இசைப்பாட்டு
13. அன்னை
14. கண்டித்து வெளியிடும் கூற்று
15. படிப்பது இதற்கு, பறக்க விடுவதும் இதையே
16. நீர்த் தன்மையான இடத்தில் படரும்
18. சுவடு
19. நகை
21. ஒரு வகை மீன்
22. ஒரு தோற்கருவி
23. பின்னடிப்பு

### போட்டி இல. 505 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு**
நாகலிங்கம் நிரோஜா,
இலக்கமி பேக்கரி,சன்னதி வீதி,
அச்சுவேலி.

**2 ஆம் பரிசு**
சசிகரன் அபிசரன்,
மே/பா.சசிகரன் சத்தியஶ்ரீ,
கருவேலன்கண்டல்,
ஒட்டுசுட்டான்.

**3 ஆம் பரிசு**
எஸ்.வரதராஜன்,
பிரதேச செயலகம், எம்.என்.
மட்டக்களப்பு.

### பாராட்டுப் பெறுவோர்

(1) ப.நடராஜா,
இல03, செட்டியார் தெரு,
கொழும்பு.
(2) பொ.நமசிவாயம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
(3) வே.கார்த்திகேசு,
விபுலானந்தர் வீதி,
வாழைச்சேனை.
(4) எம்.ஏ.அத்தாஸ்,
ரஹ்மத் மன்ஸில்,
இல-141/1, குமாரதுங்க மாவத்தை,
மாத்தறை.
(5) சி.மணிமொழியான்,
பூம்பொழில்,திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.
(6) பா.பிரியன்,
மே/பா.பூரணம் அப்பாத்துரை,
போக்காலை ஒழுங்கை, உடுப்பிட்டி.
(7) எஸ். ஞானம்,
இல.11-5/1, சென்லோறன்ஸ் றோட்,
வெள்ளவத்தை, கொழும்பு-6
(8) யூ.செல்லத்தம்பி,
செல்வி அகம்,
கல்முனை-9
(9) ப.நாகேஸ்வரி,
இல.447, காலி வீதி,
கல்கிசை.
(10) திருமதி.செ.இரஞ்சிதமலர்,
'சாருஜா' சிவன் கோவில் வீதி, புத்தூர்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 506

சொற்சிலம்பம் 506 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி 12ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் பெப்ரவரி 19 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். சரி விடைகளைச் சரியாக எழுதியவர் பின் அதிஷ்டம் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி வாரமலர், அலுவலகம்,
561, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி இல: 503 விடைகள்

மேலிருந்து கீழ்

01.அதிக, 02.முரண்பாடு, 03.தனை, 04.நாகம், 05.மண், 06.திடல், 08.அழகு, 10.பங்குனி, 12.சாக்கடை, 13.குழு, 14.அனுபவி, 15.முல்லை, 16.குரிசில், 18.தணல், 20.கதி, 22.வாவி

இடமிருந்து வலம்

01.அமுதம், 04.தாமதி, 07.திரனை, 08.அகண்ட, 09.கண், 10.பழும், 11.பாசாங்கு, 14.அடுக்கு, 15.முருகு, 17.கனிதல், 19.பகடை, 21.சிலைவாசி, 23.வித், 24.இல், 25.வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்மகள் வந்தாள்



ஒரு செயலைச் செய்யும் போது நல்லதும், கெட்டதும் இணைந்தே வரும். தேவர்கள் பாற்கடலைக் கடைந்தார்கள். அதில் இருந்து அமுதக்குடம் வந்தது. கூடவே விஷமும் வந்தது. அதுபோல அதில் இருந்து திருமகளும் தோன்றினாள். அவளுக்கு முன்னதாக இன்னொரு பெண்ணும் வெளிப்பட்டாள். அவளது அங்க லட்சணங்கள் யாருக்கும் பிடிக்கவில்லை. அந்த மூத்ததேவியை கண்டாலே எல்லோரும் ஓடினர். மூத்ததேவி யான அவளது பெயரையும் மூதேவி என சுருக்கி விட்டனர்.

ஆனாலும், அக்காவும், தங்கை திருமகளும் ஒற்றுமையாகவே இருந்தனர். எங்கு சென்றாலும் இருவரும் இணைந்தே செல்வார்கள். ஒரு ஊரில் வசித்த இளைஞன், வயல் வேலைக்குச் சென்றால் ஒழுங்காகப் பார்க்கமாட்டான். வரப்பு மீது படுத்து உறங்கி விடுவான். வயல் உரிமையாளர் திட்டித் தீர்ப்பார்.

ஒருநாள் இரண்டு தேவிகளும் அந்த வயல் பக்கமாகச் சென்றனர்.

அப்போது உரிமையாளர் அவனை நோக்கி, ஏண்டா! உன்னிடம் எப்போதும் மூதேவி குடியிருக்கிறாளே! உறங்கிக் கொண்டே இருக்கிறாயே! எனத் திட்டினார்.

இதைக் கேட்ட மூத்ததேவி தன் தங்கையிடம், சகோதரி! பார்த்தாயா! உலகில் உள்ளவர்கள் ஒருவருக்கொருவர் திட்டிக் கொள்ள என் பெயரை வீணாக இழுக்கிறார்கள். எனவே, நான் இவனுக்கு செல்வத்தை வழங்கப் போகிறேன் என்றாள். திருமகளும் அதற்கு சம்மதிக்க, அவனை அழைத்த மூத்ததேவி இந்த பொற்காசுகளை வைத்துக்கொள், என ஒரு மூடையைக் கொடுத்தாள். அதை அவன் தன் மனைவியிடம் ஒப்படைத்தான்.

அவள் அதில் உள்ளதை அளக்க பக்கத்து வீட்டில் நாழி வாங்கி வந்தாள். பக்கத்து வீட்டுக்காரிக்கு சந்தேகம். இவள் எதை அளக்கிறாள் என பார்ப்போமென சற்று புளியை நாழியின் அடியில் ஒட்டி விட்டாள். இளைஞனின் மனைவி அதை அளந்தபிறகு நாழியை ஒப்படைத்தாள். பக்கத்து வீட்டுக்காரிக்கு ஆச்சரியம். புளியில் ஒரு தங்கக்காசு ஒட்டிக் கொண்டிருந்தது. அதன் மீது ஆசை கொண்ட அவள், பக்கத்து வீட்டுக்காரி வெளியே சென்ற நேரம் பார்த்து வீட்டுக்குள் புகுந்து மூடையையே திருடிவிட்டாள்.

இளைஞன் மிகவும் வருத்தமடைந்தான். மறுநாள் வயலுக்குப் போய் கவலையுடன் இருந்தான். மூத்ததேவி அவனிடம் விபரம் கேட்டபோது, நடந்ததைச் சொன்னான்.

அவள் விலையுயர்ந்த நவரத்தின மோதிரம் ஒன்றைக் கொடுத்தாள். அவன் குளிக்கும்போது ஆற்றில் விழுந்து விட்டது. அடுத்து முத்துமாலை ஒன்றைக் கொடுத்தாள். ஆற்றில் விழுந்து விடுமே என பயந்து கரையில் கழற்றி வைத்து விட்டு குளித்தான். வந்து பார்த்தால் அதைக் காணவில்லை.

மூத்ததேவி இதுபற்றி திருமகளிடம் சொன்னாள். திருமகள் அவனை அழைத்து ஒரே ஒரு தங்கக்காசு மட்டும் கொடுத்தாள். அவன் அதை விற்று வீட்டுக்கு தேவையான அரிசி, மளிகை, மீன் ஆகியவை வாங்கிச் சென்றான். அவன் மனைவி அவனிடம் விறகு வெட்டி வரச் சொன்னாள். அவன் தன் வீட்டின் பின்னால் இருந்த மரத்தில் விறகு வெட்ட ஏறியபோது, ஒரு புதரில் காணாமல் போன முத்துமாலை இருந்ததைப் பார்த்தான். ஏதோ ஒரு பறவை எடுத்து வந்து அங்கே போட்டிருந்தது தெரியவந்தது. அவன் மனைவி மீனை நறுக்கியபோது, ஆற்றுக்குள் விழுந்த நவரத்தின மோதிரம் அதன் வயிற்றில் இருந்து வந்து விழுந்தது.

மரத்தின் மீதிருந்த இளைஞனும், கீழிருந்த அவன் மனைவியும் கண்டுபிடித்து விட்டேன் என ஒரே சமயத்தில் கத்தவே, இதைக்கேட்ட பக்கத்து வீட்டுக்காரி, தான் திருடியது தெரிந்து விட்டது போலும் என நினைத்து, அரச தண்டனைக்கு பயந்து பொற்காசுகளை அவர்கள் வீட்டு வாசலில்வைத்து விட்டு ஓடிவிட்டாள். ஆக, காணாமல் போன எல்லாம் திருமகள் அருளால் கிடைத்தது.


நவராத்திரி காலத்தில் திருமகளை வணங்கி எல்லா நன்மையும் பெறுங்கள்.




## வர்ணம் தீட்டுக

சிறுவர் சிறுமியர்களே..!

உங்கள் கைவண்ணத்தைக் காட்டி படத்தை மெருகூட்டுங்கள்.



## தேசிய பறவைகள்

01. இந்தியா - மயில்
02. மியான்மர் - மயில்
03. டென்மார்க் - வானம்பாடி
04. கனடா - வாத்து
05. கொலம்பியா - பருந்து
06. மலேசியா - மாயா
07. அயர்லாந்து - முத்துசென்னி
08. பெல்ஜியம் - செஸ்ட்ரல்
09. தென்னாப்பிரிக்கா - நீலக் கொக்கு
10. அமெரிக்கா - கழுகு
11. நியூசிலாந்து - கிவி
12. இங்கிலாந்து - ராபின்
13. ஜெர்மனி - கொக்கு

## பழமொழிகள்

01. அறச் செட்டு முழு நட்டம்.
02. அற்ப அறிவு அல்லற் கிடம்.
03. அறப்படித்தவன் அங்காடி போனால், விற்கவும் மாட்டான் கொள்ளவும் மாட்டான்.
04. அறமுறுக்கினால் அற்றும் போகும்.
05. அறிந்தறிந்து செய்கிற பாவத்தை அழுதழுது தொலைக்கவேண்டும்.
06. அறிய அறியக் கெடுவார் உண்டா?
07. அறிவில்லார் சிநேகம் அதிக உத்தமம்.
08. அறிவீன இடத்தில் புத்தி கேளாதே.
09. அறிவீனர் தமக்கு ஆயிரம் உரைக்கினும் அவம்.
10. அறிவு இல்லார் தமக்கு ஆண்மையுமில்லை.
11. அறிவுடையாரை அரசனும் விரும்புவான்.
12. அறுபத்து நாலடிக் கம்பத்திலேறி ஆடினாலும், அடியில் இறங்கி தான் தியாகம் வாங்கவேண்டும்.
13. அறுப்புக் காலத்தில் எலிக்கு ஐந்து பெண்சாதி.
14. அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும்.
15. அன்று எழுதிவன் அழித்து எழுதுவானா?

## விடுகதைகள்

01. அழுவேன், சிரிப்பேன் அனைத்தும் செய்வேன் நான் யார்?
02. ஆடும் வரை ஆட்டம், ஆடிய பின் ஓட்டம் அது என்ன?
03. இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்?
04. ஊரெல்லாமல் ஒரே விளக்கு. அதற்கு ஒரு நாள் ஓய்வு அது என்ன?
05. கொம்பு நிறை கம்பு அது என்ன?
06. தலையை சீவினால் திறப்பான் அவன் அது என்ன?
07. நாலு காலுண்டு வீச வாலில்லை அது என்ன?
08. பல் துவக்ககாதவனுக்கு உடம்பு எல்லாம் பற்கள்?
09. மண்ணுக்குள் கிடப்பவன் மங்களகரமானவன் அவன் யார்?
10. முத்து வீட்டுக்குள்ளே தட்டுப் பலகை அது என்ன?

## விடைகள்

01. முகம் பார்க்கும் கண்ணாடி
02. இதயம்
03. தேள்
04. நிலா
05. மாதுளம்பழம்
06. இளநீர்/நொங்கு
07. நாற்காலி
08. சீப்பு
09. மஞ்சள்
10. நாக்கு

## தேசிய மலர்கள்

| | |
|---|---|
| இந்தியா | - தாமரை |
| பாகிஸ்தான் | - மல்லிகை |
| ஆஸ்திரேலியா | - கொன்றை |
| இத்தாலி | - வெள்ளை லில்லி |
| சீனா | - திராட்சை மலர் |
| ஜப்பான் | - செவ்வந்திப்பூ |
| இங்கிலாந்து | - ரோஜா |
| எகிப்து | - தாமரை |
| பிரான்ஸ் | - லில்லி |
| வங்கதேசம் | - வெள்ளை அல்லி |
| ரஷ்யா | - சாமந்தி |





இரண்டு படங்களுக்கிடையேயும் ஆறு வித்தியாசங்கள் உள்ளன. முயற்சி செய்து கண்டுபிடியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவின் கடலோரச் காவல் பணியில் அண்மையில் இணைந்துள்ளது 'ராணி அபாக்கா' என்ற இந்தக் கப்பல். இந்தக் கப்பலில் அதிநவீன கண்காணிக்கும் கருவிகள், துப்பாக்கிகள் என்பன உள்ளன. 32 நாட்டிக் கல் மைல் வேகத்தில் செல் லக்கூடியது. 5 அதிவிரைவு படகுகள் கப்பலில் இருக்கிறனவாம்.

# காலையில் எழுவோம்...

காலைநேரத்தில் தம்பதிகள் உறவில் ஈடுபடுவது ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும் என்கின்றனர் ஆய்வாளர்கள். அதோடு அன்றைய தினம் முழுவதும் உற்சாகத்தை ஏற்படுத்தும் என்று கூறியுள்ளது ஆய்வு முடிவு.

தம்பதியர்கள் உறவில் ஈடுபடுவதற்கு ஏற்ற நேரம் என்பது குறித்து இத்தாலி நாட்டில் உள்ள தம்பதியரிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வு முடிவில் காலையில் உறவில் ஈடுபடுவது ஆரோக்கியமானது என்று கண்டறியப்பட்டது. காலை நேரத்தில் உறவு கொண்டால் அன்றைய தினம் உற்சாகமாக இருக்குமாம்.

காலை நேரத்தில் என்னதான் பரபரப்பு இருந்தாலும், பாலுணர்வை தூண்டும் ஹார்மோன் சுறுசுறுப்பாக இருக்குமாம். எனவே காலை நேரத்தில் உறவில் ஈடுபடுவது ஆரோக்கியத்தோடு உற்சாகசத்தையும் அதிகரிக்கும் என்கின்றார் ஆய்வில் ஈடுபட்ட செக்ஸாலஜிஸ்ட் சூஸி ஹெமான்.

# கடலில் 16 வயது பெண்ணின் சாதனை

நெதர்லாந்தைச் சேர்ந்த லாரா டெக்கர் என்ற 16 வயது பெண் உலகம் முழுவதையும் படகு மூலமாக சுற்றி வந்து சாதனை படைத்துள்ளார். இவர் தனது 14வது வயதில் ஒரு படகு மூலம் தனியாக உலகைச் சுற்றி வர விரும்பினார். அதற்கு நெதர்லாந்து அரசு சம்மதிக்கவில்லை. எனவே அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக நெதர்லாந்து குழந்தைகள் நல மையத்தின் உதவியுடன் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கின் தீர்ப்பு இவருக்கு சாதகமாக அமையவே கடந்த 2010ம் ஆண்டு ஒகஸ்டு 21-ந் திகதி கிப்ரால்டார் என்ற இடத்தில் இருந்து 38 அடி நீள குப்பி என்ற எந்திர படகின் மூலம் தனது பயணத்தைத் தொடங்கினார்.

8 மாதங்கள் கழித்து கரீபியன் கடலில் உள்ள செயின்ட் மார்டினை வந்தடைந்த டெக்கரை அவரது பெற்றோர் உட்பட சுமார் 500 பேர் உற்சாகத்துடன் வரவேற்றனர். தற்போது உலகை தனியாகச் சுற்றி முடித்த இளம் வயது வீராங்கனை என்ற பட்டத்தையும் இவர் பெற்றுள்ளார்.








லொறி, டிபர், ட்ரக்
வாகனங்களுக்கு

லீசிங் சுமை குறைக்கப்பட்டுள்ளது



பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத லொறி, டிபர், ட்ரக் கனரக வாகனங்களை மிக இலகுவான முறையில் குறைந்த வட்டியில் லீசிங் அடிப்படையில் பெற்றுக் கொள்ள சென்ட்ரல் பினான்ஸ் நிறுவனத்திற்கு வாருங்கள்.



சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி


A+ (lka)

உடன் தொடர்புகளுக்கு 0112315215

கொழும்பு (011) 2300555 கண்டி (081) 2227000 அல்லது அருகிலுள்ள சென்ட்ரல் பினான்ஸ் கிளை அலுவலகத்திற்கு வாருங்கள் வெப்.தளம். www.cf.lk & www.cfautomart.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவர்ச்சியான பெண்களைக் கண்டால் ஆண்களுக்கு மாத்திரமா ஈர்ப்பு வரும்? இங்கே ஐந்தறிவுள்ள யானையின் திருவிளையாடலை காணலாம்.

ஐந்தறிவுக் காதலர்கள் தமது அன்பை வெளிப்படுத்தும் காட்சி






சீனாவின் டிராகன் ஆண்டை வரவேற்கும் விதத்தில் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் சீனர்கள் பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டனர். அதில் ஒன்றுதான் இந்த உமிழும் நெருப்பு.

# லண்டன் ஒலிம்பிக் திருவிழா

LONDON 2012



## ஒலிம்பிக் தகவல்

**லண்டன் ஒலிம்பிக் போட்டிகள் ஜுலை 27ஆம் திகதி ஆரம்பமாகி ஆகஸ்ட் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. வலுக்குறைந்தோருக்கான பாராலிம்பிக் போட்டிகள் ஆகஸ்ட் 29ஆம் திகதி ஆரம்பமாகி செப்ரெம்பர் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.**

இந்த ஆண்டு லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளின் முடிவுகளை முன்கூட்டியே நிர்ணயம் செய்வதை தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பிரிட்டனின் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹ்யூ ராபர்ட்ஸன் பிபிசியிடம் தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக் விளையாட்டுகளில் முதல் முறையாக உலகளவில் இந்தப் போட்டிகள் மீது பந்தயங்கள் கட்டப்படுவதை கணகாணிக்க ஒரு சிறப்பு புனாய்வுப் பிரிவு ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிலும் குறிப்பாக ஆசியாவில் நடைபெறும் சட்டவிரோத சூதாட்டச் செயல்பாடுகள்தான் ஒலிம்பிக் போட்டிகளின் நற்பெயருக்கு தீங்கு ஏற்படுத்தக்கூடிய மிகப்பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது என்றும் ராபர்ட்ஸன் கூறியுள்ளார்.

உலகளவில் சட்டவிரோத சூதாட்டத் தொழிலில் ஆண்டொன்றுக்கு 140 பில்லியன் அமெரிக்க டாலர்கள் பணம் கைமாறப்படுகின்றது என்று சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் தெரிவிக்கிறது. மேலும் ஊக்க மருந்து பயன்பாட்டைவிட சர்வதேச விளையாட்டுகளுக்கு கேடு ஏற்படுத்தக் கூடிய வல்லமை சட்டவிரோத சூதாட்டத் தொழிலுக்கு உள்ளது என்றும் ஐ ஓ சி சுட்டிக்காட்டியுள்ளது.

எனவேதான் இதுவரை இல்லாத வகையில், சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் போட்டிகளின் மீது பந்தயங்கள் கட்டப்படும்போது அவற்றை கண்காணிக்க ஒரு பிரிவு ஏற்படுத்தப்படுவதாக பிரிட்டனின் விளையாட்டுத்துறை அமைச்சர் கூறுகிறார்.

### கடும் கண்காணிப்பு

சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தின் தலைவர் ழாக் ரக்கர் இது தொடர்பில் ஒரு உயர்மட்ட செயலணியை அமைத்துள்ளதாகவும், அதில் தானும் ஒரு அங்கமாக இருப்பதாகவும் ஹ்யூ ராபர்ட்ஸன் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிய கிரிக்கெட் வீரர்களை இப்படியான விடயம் தொடர்பில் நீதிமன்றத்தின் முன் நிறுத்திய அனுபவமும் தங்களுக்கு உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இப்போட்டிகளின் போது சட்டவிரோதமான வகையில் சூதாட்டம் இடம்பெறுவதை தடுக்க பிரிட்டனின் மாநகர காவல்துறையினர், சர்வதேச போலீஸ் அமைப்பான இண்டர்போலுடன் சேர்ந்து செயல்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒலிம்பிக் போட்டிகளின் போது, ஒரு ஆட்டத்தின் மீது முழுமையாக பந்தயம் கட்டப்படுவதற்கு அப்பால், இடையிடையே ஒரு குறிப்பிட்ட சமயத்தில் போட்டி எப்படி இருக்கும் என்பது தொடர்பில் அதிக அளவில் பணம் பந்தயமாக கட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், போட்டியை நடத்தும் ஏற்பாட்டாளர்கள் மிகவும் விழிப்பாக இருக்க நேரிடும்.







ஜனவரி 21ம் திகதி முதல் தினமும் யாழ்ப்பாணத்திற்கு இரு சேவைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| EXV 711 | Dep RMA | - | 0700 hrs | Arr JAF | - | 0815 hrs |
| EXV 712 | Dep JAF | - | 0845 hrs | Arr RMA | - | 1000 hrs |
| EXV 713 | Dep RMA | - | 1615 hrs | Arr JAF | - | 1730 hrs |
| EXV 714 | Dep JAF | - | 1800 hrs | Arr RMA | - | 1900 hrs. |

5th Elephant

✈ இணையத்தளத்தின் ஊடாக பதிவு செய்யலாம்

✈ வாடகைச் சேவைகளையும் பெறலாம்

Expo Aviation Pvt Ltd, 6 Joseph Lane, Colombo 4.
Tel: 2555156-9 / 2555167-8. Email: reservations@expoavi.com
Website: www.expoavi.com

No. 14F, Palaly Road, Thirunelvely, Jaffna.
Tel: 021 – 2223891 / 2226297 E-mail: Jaffna@expoavi.com

EXPOAIR
your friend in the skies...





பிரான்சின் மிகப் பெரிய வைத்தியசாலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. 110 000 சதுர மீற்றர்கள் விஸ்தீரனம் கொண்ட இந்த வைத்திய சாலை 37 வைத்தியப் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. 130 வைத்திய ஆலோசனை (Consultations) மண்டபங்களை கொண்டுள்ளது.


இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், [illegible] ஆம் இலக்கத்தில் உள்ள [illegible] ஸ்தாபனத்தினால் 2012, ஜனவரி 29 ஆம் திகதி வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org